ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6 மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7	ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஐப்பசி௴ 9௳ (25—10—1931)	மலர் 26

பலமுள்ளவீரபுருடனாக,

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்டம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்

200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இன்சின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இன்சின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலின் மோட்டார்களிலும். 30 வருஷ அனுபவமுள்ள ரா. கன்னியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அநுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் ஏற்படும் தவறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இது வரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நுட்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இன்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-

குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி.யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,

புதுவை முரசு,

புதுச்சேரி, F. இந்தியா.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

லைப் இன்ஷியூரன்ஸ்

LIFE INSURANCE.

ஐயா,

சேமிப்பது 'செலவு' அன்று. ஒவ்வொருவரும் தன் சம்பாத்தியத்தில் தள்ளாத வயதிற்கென்றும் எதிர்பாராத சம்பவங்களுக்கென்றும் கொஞ்சம் திரவியம் அப்புறப்படுத்துவது இன்றியமையாதது. அப்படி அப்புறப்படுத்திய தொகை வீடுவாசல், வியாபாரம், நகை, சீட்டு, பாங்கு டிபாசிட் என பல ரூபமாயிருக்கலாம். இவற்றிலுள்ள பிரதிகூலங்கள் லைப் இன்ஷ்யூரன்ஸிலில்லை. மாதம் ரூ 3 கட்ட ஒப்புக் கொண்டு இரண்டாவது மாதத்திலேயே காலகதியடைந்தாலும் ரூ. 2,000 கொடுக்கிறார்களே. அதில் ஏதாவது சூதாட்டம் இருக்குமாவென்று சந்தேகித்தால் அதன் உண்மையும் ரகசியமும் பின்வரும் உதாரணத்தால் விளங்கும். ஒரு சிறிய சங்கத்தில் பலவித வயதுள்ள நூறுபேர் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஒவ்வொருவரும் மாதம் ஒரு ரூபாய் சந்தா கட்டுவதாக இருக்கட்டும் வருஷத்தில் ரூ. 1,200 சேருகிறது. இதில் செலவுபோக ரூபாய் ஆயிரமாவது மிச்சமாகிறது. இந்த ரூ. 1,000மும் அந்த வருஷத்தில் இறந்தவரின் மனைவிக்குக் கொடுப்பதென்றால் இதில் சூது, மோசம் ஒன்றுமில்லை. பிறப்புடனே இறப்பும் ஏற்பட்டிருக்கிறது. நூற்றுக்கிருந்தாலும் கூற்றுக்கிரை, எல்லோரும் முதல் வருஷத்தில் இறக்கப்போவதில்லை. ஆனால் எல்லோரும் நூறுவயது வரைக்கும் இருக்கப்போவதில்லை. அனுபோகத்தில் நாம் பார்ப்பது சிலர் அற்பாயுசாயும், சிலர் தீர்க்காயுசாயும் இருக்கிறார்கள். எல்லோரும் முந்தியோ பிந்தியோ உயிர் நீப்பது நிச்சயமானாலும் எப்பொழுது அந்த நிச்சயசம்பவம் ஏற்படுமென்று தெரியாது. ஆனால் வருஷாவருஷம் சராசரி ஒருவர் இறப்பது நிச்சயம், அனுபோகம். ஆகவே இறப்பவர் கொடுப்பது மாதம் ரூ. 1 ஆகிய எளிய தொகை. அவர் குடும்பம் அடைவதோ ரூ 1,000. இதுதான் கூட்டுறவினால் அடையக்கூடிய பயன். இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கே 'லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள்' என்று பெயர்.

அவற்றுள் 56 வருஷங்களுக்கு முன் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு இந்தியர்களாலேயே நடத்தப்பட்டு கவர்ன்மெண்டின் ஆதரவின் கீழிருந்து இதுவரை அவ்வாறு 12 கோடி ரூபாய் குடும்பங்களுக்குக் கொடுத்துதவியிருக்கும் கம்பெனிக்கே 'ஓரியண்டல் கவர்ன்மெண்ட் ஸெக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி' என்று பெயர். பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், இந்தியா, பர்மா, இலங்கை, மலேய தேசங்கள் முழுதும் முக்கியமான இடங்களில் கிளை ஆபீஸுகளாவது, ஏஜென்ஸிகளாவது, பிரதிநிதிகளாவது கொண்டிருக்கிறது. வருமானத்தில் 100-க்கு 80 பாகம் சர்க்கார் பத்திரங்களாக மாற்றி பம்பாய் அபிஷியல் டிரஸ்டியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன் லாபத்தில் 100-க்கு 90 பாகம் சேர்ந்திருக்கும் மெம்பர்களாகிய பாலிஸிதாரர்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கப்படுகிறது. பாலிஸிதாரர்களாவது பிரதிநிதிகளாவது இல்லாத இடமில்லை. இவர்களில் எவரைக்கேட்டாலும் விபரங்கள் கிடைக்கும். அல்லது தென் ஜில்லா வாசிகளின் சௌகரியத்தின்பொருட்டு திருச்சினாப்பள்ளியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கீழ்கண்ட கிளை ஆபீசுக்கு எழுதினால் உங்களுக்கு வேண்டிய தகவல்களும், ஒத்தாசையும், மறு தபாலில் அடையலாம்.

இன்ஷியூரன்ஸ் அவசியமில்லை என்றாவது, அதற்கு இப்போது அவசரமில்லையென்றாவது புறக்கணிப்பீரானால் அதனால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களை தீரயோசித்துப்பாருங்கள்.

பிராஞ்சு காரியதரிசி

ஓரியண்டல் கவர்ன்மெண்ட் செக்யூராட்டி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

10-சின்னக்கடை வீதி, தெப்பக்குளம் போஸ்டு
திருச்சினாப்பள்ளி.

"குடி அரசு" ஏஜண்டுகள்.

N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட், முசிரி.
*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.
*சால்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்
*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.
*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாட்சிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.
T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசதெரு, காஞ்சீபுரம்.
A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வாராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.
A. R. M. சுந்திர பாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.
*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.
*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.
C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant
S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
துறையூர்.
முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.
P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.
A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பம்பலபிட்டியா,
கொழும்பு.
எட்வர்ட்பால்
திருமலாபுரம்
செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.
*S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்
M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்
A. M. பாலசாமி
குமாரசாமி செட்டி வீதி
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதாஸ்டோர் மேலவீதி
சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்
மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,
கொழும்பு.
S. M. மீராமொய்தீன்
80—யார்க் வீதி, போர்ட்
K. கணபதி பிள்ளை, செட்டித்,
தெரு, பருத்தித்துறை.
கோட்டார்.
S. பூதலிங்கம், காரியதரிசி
சுயமரியாதை வாசிப்புசாலை
சாத்தூர்.
எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.
ஸ்ரீரங்கம்.
எம். கோவிந்தசாமி,
கீழ் அடையவழஞ்சன் வீதி.
திருச்செங்கோடு.
எஸ். கே. வரதராஜன்,
ஆனந்த நிலையம்.
பழனி.
எஸ். என். அப்பன்,
சன்மார்க்கன், ஆபீஸ்.

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்புகளும் புஸ்தகங்களும் கிடைக்கும்.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்கு எழுதவும்.

Y X
C/o குடி அரசு ஈரோடு.

கம்யூனிஸம்.

சோஷியலிஸம்.

சமதர்ம அறிக்கை.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

தொழில் முறைகளில் ஏற்பட்ட புதியபுதிய மாறுதல்களின் பயனாய் ஒவ்வொரு குடும்ப தலைவனுக்கும் சொந்தமாய் ஏற்பட்டிருந்த தனித்தனி தொழில் பட்டறைகள் மாறி, முதலாளிகளுக்குச்சொந்தமான பெரியபெரிய இயந்திர தொழில் சாலைகள் ஏற்பட்டன. இப்படி ஏற்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்ய ஆயிரக்கணக்கான வேலையாட்களை திரட்டி ஒரு சேனைபோல் தொழில் பழக்கி வைக்கப்பட்டது.

ஒரு சேனையில் படிப்படியாக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டிருப்பது போல் தொழிலாளர்களை அடக்கி ஆளவும் படிப்படியாய் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் தொழிலாளர்கள் முதலாளி வகுப்பாருக்கும், அம்முதலாளி வகுப்பார்கள் மூலம் ஏற்பட்டிருக்கும் அரசாங்கத்திற்கும் அடிமைப் பட்டிருப்பதோடு, தங்களுக்கு மேலதிகாரிகளாய் நியமிக்கப் பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அந்த உத்தியோகஸ்தர்களை நடாத்தும் எஜமானனாகிய முதலாளிக்கும், அந்த முதலாளியால் ஏற்படுத்தப்பட்ட இயந்திரங்களுக்கும் ஒவ்வொரு நிமிஷமும் அடிமைப் பட்டு உழல வேண்டி இருக்கிறது. இப்படிப் பட்ட அடிமை வாழ்வின் நோக்கம் முதலாளிகளுக்கு லாபம் சம்பாதித்துக் கொடுப்பது தவிர வேறு ஒன்றுமே இல்லை என்று வெளிப் படையாகத் தெரியும் பொழுது, தொழிலாளிகளின் வாழ்க்கை சகிக்க வொண்ணாத அளவு கஷ்டமும் துயரமும் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

நவீன தொழில் முறைகளின் பயனாய் வேலையாளர்களுக்கு தொழில் பயிற்சி யென்பது கூட அவசியமில்லாமல், எந்தத் தொழிற்சாலையிலும் யாரும் எடுத்த எடுப்பில் தொழில் செய்ய தகுதியுள்ளமாதிரியாக இயந்திரத் தொழில் முறைகள் ஏற்பட்டு விட்டபடியால் பெண்களும், குழந்தைகளும் மிகச் சொற்ப கூலிக்கு தொழிலாளிகளாக்கப்பட்டார்கள்.

இதன் பயனாய்தொழிலாளிகள்என்கின்ற விஷயத்தில்பெண்என்றஇரக்கமோ குழந்தை என்ற பரிதாபமோ கூட காட்டப்படாமல் போய்விட்டது.

குழந்தைகளும், பெண்களும் சாமான்கள் செய்யப் படுவதற்கு மலிவாகக் கிடைக்கக் கூடிய ஒரு ஆயுதமென்றே கருதப்பட்டு விட்டது.

முதலாளி கூட்டத்தைச் சேர்ந்தவரான இயந்திரசாலை சொந்தக்காரர்களுக்கு வேலையாளர்கள் நாள் முழுவதும் உழைத்து அவர்களிடமிருந்து சொற்ப கூலியே பெறுகின்றார்கள் என்றாலும், அந்த சொற்ப கூலியையும் அந்த வேலைக்காரர்களிடமிருந்து தட்டிப் பிடுங்குவதற்கு என்று முதலாளி கூட்டத்தின் மற்றொரு பிரிவினராகிய குடக்கூலி வீட்டு சொந்தக்காரனும், சில்லரை சாமான் வியாபாரியும், சிறு வட்டிக் கடைக்காரனும், அவ்வேலையாளிகளை சுற்றிக் கொள்ளுகின்றார்கள்,

பெரிய முதலாளிகளின் பெருக்கத்தால் சிறு சிறு மூலதனம் வைத்து தொழில் நடாத்தும் சிறு முதலாளிகளாகிய சில்லரைக்கடை வியாபாரிகளும் சிறு சிறு தொழிற்சாலைகள் (கைப்பட்டறைகள்) மூலம் சாமான்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்பவர்களும், கொஞ்ச பூமியை வைத்துக்கொண்டு விவசாயம் செய்யும் குடியானவர்களும் நாளடைவில் க்ஷீணமடைந்து வேலையாளர்கள் கூட்டத்தையே சேர்ந்துவிடுகிறார்கள்.

இதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது, சிறு முதலை வைத்து செய்யப்படும் வியாபாரம் ஏராளம் பெருத்த முதலைவைத்து செய்யப்படும் வியாபாரத்துடன் போட்டி போடமுடிவதில்லை. இரண்டாவது, இயந்திர முறைகள் வலுத்துவிட்டதினால் சிறுசிறு தொழிற்சாலைகளை வைத்து வேலைசெய்து வந்த சிறு பட்டறை முதலாளிகளின் தொழில் அனுபவம் பயனில்லாமல் போய் அவர்கள் கஷ்டப்படவேண்டியவர்களானார்கள். மற்ற வகுப்பிலிருப்பவர்களும் இயந்திரசாலை தொழிலாளர்கள் கூட்டத்திலேயே சேர்ந்துதீர வேண்டியதாய் போய்விட்டதால் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை அதிகப்பட்டுக்கொண்டு வந்தது.

தொழிலாளர்கள் என்கின்ற வகுப்பு தோன்றிய காலத்தில் இருந்து அதிலும்பல மாறுதல்கள் தோன்றிக் கொண்டே வருகின்றன.

ஆதியில் இருந்தே தொழிலாளி வகுப்புக்கும், முதலாளி வகுப்புக்கும் ஒரு போராட்டம் நடந்துகொண்டே வருகின்றது. இப்போராட்டம் முதலில் ஒவ்வொரு தொழிலாளியும் தன்னைப்பொறுத்த வரையில் மாத்திரம் தன்தன் சொந்தக்காரியத்திற்கு என்று தனித்தனியாகவே முதலாளிகளுடன் போராடவேண்டியிருந்தது. அதன் பிறகு ஒரே தொழில் சாலையில் உள்ள எல்லா தொழிலாளிகளும் ஒன்று சேர்ந்து தங்கள் எல்லோருடைய நலத்துக்கும் அந்த தொழிற்சாலையைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட முதலாளியோடு போராடவேண்டியிருந்தது. அதன் பிறகு ஒரே மாதிரி சாமான்களை உற்பத்தி செய்யும்படியான பல தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள் எல்லாம் ஒன்றுசேரவும், ஒரே ஊரில் ஏற்பட்டிருக்கும் பல தொழிலாளிகள் ஒன்றுசேரவும் முடிந்து தொழிற்சாலைகளின் சொந்தக்கார முதலாளிகளுடன் போராடவேண்டியதாயிற்று.

இந்த நிலைமை ஏற்பட்ட பிறகும் தொழிலாளிகள் தங்களை அடக்கி ஆளுவது முதலாளி தத்துவந்தான் என்பதை உணராமல் தாங்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள்தான் தங்களுக்கு எதிரியாயிருக்கின்றதென்று கருதி இயந்திரங்களை உடையதும் அன்னிய நாட்டிலிருந்து வரவழைக்கப்படும் சாமான்கள் தான் தங்களால் உற்பத்தி செய்யப்படும் சாமான்களுடன் போட்டிபோடுவதாய்க் கருதி, அவைகளை வரவழைக்காமல் செய்வதும், அவற்றை அழிப்பதும், தொழிற்சாலைகளை நெருப்புவைத்துக் கொளுத்துவதும், முதலிய பலாத்கார, பஹிஷ்கார முறைகளைக் கொண்டு, ஏற்கனவே இயந்திரங்கள் கண்டுபிடிப்பதற்கு முன்தாங்கள் இருந்ததான பழைய நிலைமையை மறுபடியும் உண்டாக்க முயற்சித்தார்கள். (அதாவது இயந்திர சகாயமில்லாமல் கையினாலேயே செய்யும் முறையை) இந்தக்காலத்தில் தொழிலாளர்கள் தங்களுக்குள் ஒரு வித ஒற்றுமை என்பதில்லாமலும், தாங்களே ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டும் ஒவ்வொரு தேசத்திலும் தனித்தனியான பிரிவினர்களாய் சிதறிக்கிடந்தார்கள்.

இந்த நிலைமையில் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தில் சேர்ந்து, ஐக்கியமாக வாழமுடிந்தது என்றால், அது அவர்களுடைய சொந்த முயற்சியால் தான் என்று சொல்லமுடியாது. மற்றதென்னவென்றால், அவர்களிடத்தில் வேலைவாங்கும் முதலாளிகள் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து, தொழிலாளர்களை ஒன்றுசேர்த்ததால் ஏற்பட்டதாகும். அக்காலத்தில் முதலாளிக் கூட்டம் தன்னுடைய சுயநலத்தை உத்தேசித்து, இராஜீபதுரையில்ஏதேச்சாதிகாரம்செலுத்தி வந்த அரசர்களுடனும், ஜமீன்தாரர்களுடனும், மற்றும் வியாபாரத் துறையில் ஈடுபட்டிருந்த பிரபுக்களுடனும், மற்றும் சில்லரை செல்வவான்களுடனும் அடிக்கடி சச்சரவிட்டு சண்டைபோட நேர்ந்தது. இதற்காக முதலாளிகள் தங்கள் தங்களிடம் வேலை செய்யும் தொழிலாளிகளை உபயோகப்படுத்திக் கொள்ள நேர்ந்ததால், தொழிலாளர்கள் தங்கள்விரோதிகளானமுதலாளிகளுக்கு அனுகூலமாகமுதலாளிகளது விரோதிகளானகூட்டத்தார்களுடன் போராட வேண்டியவர்களானார்கள். ஆகையால், இந்தக்காலத்தில் தொழிலாளிகளின் இயக்கமென்பதெல்லாம் முதலாளிகளின் கைக்குள்ளாகவே அடங்கி இருந்தது.

அப்பொழுது தொழிலாளிகளுக்கு கிடைத்த வெற்றிகளினாலெல்லாம் முதலாளிமார்களே தான் பயன் அடைந்தார்கள். ஆனால், நாளடைவில் தொழில் அபிவிருத்தியின் காரணமாக தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்ததோடுகூட, அவர்கள் ஒன்றுகூடி வசிக்கவேண்டியதாயும் ஏற்பட்டதால், தொழிலாளிகளில் பலர் ஒன்றாயிருந்து பழகவும், அதன் மூலமாய் தங்களுடைய பலம் அதிகரிப்பதையும் உணர்ந்தார்கள்.

இயந்திரங்களின் உபயோகத்தால் ஏற்கனவே தொழிலாளிகளுக்குள் ஏற்பட்டிருந்த தாரதரங்களும், உயர்வுதாழ்வுகளும் மறைந்துபோயின. எல்லா தொழிற் சாலைகளிலும் கொடுக்கப்படும் கூலி வீதங்கள் ஒரேமாதிரியான குறைந்த திட்டப்படியே கொடுக்கப்பட்டு வந்தன. முதலாளிகள் தங்களுக்குள் ஒருவருக் கொருவர் போட்டி போடுவதன் மூலம் ஏற்படும் வியாபார நெருக்கடியில், தொழிலாளிகளின் சம்பளங்களில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. இயந்திரங்களில் அடிக்கடி புதிய அபிவிர்த்திகள் தோன்றிக்கொண்டே இருந்தபடியால், தொழிலாளிகளுக்கு ஒருவித நிம்மதி இல்லாமல் இயந்திர முற்போக்கால் எப்பொழுது தங்கள் வேலைகள் போய்விடுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதாயிற்று.

ஆகையால், இந்தக்காலத்தில் ஏற்பட்ட முதலாளி--தொழிலாளி சச்சரவானது வகுப்புச்சண்டையாகவே ஏற்பட்டுவிட்டது. இதன் பிறகு தான் தொழிலாளிகள் தங்கள் இடையே வேலையாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலம் தங்கள் முதலாளிகளை கட்டுப்பாடாக எதிர்க்க ஆரம்பித்தார்கள். அந்த சங்கங்களின் நோக்கமெல்லாம் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக நடந்து, தங்களுடைய கூலியை உயர்த்திக் கொள்ளவும், அதற்காக ஏற்படும் போராட்டத்திற்கு என்று முன்னெச்சரிக்கையான பல ஏற்பாடுகளை செய்து கொள்ளவுமே யாகும்.

சிற்சில சமயங்களில் முதலாளி-தொழிலாளி சச்சரவுகளானது பலாத்காரமாகி, அடிதடி கலகங்களாகவும் முடிந்தன.

இந்தப் போராட்டங்களில் சில சமயம் தொழிலாளிகளுக்கு வெற்றி கிடைத்தபோதிலும் அந்த வெற்றி நிலைபெற்றிருக்கவில்லை.

இந்தப்போராட்டங்களின் பயன் அந்தந்த சமயத்தில் ஏற்படும் கூலி உயர்வுகள் முதலியவைகளைப் பற்றியவையே அல்ல. ஆனால், போராட்டங்களின் மூலம் தொழிலாளிகளுக்குள் ஏற்பட்ட ஒற்றுமையே நிரந்தரமான ஒரு பலனை அளித்துவந்தது.

(தொடரும்)

"ஜாதியும் வேண்டாம், சமயமும் வேண்டாம், வயிர் நிறைந்தால்போதும்." பொதுவுடமையோர் முழக்கம்.

பொதுவுடைமையும், ஜாதியும்.

(இனிவரும் 'பொதுவுடைமை விளக்கம்'' என்ற நூலின் ஓர் அத்தியாயம்.)

(தோழர் ம. சிங்காரவேலு B. A. B L,)

ஜாதி வரம்பு, மிருகத்தன்மையிலிருப்பவர்க்குள் வழங்கி வரும் சமூக வித்தியாசமாகும். இந்த வித்தியாசம், நமது இந்திய தேசத்தைத்தவிற, வேறெந்த உலகிலும் காண்பதரிது. இது, இந்திய தேசத்திலொன்றிலேயே தோன்றியுள்ளது. காலாகால முதல், இக்கொடிய தீமையை யொழிக்கவேண்டி, பல ஞானிகள் போதித்துவந்தும், இது நமது நாட்டை விட்டு வொழிந்த பாடில்லை. ஜாதியற்ற அரசுகள் பல ஆண்டுகளாக, நம்மை ஆண்டு வந்தும், இது தொலையவில்லை. மகமதியர், நமது நாட்டை, 1000 வருஷங்களாக ஆண்டும், ஜாதி நிலைத்தே வருகிறது. பிரிட்டிஷார், 250 வருஷங்களாக நமது நாட்டை கைப்பற்றி ஆண்டும் ஜாதி தொலைவதாகக்காணோம்! இந்த மிருகத்தன்மை வாய்ந்த வரம்பை சுட்டிக்காட்டிக் கொண்டே ஆங்கில அரசு ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. ஜாதியை வளர்க்க, "சுத்தி'' என்றும், "சங்கதம்'' என்றும், புதிய புதிய ஜாதி மத ஸ்தாபனங்கள் இன்றைக்கும் முளைத்துக்கொண்டே வருகிறது. ஒரு பக்கம் வர்ணாச்சிரமத்தை ஆதரித்துக்கொண்டு இன்னொரு பக்கம் "தீண்டாமை யொழிக'' வென்று, காந்தியாரும் பிரசங்கம் செய்து வருகின்றார். இதிலும் பயனில்லை. பூர்வ காலங்களில், புத்தர் முதலிய பெரியோர் ஜாதிவித்தியாசத்தைக்கண்டித்துவந்தும், அது நம்மைத்தொடர்ந்தே வருகிறது. ஆதியில் ஜாதி இல்லாத தேசங்களில் நமது ஜாதி பிராமணர்கள் நுழைந்த மாத்திரத்தில், ஜாதி உற்பத்தியாய் விட்டது. இதற்கு, மாஜி பூரையும், ஸையாமையும் திருஷ்டாந்தங்களாகக் கொள்ளலாம். நமது இந்து மத சமூகத்தோற்றத்தின் ஆற்றலே ஆற்றல்! பற்பல மதங்களால், நமது நாடு, சிதறுண்டதுடன், ஜாதிப்பிரிவினைகளாலும் சிதறுண்டது. இந்திய நாட்டில், பல ஜாதிகள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு எண்ணிக்கொண்டு வந்ததினால், சுய அரசுக்கு இடம் கொடாமல், பிரதேசங்களுக்குட்பட நேரிட்டது. சமூக சீர்திருத்தமென்று பல வருஷங்களாக தேசத்திலுள்ள பெரியோர்கள் சொல்லிக்கொண்டுவந்தும், அவர்களுக்குள்ளாகவே, ஜாதி யொழிந்தபாடில்லை! ஜாதி பிரிவினையில் உண்டாகிய "தீண்டாமை'' என்ற இந்து சமூகத் திட்டத்தை ஒழிக்க, தேசிய காங்கிரசும் பாடுபட்டு வந்தும், "தீண்டாமை யொழிக'' என்ற கூச்சல், வாய்ச்சொல் அளவிலேயே நின்று விட்டது. இவ்விதமாக, பல ஆண்டுகள் தோறும், அழிவுறாமல், ஸ்தம்பித்து வரும், நமது இந்து சமூக ஸ்தாபனங்களில் ஒன்றாகிய ஜாதிக்குக் காரணமென்ன? உண்மையில் இதனை அழிக்க யாரும் முயலவில்லை என்பதுதான் காரணம். 'பாலுக்கும் காவல், பூனைக்கும்தோழன்'' என்ற முதுமொழியின்படி ஜாதி சீர்திருத்தக்காரர்களெவரும் உண்மையில் ஜாதியை ஒருவாறாக ஒருபக்கம் ஆதரித்தும், மற்றொருபக்கம் கண்டித்தும் வந்ததாகத்தான் தெரிகிறது. ஜாதியைப்பற்றி "பகவத்கீதை''யில் சொல்லியுள்ளதை எடுத்துக்கொள்ளுவோம். "தன்னிடத்தில் ஜாதி மத வித்தியாசங்கள் இல்லை என்று சொல்லிக்கொண்டே, அந்தந்த ஜாதியில் பிறந்தவன், அதனதன் தர்மப்படி நடக்க வேண்டு''மென்றே கட்டாயப்படுத்திய ஸ்ரீ கிருஷ்ணனை என்னவென்று மதிப்பது? வேதாந்த போதகாகிய சங்கராச்சாரியாரும், இவ்வித இருபிளப்புக்கொள்கையையே, வற்புறுத்தியுள்ளதைக்காணலாம்! அவரை பின் தொடர்ந்த வேதாந்திகளும், அவர் சொன்ன சாக்குப்போக்கை ஆதாரமாகக்கொண்டு ஜாதியை வளர்த்து வருகின்றனர். இன்றைக்கும் சங்காராச்சாரியார் மடங்கள் யாவும், பிராமண மடங்களாக இருப்பதைக்காணலாம். "சர்வம்பிரம்மமயம்'' என்ற வேதவாக்கியத்தின் போக்கை இதனால் நன்கு அறியலாம். இந்த வஞ்சனைக்கொள்கையை, மகாத்மா காந்தியினிடமும் இன்றும் காணலாம். அவரைப்பின் தொடர்ந்துள்ள பல்லாயிரவர்களிலும் இந்த மோசத்தைக்காணலாம். காந்தீயத்தைப்பின் பற்றும் பிராமணர்கள் ஒருவரேனும் ஜாதியை முற்றிலும் கை விட்டதாகத்தெரியவில்லை. இவர்களில் எவரேனும் தங்கள் பூணூலைக் கழற்றி எறிந்ததுண்டோ? பிரதம சீடராகிய சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தனது பூணூலைக்கழற்றி எறியாமல், "தீண்டாமை ஒழிக'' வென பாராயணம் செய்வதும், இந்த ஜாதியின் மகத்துவமே! இவ்விதமாக, ஜாதியைத்தழுவிக்கொண்டு, "ஜாதி யொழிக, யொழிக'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் நமது வஞ்சனை மனப்பான்மையால் தான் இக்கொடிய ஜாதி வரம்பு நமது ஜன சமூகத்தில் வேரூன்றி வருகிறது. அரசியல் துறையிலும், இவ்வித வஞ்சனை மனப்பான்மையுடன் உழைப்பதால்தான் எதுவும் கைகூடி வரவில்லை. ஒத்துழையாமை என்று சொல்லிக்கொண்டு ஒத்துழைக்கும் பான்மையையும் இந்த மனப்பான்மையின் தோஷமே இவ்வுலகில் நடத்தைக்கும், கொள்கைக்கும் முரண்பட்டிருப்பதனாலேயே நமது வாழ்வு முழுமையும் மோசமாகவே இருந்து வருகிறது.

நமது நாட்டில் மூன்று முதன்மையான தீமைகள் பரவியுள்ளதைக் காணலாம். இம் மூன்று தீமைகளும் இந்தியதேச முழுமையும் குடிகொண்டிருக்கின்றன. அவையாவன:—மதபேதம், ஜாதிபேதம், பொருளாதார பேதம். மற்ற தேசத்தில்பொருளாதாரபேதமொன்றே காணப்படும். இந்தியதேசத்தில் மாத்திரம் இம்மூன்றும் நிலைபெற்றுள்ளது. ஆதலின் இந்திய தேசத்தில்பொருளாதார வித்தியாசத்தைமாத்திரம் போக்குவது போதா. இந்தியதேசத்தில் பொருளாதார வித்தியாசம் ஒழிவதோடு, ஜாதிமத வித்தியாசங்களும் ஒழியவேண்டியது மிக்க அவசியமாகும்.

பல ஆண்டுகளாக, பல பெரியோர் மத சீர்திருத்தத்தை மாத்திரம் முயற்சித்து வந்தனர். அது பலிக்கவில்லை. உண்மையைத் தவிர வேறு எந்த மதமும் இல்லை என்றார்கள். இதனால், மதமும் ஒழியவில்லை, ஜாதியும் ஒழியவில்லை. அகில தேசசகோதரத்துவத்தை கையாளவேண்டுமென்றார்கள். ஆனால் மதபேதமும், ஜாதிபேதமும், பொருளாதார பேதத்தோடு நிலைத்தே வருகின்றன. சிலர் பொருளாதாரபேத மொழிந்தால் மத பேதமும், ஜாதிபேதமும் தொலைந்து விடுமென்கின்றார்கள். ஆனால், இது மாத்திரம் போதாதெனத் தோன்றுகின்றது. ஏனெனில், நமது தேசம் மற்ற தேசங்களை விட விசித்திரமானதோர் தேசமாகும். எங்குமில்லாத சமூகவித்தியாசங்கள் இங்கு தோன்றியுள்ளன. ஆதலின் பொருளாதார வித்தியாசத்தை மாத்திரம் போக்குவது போதாதெனத் தோன்றுகின்றது. மதவித்தியாசத்தையும், ஜாதி வித்தியாசத்தையும் கூட போக்கத்தான் வேண்டும். தொழிலாளர் முதலாளருடன் சமத்துவம்பெற வேண்டுமானால், ஜாதி, மத, பொருளாதார வித்தியாசங்களனைத்தையும் பற்றற வொழித்தல் வேண்டுமென அறிக.

இந்திய நாட்டில், இம்மூன்று வித்தியாசங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டே வருகின்றன. உயர்ந்த ஜாதியில் பலர், தனவந்தர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் ஜாதியைக் கைவிடார். தாழ்ந்த ஜாதியில் பலர் ஏழைகளாகவே இருந்து வருகின்றார்கள். தரித்திரத்தில் இருப்பவர்களும், பொருளாதார வுயர்வில் இருப்பவர்களுடைய சூழ்ச்சியில் அகப்பட்டுக்கொண்டு, மதத்தையும், ஜாதியையும் கைவிடார். மகமதியர்களில் பலர் ஏழைகளே. இவர்களைவிட இந்துக்களில் பலர் செல்வாக்குடையவர்களே. இவர்களில் பொருளாதார பேதம் சமத்துவமடைந்தாலும், மதபேதமும், ஜாதிபேதமும் வொழியா. "கொடிது, கொடிது, மதப்பற்றும், ஜாதிப்பற்று''மென்றார் பெரியோர். ஆதலின், நமது நாட்டுத்தொழிலாளர், அகில தேசத்தொழிலாளருடன் சமத்துவம் பெறவேண்டுமானால், ஜாதியையும், மதத்தையும் முன்னரே வொழித்தல் வேண்டும். தண்ணீருடன், எண்ணெய் கலப்புறாத வண்ணம், ஜாதி மதமற்ற தொழிலாளருடன், ஜாதி மதத்தொழிலாளர் கலப்பது கஷ்டம். அகில தேசத் தொழிலாளருடன் நமது தேசத்தொழிலாளர்கள் கலப்புறாமல், தங்கள்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

இஸ்லாம் தேசத்தில் சுயமரியாதை தாண்டவம்.

மதகுருவும், மதப்பள்ளிக்கூடமும் இல்லை, மத சட்டமும் கோஷாவும் இல்லை.

ஆணும், பெண்ணும் ஒன்றாயிருந்து படிக்கலாம்.

(பாளையங்கோட்டை வக்கீல் R. சுப்பையா)

இந்தியநாடு ஆரியக்கொடுமை வாய்ப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அடிமைத்தன்மையில் ஆழ்ந்திருப்பதினின்றும் தன்னை விடுவிக்க வேண்டின் அது நமது புனித சுயமரியாதை இயக்கத்தைத் தழுவுவதால் மட்டுமேயன்றி வேறொன்றினாலுமியலாதென்பதை துருக்கியின் சென்ற ஒன்பது வருட சரித்திரத்திலிருந்தே நன்கறியலாம்.

துருக்கியர் ஏகாதிபத்தியம்.

துருக்கியர் ஆதியில் மத்திய ஆசியாவில் இந்திய சீன எல்லைப்புற தேசமாய துருக்கிஸ்தானத்தைச் சார்ந்தவர். இவர்கள் சீக்கியர், கூர்க்கர், பட்டாணியர் போன்று சண்டைசெய்யும் ஆற்றலில் உலகத்திலேயே முதன்மை பெற்றவர். அத்தகைய ஆற்றல் வாய்ந்த துருக்கியர் தமது பூர்வீக மதமாகிய தூரேனிய மதத்தை விட்டு, அரேபியாவில் புதிதாய் மகமது நபியால்தோற்றுவிக்கப் பட்ட இஸ்லாம் மதத்தில் சேர்ந்து, அநேக தேசங்களை ஜயித்து, இறுதியாக ஐரோப்பாவில் அக்காலம் மிக உன்னத நிலைமையிலிருந்த கிழக்கு ரோமான் ஏகாதிபத்தியத்தின் (*Eastern Rcman Empire*) தலைநகரான கான்ஸ்டாண்டி நோப்பிளைத் தீவிரமாய்ப் போர்புரிந்து கைப்பற்றி, அதன் இயற்கையமைப்பின் மேம்பாட்டினால் அதனையே தமது தலைநகரமாக்கி, அத்தேசத்திற்குத் துருக்கியென்று பெயர் கொடுத்து, அதற்கு முன்னும் பின்னும் தம்மாற் கைப்பற்றப்பட்ட தேசங்களை அரசாண்டு வந்தனர். அக்காலத்திலிவர்களது பெயரைக்கேட்ட மாத்திரத்தில் நடுங்காத ஐரோப்பிய தேசத்தவரிலர். கான்ஸ்டாண்டி நோப்பிளிலுள்ள மிக அழகான செயின்ட் சோமயாஎன்னும் கிறிஸ்துவக்கோயிலிலுள்ள விக்கிரகங்களையெல்லாம் எடுத்தெறிந்துவிட்டு, அதனையே தமது முக்கிய பள்ளிவாசலாகவும் அமைத்துக்கொண்டனர்.

ஐரோப்பாவின் நோயாளி.

துருக்கி அரசர் மததர்மத்தை காப்பதற்காக இருக்க வேண்டியவரான தினால் இவ்வாறு சிறப்புற்று விளங்கி, மேனாட்டு தேசத்தவர்களுக்கு எப்பொழுதும்சிம்மசொற்பனமாயிருந்துவந்த துருக்கி ஏகாதிபத்தியம் மதப்பைத்தியத்தின் பயனாய் தன் மகிமையிழந்து தேசங்களிழந்து, ஐரோப்பாவின் நோயாளி மனிதனென்றழைக்கப்பட்டு, சுறுங்கக்கூறுமிடத்து சென்ற மகா யுத்தத்திற்குப் பின் பூகோளப்படத்திலேயே இல்லாமலழிந்துவிடக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. முஸ்தபாகெமால் என்னும் ஒரு இயற்கை அறிவு நிரம்பிய சாதாரண மனிதர் அக்காலம் அதனைக் காப்பாற்றியிராவிடின் அது அந்த நிலைமைக்கே திட்டமாக வந்திருக்கும். கெமாலும், அவர்தம் சகாக்களும் தங்கள் தேசம் அந்த நிலைமைக்கு வந்த காரணத்தை ஆராய்ந்தபின்வரும் சீர்திருத்தங்களைச்செய்துமுடித்து, சண்டைத்திறனில் தமக்கு மிக்காரிலரென்று காண்பித்ததுபோலவே, தேசமுன்னேற்றத்திலும், சுயமரியாதைக் கொள்கை எத்தகைய உதவிபுரியக்கூடிய தென்பதனையும் நிரூபித்துவிட்டனர். அச்சீர்திருத்தங்களில் முக்கியமானவை:—

கெமால் சீர்திருத்தம்.

1. மதசம்பந்தமான கலீபாவாகிய சுல்தானை நீக்கி நாடு கடத்திவிட்டு குடியரசு ஏற்படுத்தியது.
2. அரசாங்கத்திற்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லையென்று கண்டது.
3. மதப் பள்ளிக்கூடங்களை அறவேயொழித்து மத சம்பந்தமில்லாத கணக்கற்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியது.
4. மத சந்நியாசி ஆசிரமத்தையே யகற்றி அனாது சொத்துக்களைக் கைப்பற்றியது.
5. அற நிலையங்களை அரசாங்கத்திற்குரித்தாக்கியது.
6. ஷரீயத்தை (இஸ்லாமிய சட்டத்தை) நீக்கிவிட்டு ஸ்விஸ் சிவில் சட்டம், ஜர்மன் வியாபாரச்சட்டம், இட்டாலியன் கிரிமினல் சட்டம் இவைகளைக் கைக்கொண்டது.
7. பெண்களுக்கும் ஆடவர்க்கொத்த சுதந்திர மளித்தது.
8. பெண்கள் முகமூடியை (கோஷாவை) எடுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றியது.
9. ஆணும் பெண்ணுமொன்றாயிருந்து கல்வி பயிலக்கூடிய பள்ளிக்கூடங்களேற்படுத்தியது.
10. கணவன் தன் இஷ்டம்போல் 'தலாக்' சொல்லி மனைவியை நீக்குதல் செல்லாதென்றும், இருவரும் கோர்ட் மூலமே விவாகரத்து செய்துகொள்ளவேண்டுமென்ற சமசட்டமியற்றியது.
11. மனிதர்கட்குள் உயர்வுதாழ்வு காட்டக்கூடிய பட்டங்களை யகற்றிவிட்டது.
12. முன்பு தாக்கப்பட்டிருந்த ஞாபகார்த்த உருவச்சிலை முதலியவற்றை ஏற்படுத்தியது.
13. பழைய அராபிக் எழுத்தை நீக்கி, லாட்டின் எழுத்தைக் கைக்கொண்டது.
14. வெள்ளிக்கிழமை விடுமுறையைவிடுத்து ஞாயிற்றுக்கிழமை யாக்கியது.
15. முன்பு கையாண்டு வந்த இஸ்லாமிய வருஷக் கணக்கை விடுத்து, மேனாட்டாரனுசரிக்கும் கிறிஸ்து பிறந்த வருஷக்கணக்கைக் கைக்கொண்டது.
16. நாடகம், சினிமா முதலியவைகளை ஆடவரும் பெண்டிரும் கண்டுகளிக்கும்படி செய்தது.
17. காற்பந்து முதலிய மேனாட்டு மாணவர் விளையாட்டுகள் ஏற்படுத்தியது.
18. அறியாமையை யகற்ற ஆடவருக்கு கட்டாயப்படிப்பு ஏற்படுத்தியது.

சுயமரியாதை இயக்கம்.

இவற்றை நன்குணராயின் இவை நமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளேயன்றி வேறன்று என்றதெளியலாம். ஆயினும் ஒரு வித்தியாசம் மட்டும் கவனிக்கலாம். சரீரஅடிமைத் தன்மை, அறிவினடிமைத் தன்மை என்று இருவித அடிமைத் தன்மைகளையும் ஒழிப்பதே சுயமரியாதைக் காரரது ஆர்வமாயினும், இப்பொழுது அவர்கள் முதலில் விழைவது அறிவினடிமைத் தன்மையை அகற்றுதலேயாம். பின்னையதே முன்னையதற்கு வழிகாட்டியாயிருந்தது. ஆதலாலது ஒழியின் முன்னையது தானாகவேஇறந்துபடுமென்பது அவர்களது உறுதியான கொள்கை. இந்துமதத்திலுள்ள பல சமய, சமூகக் குறைபாடுகள், உதாரணமாக ஜாதி வித்தியாசமும் அதனாலேற்படும் ஒற்றுமையின்மையும், விதவா விவாகமின்மை, பெண்களுக்கு சொத்துரிமையின்மை, மணரத்து இன்மை, முதலியவை இஸ்லாம் மதத்தில் இல்லாமலிருந்தமையால் துருக்கி சுயமரியாதைக் காரர்கள் இரண்டு வித அடிமைத் தன்மையையும் ஒரே சமயத்திலகற்றிக் கொள்ள முடிந்தது. இந்த ஒரு வித்தியாசத்தைத் தவிர மேற்கண்ட சீர்திருத்தங்கள் நம் சுயமரியாதைக் கொள்கைகளினபாற்பட்டவையேயென்று தெள்ளிதிலறியலாம். நம் சுயமரியாதை இயக்கத்தை இழிதகையாளர் எவ்வாறு அறிவின்மையாலும், பொறாமையாலும், சுயநன்மையை புன்னியும் தேசத்துரோக இயக்கமென்றும், சமய துரோக இயக்கமென்றும் பிதற்றுகிறார்களோ அவ்விதமே துருக்கிய சீர்திருத்தங்களையும் சொல்லலாம். அன்றியும் அவற்றுள் சில கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவை யென்றும் குறை கூறலாம். ஆயினும், அவை அத்தகையன வல்லவென்பது அறிவாளிகளாயின் நன்கு புலப்படும். நீதி இலாகா மந்திரி புதிய சிவில் சட்டத்தை 1926 ம் வருடம் பிப்ரவரியில் அங்கோராவில் முதல் மந்திரியிடம் சமர்ப்பித்த பொழுது நிகழ்த்திய சொற்பொழிவு நமது இயக்கத்தை குறை கூறி எதிர்ப்பவர்கட்கு ஆணித்தரமான பதிலாயிருக்கின்றது.

'மதத்தின் மேற் கட்டப் பட்ட சட்டங்களையுடைய தேசங்கள் சிறிது காலத்திற்குப் பிறகு தேசத்தினுடையவும், குடிகளுடையவும் அவசியங்களைத் திருப்தி செய்ய முடியாதவையாய் விடுகின்றன.

ஏனெனில், மதங்கள் முடிந்த முடிவுகளையே தெரிவிப்பதாய்க் கூறுகின்றன. ஆனால், வாழ்க்கை சலனத்தோடு கூடிய மிருதுத் தன்மை கொண்டது; அடிக்கடி மாறுதல்களை கேட்கின்றது. ஆகையால் சமய சட்டங்கள் உண்மையான மகிமையையாவது, பொருளையாவது உடையனவாயிருத்தலியலாது. அவை இறந்துபட்ட சொற்களினுருவமாய் விடுகின்றன.

சமய வாய்ப்பட்ட சட்டங்கள் தம் ஜன சமூகத்தைக் காட்டுமிராண்டித் தனத்திலாழ்த்தி வைப்பதோடு கூட முன்னேற்றத்திற்கு முக்கிய தடைகளுமாய் விடுகின்றன.

மதத்தின் பேரால் கட்டப்பட்டு மாற்றப்படக் கூடாத நம் சட்டங்கள் நம் துருக்கியரை மத்திய கால வாழ்க்கையிலேயே ஆழ்த்தி வைப்பதற்கு முக்கிய ஏதுக்களா யிருந்திருக்கின்றன. நவீன நாகரீகத்தின் முதல் அடையாளம் மனித வாழ்க்கைகளையும், மதத்தையும் பிரித்தலாகும்.

நவீன நாகரீக தேச மெதுவும் மதத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது. மதம் மக்களது மன உணர்ச்சியில் மட்டும் இருத்தல் வேண்டும்; சட்டங்களுக்குள் அது தலையிடுதல் கூடாது.

இந்தப் புதிய சிவில் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் அந்த நாளே துருக்கியர் தங்களைச் சென்ற பதின்மூன்று நூற்றாண்டுகளாய் அடக்கி ஆண்டு வந்த (மத சம்பந்தமான) பொய் நம்பிக்கைகளினின்றும் பழக்க வழக்கங்களினின்றும் விடுவிக்கப்பட்டவராவர். நம் நாடு உயிரும், அபிவிருத்தியுமுடைய நவீன நாகரிகத்திலிறங்கும்."

இன்னும் கெமாலின் சகாக்களிலொருவராகிய கௌரிபே கூறியதாவது:—

"நமது மதவியாக்யானிகள்மத சட்டங்களை மாறுதல், சீர்திருத்தம்இவைகட்குட்படாதவை யென்று நம்பினார்கள். அதனாலவர்கள் வளர்ச்சியும் அபிவிருத்தியும் வரா வொட்டாமல் எல்லாக் கதவுகளையும் அடைத்துவிட்டார்கள். அதனாலிது வரை இல்லாம் அதே நிலைமையிலிருந்து வந்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

வகுப்புப் போராட்டங்கள்.

(Dr. R. P. பரஞ்சிபே எழுதிய "இந்தியாவின் தேவை" என்னும் புத்தகத்தில் காணப்படும் சாரங்கள்.)

இந்தியாவுக்கு வேண்டிய முக்கியமான விஷயங்கள் எல்லாவற்றிலும் வகுப்புப் போராட்டங்களும், வகுப்பு பொறாமைகளும் தீர்க்கப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

முதலாவதாக இந்தியாவில் இந்துமதம், கிறிஸ்து மதம், முகமதிய மதம், பாரசீகமதம், புத்தமதம், சீக்கியமதம் மற்றும் பல மூடநம்பிக்கைக் கொள்கைகளைக்கொண்ட அனேகவிதமான மதங்களே மக்களைப் பல்வேறு வகுப்புகளாகப் பிரித்துவைத்திருக்கின்றன.

இந்தப்படியானஒவ்வொருமதமும் தனக்குள் பல்வேறு தனித்தனிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அவைகள்ஒன்றுக்கொன்று விரோதபாவமாகவும், வைரிகளாகவும் இருந்து வருவதுடன், ஒரு மதக்காரர் வேறு மதக்காரர்களிடம் நடந்துகொள்ளும் தன்மையைவிட தங்கள் மத உட்பிரிவார்களிடமே அதிகமான வேற்றுமையையும், துவேஷத்தையும் கொண்டிருக்கின்றார்கள்.

இந்துக்கள் மொத்தத்தில் 4 முக்கிய ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அவற்றுள் ஒவ்வொரு ஜாதிக்குள்ளும் அனேக உட்பிரிவு ஜாதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு பிரிவுகளையும் தவிர்த்து, மற்றும் அநேக மேல்ஜாதியாரும், தாழ்த்தப்பட்ட ஜாதியாரும், கீழ்மக்களும், மலைஜாதியாரும் ஆகிய அநேக பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அவைகளில் அநேகம் தொடப்படக்கூடாத தீண்டாதார்களாகவும் பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோலவே முகம்மதியருக்குள்ளும் சியாக்கள், சுன்னிகள், கோஜாக்கள், மேமன்கள், பட்டாணிகள், பார்ஷியர்கள் முதலிய பல பிரிவுகள் உண்டு.

கிறிஸ்துவர்களிலும் புரோட்டஸ்டெண்ட் என்றும், அதற்குள் பல பிரிவுகளும், ரோமன்கத்தோலிக்கர்கள் என்றும் அதற்குள் பல பிரிவுகளும், மற்றும் இந்து மதத்திலிருந்து கிறிஸ்து வமதம் மாறினவர்கள் அவர்கள் மாறும்போது இந்து மதத்தில் என்ன வகுப்புகளிலிருந்து வந்தார்களோ அதே பெயராலும் இன்னமும் இருக்கும்படியானவர்களும் இருந்து வருகின்றார்கள்.

இந்தியாவின் முழு ஜனத்தொகையும் கட்டுப்பாடுள்ள சிறு சிறு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, அதன் பயனாக தேசத்தின் ஒற்றுமை கெட்டு, சுலபத்தில் முன்னேற்றம் ஏற்படுவதற்கில்லாமல் போய்விட்டது.

இந்தமாதிரியான பிரிவுகளின் வித்தியாசத்திற்கு மதமெல்லாமுமே முக்கிய காரணம் என்று சொல்லிவருவதற்கில்லையானாலும் மத சம்பந்தமான அடிப்படையான உணர்ச்சியானது மக்களுக்கு வெறிபிடித்த தன்மையை உண்டாக்கிவிடுகின்றது. ஆகையால் உலகத்தில் இதர பாகங்களில் இருந்துவரும் மாதிரியாக இந்தியாவிலும் சிநேகோஷ்ணஸ்திதி காரணமாகவும், தேசாச்சாரம் காரணமாகவும், தற்கால நிலைமைக்கு ஏற்றமாதிரியான முன்னேற்றம் ஏற்படமுடியாமல் தடைபடுத்தப்பட்டிருக்கின்றது.

இங்கிலாந்திலானாலும், பிரான்சிலானாலும் இந்தியாவிலிருப்பது போன்றதான தனித்தனி பிரிவு வகுப்புசம்பந்தமான உணர்ச்சிகள் எல்லாம்ஒழிந்து, ஒருவரையொருவர் சகோதரர் போல நினைத்து, ஒன்றுபட்டிருக்கும்படியான தன்மையை பெற்றிருக்காவிடில் அந்த நாடுகள் இன்று இருக்கும்படியான உயர் நிலைமையை ஒரு நாளும் அடைந்திருக்க முடியாது.

இந்திய ஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் மதமானது இந்தியர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் புகுந்து, ஒவ்வொன்றுக்கும் மத சம்பந்தமும், மத அர்த்தமும் ஏற்பட்டு இருக்கின்றது.

ஆதலால், இப்படிப் பட்டதான மதத்தை பரிசுத்தப் படுத்தி விடலாம் என்பது சுலபத்தில் முடியக்கூடிய காரியமாய்விடாது. பொதுவாகவே மக்களுக்குள் ளிருந்து வரும் மத சம்பந்தமான பிடித்தத்தை நாளுக்கு நாள் தளரவிடச்செய்து ஒவ்வொரு காரியங்களுக்கும் காரண காரியங்களைக் கண்டு பிடிக்கத் தக்க அளவுக்கு, அவரவர்களது பகுத்தறிவை உபயோகிக்கச் செய்து வருவதன் மூலம் தான் இந்தியாவில் உள்ள வகுப்புச் சச்சரவுகளை ஒழிக்கச் செய்ய முடியுமேயல்லாமல் மதப் பிடிப்புடன் எவ்வித முன்னேற்றமும் ஏற்படுத்த முடியாது. வகுப்புச் சச்சரவுகளுக்கு காரணமெல்லாம் மதத்தை அனுசரிக்கவேண்டியதில் உள்ள தத்துவமும், வாழ்க்கையில் அனுசரிக்கவேண்டிய ஒழுக்கமும் தான் என்று மதபக்தர்கள் சொல்லுவதை நாம் ஒப்புக் கொள்ள முடியாது. மற்றென்ன வென்றால் மக்கள் நித்திய வாழ்க்கையை மதத்துடன் சேர்த்து, அனுசரித்துவரும் அனேகமூட நம்பிக்கையான எண்ணங்களும், செய்கைகளுமே தான் காரணங்களாகும்.

உதாரணமாக, ஒரு முஸ்லீம் தன்னுடைய பள்ளி வாசலுக்கு பக்கத்தில் சதா இரயில்வண்டிகள் போகும் போக்கு வரத்து சத்தத்தைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. ஆனால் ஒரு இந்து மேள வாத்தியத்துடன் எப்போதாவது ஊர்கோலம் சென்றால் மதம் போய்விட்டதென்றுகருதி பெரிய அதிர்ப்தியடைந்து, கலகத்துக்குத் தயாராகி விடுகிறான்.

அது போலவே, ஒரு இந்துவும் பிரிட்டிஷ் பட்டாளங்களுக்காக ஆயிரக்கணக்கான பசுக்களை தினமும் வதைப்பதைப் பற்றியும், ஒவ்வொரு பட்டணங்களிலும் ஏராளமான மாடுகளைக் கொன்று, கசாப்புக் கடைகளில் விற்றுக் கொண்டிருப்பதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆனால், ஒரு முகமதியன் பண்டிகை நிமித்தம் ஒரு பசுவை கொல்லக்கொண்டு போவானேயானால் பஞ்சமாபாதகம் ஏற்பட்டதாய் கருதி பெரிய கலகம் செய்யத் துணிந்து விடுகிறான்.

சென்னை மாகாணப்பார்ப்பனர்கள் இரயிலில்பிரயாணம்செய்யும் போதும், படகில்-கப்பலில் பிரயாணம் செய்யும போதும் தனது பக்கத்தில் பறையன் உட்கார்ந்திருப்பதைப்பற்றி கவலைப்படுவதில்லை. ஒரு சமயம் ஏதாவது கவலைப்படுவதானாலும் ஒரு "முழுக்குடன்" அக்கவலை தீர்ந்து விடுகின்றது என்று கருதி விடுகிறான்.

ஆனால், அதே பறையன் தெருவில் நடந்தாலும், குளத்தில் தாகத்துக்குத் தண்ணீர் குடித்தாலும், தனது மதமே கெட்டுப் போய் விட்டதென்று கருதி ஆர்ப்பாட்டம் செய்கின்றான். அக்குளத்தில் வேறுவழியாக எத்தனையோ அசிங்கம் ஏற்படுவதை பார்த்துக்கொண்டே இருக்கிறான். இந்தப்படியே தான் அனேக வகுப்புகளுக்குள் இருந்துவரும் உட்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் கற்பிக்கப்பட்டிருக்கும் வித்தியாசங்களுக்கு ஆதாரமான காரியங்கள் எல்லாம் மிக அற்பமானதாகவும், முட்டாள் தனமானதாகவுமே இருந்துவருகின்றதுடன், அவைகளால் ஏற்படும் விபரீத பலன்கள் மாத்திரம் வெகு தொல்லைகளை விளைவிக்கக் கூடியதாய் இருந்து வருகின்றது.

இந்தமாதிரியான முட்டாள் தனத்திற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால், சுவிப்ட் என்னும் ஒரு ஆங்கில ஆசிரியர் எழுதிய ஒரு கதையில் லிலிபுட் என்னும் ஊரிலுள்ளவர்களுக்குள் ஒரு கோழி முட்டையை எந்தப்பக்கத்தில் உடைக்கின்றது என்கின்ற விஷயமாய் ஏற்பட்ட கலகத்தை ஒப்பிடலாம். அவ்வளவு அற்ப விஷயம்தான் மத சம்பந்தமான கலவரங்களுக்கு காரணமாய் இருக்கின்றன, ஆனால், அதையும் விட மிக அற்பமான விஷயமான அதாவது நெற்றியில் வைத்துக்கொள்ளப்படும் மதக்குறியானது கீழே கொஞ்சம் இழுப்பதா? அல்லது வட்ட வடிவமாகவே விட்டுவிடுவதா? என்னும் விஷயம் சென்னைப் பார்ப்பனருக்குள் மிகமிகப்பிரமாதமாய் கருதப்பட்டு, பெருத்த கலவரங்களும், விவகாரங்களும் ஏற்படுத்தப்படுகின்றது இம்மாதிரியான அற்ப வித்தியாசங்களுக்கெல்லாம் கூட தத்துவார்த்தங்கள் சொல்லி மழுப்பப்பார்க்கலாம். ஆனாலும் அதில் சம்பந்தப்பட்ட அதிகமான மக்கள் அப்படிப்பட்ட தத்துவார்த்தம் ஒன்றையும் உணராமலே, "ஏதோ நமதுகூட்டத்தார்கள் செய்கிறார்கள், ஆதலால்நாமும் செயவோம்" என்று கருதியே கலகத்தில் சம்பந்தப்படுகிறார்கள். எவ்வளவோ சிறிய அற்பகாரியங்கள் எல்லாம் மதத்தில் சம்பந்தப் படுத்தப்பட்டவுடன் மிக முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றுவிடுகின்றன.

பூனாவில் முனிசிபல் சேர்மெனாயிருந்த ஒரு நண்பர் சொன்னது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. அது என்னவென்றால், அவர் அந்த முனிசிபாலிடியில் தெருக்கூட்டுகின்றவர்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க,

தீண்டாதாருக்கு விமோசனம்.

முகமதியரைத் தழுவுவதைவிட வேறு கதியில்லை.

["எவனெழுதினாலென்ன"]

தீண்டாதார் நிலை.

சகோதரர்களே! தீண்டாதார் என்பதாக ஒதுக்கித் தள்ளி வைத்திருக்கும் நம்முடைய சமூகத்தின் எண்ணிக்கை இந்தியாவில் சுமார் 7 கோடி மக்கள் இருக்கின்றோம். நாம் தெருவில் நடந்தாலும், மற்றவர்கள் கண்ணில் நாம் தென்பட்டாலும், நமது நிழல் மற்ற மனிதர்கள் மேல் பட்டாலும் தீட்டு ஒட்டிக்கொள்ளுமென்றும், தோஷமென்றும், உடனே குளித்தாக வேண்டுமென்றும், சிலர் குளிப்பதுகூட போதாதென்று ஏதாவது 'பிராயச்சித்தம்' செய்து கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள்.

இவை தவிர, நமக்கு குடிக்கத் தண்ணீர் வேண்டுமானால் நாமாகப்போய் மொண்டுகொள்ளும்படியானதொரு பொதுக் குளமோ, குட்டையோ, ஏரியோ, கிணறோ கிடையாது. நாம் எந்தக்குளத்தையாவது, கிணற்றையாவது தொட்டுவிட்டால் அவற்றை மந்திரங்கள்சொல்லி புண்ணியார்ச்சனை செய்து தண்ணீரையும், மாட்டு மூத்திரத்தையும் தெளித்து சுத்தம் செய்தாகவேண்டும்.

நாம் குடி இருக்கவேண்டிய இடமோ ஊருக்கு ஒரு மைல், அரை மைல் தூரத்தில் குடிசைகள் கட்டிக்கொண்டு அங்குதான் வாழவேண்டும். அங்கும்கூட ஓட்டு வில்லை வீடோ, மெத்தை வீடோ கட்டி அதில் நாம் குடி இருந்தால் ஊருக்கே கேடு வந்துவிடுமாம். நாம் வாழும் இடத்துக்கு சேரி என்று பெயர். நாம் வாழுகின்ற பக்கம்தான் ஊர் ஜனங்கள் குப்பை, செத்தை கொண்டுவந்து போட்டுவைப்பதும், ஊரார் மலஜலம் கழிக்கவருவதுமான இடமாக உபயோகித்துக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில் அவற்றிற்கு காவலாய் இருக்குமாம்.

நமக்கு வேலையோ தோட்டி வேலைதான் பாரம் பரியமாய் சொந்தமானது. மற்றும் ஊர்கூட்டி, மலம் அசிங்கம் முதலியவைகளை எடுத்து சுத்தம் செய்வதும், பிணம் சுடுவதும், செத்த மிருகங்களை அப்புறப்படுத்துவதும், கழனிவயல் முதலியவைகளுக்குக் குப்பை, செத்தை முதலியன கொண்டுபோடுவதும், மற்றும், தானியம்விதைத்து அறுப்பு அறுத்துமிராசுதாரன் வீட்டிற்குத் தானியம்போய்ச்சேரும்வரையில்சகலவேலையும்செய்வதும், வீட்டிலும், வயலிலும் சேருகட்டி வைத்திருக்கும் தானியத்திற்கு காவல் இருப்பதும், மற்றும் இது போன்றவைகளுடன், தப்புக்கொட்டுதல், செத்துப்போன பிணங்களுக்காக அழுதல், பிணத்தின்மீது போடும் அரிசியை எடுத்துச் சமைத்து சாப்பிடுதல், பிணத்தின்மீது போத்தி இருந்த துணியில் கொஞ்சம் கிழித்து எடுத்துக் கட்டிக்கொள்ளுதல், இரவிலும், பகலிலும் 10, 20, 30 மைல்கள் தூரமுள்ள வெளியூர்களுக்குச் சேதிகொண்டுபோதல், முதலியகாரியங்கள்செய்யவேண்டியதும் நமது பிறப்புரிமையாகும்.

இவை ஒருபக்கமிருந்தாலும் நமது பிள்ளைகள் படிக்கக்கூடாது என்பது மேல் ஜாதிக்காரர்களின் கட்டளையாகும். அதுவும் மதத்தை ஒட்டிய கட்டளையாகும். அவற்றை மீறி படிப்பதாய் இருந்தாலும்பள்ளிக்கூடங்கள் கிடையாது. எங்காவது ஒன்று இரண்டு பள்ளிக்கூட வசதிகள் இருந்தாலும் நமக்குச் சம்பளம் கொடுக்கவும், புஸ்தகங்கள் வாங்கிக்கொடுக்கவும், துணிமணி கொடுக்கவும், படிக்கும் பையனுக்கு சாப்பாடு போடவும் சௌகரியம் கிடையாது. கிராமங்களில் இருக்கும்நம்மவர்கள் இவ்விஷயங்களைப்பற்றி நினைக்கவே கூடாது.

இவை தவிர, நமக்கு நாவிதன் கிடையாது, வண்ணான் கிடையாது, நாமாகத் துவைத்துக் கொள்ளலாம் என்றாலும் அதற்கும் கிணறு, குட்டையும் கிடையாது. ஒரு கிராமத்தில் 500 வீடு இருந்தால் அங்கு 20 பறையர் வீடு இருந்தால் அந்த 20 வீட்டுப் பறையர்களும் அவர்களது பெண்டு பிள்ளைகளும் எல்லாருமே மேற்கண்ட 500 வீட்டுக் குடி மக்களுக்கும் அடிமை சாசனம் எழுதிக்கொடுத்த குடும்பத்தைப்போல் அடிமை வேலை செய்யவேண்டியதாகும். இரவு பகல் என்கின்ற கணக்கே கிடையாது. கூலி கேட்டால் உதைகிடைக்கும். விவசாய அறுவடையின் போது களத்தில் பிச்சை வாங்குவதும், மற்றபடி சட்டி எடுத்துக்கொண்டு போய் வீடு வீடாய் 'பிச்சைபோடுங்கசாமி' என்று கூப்பாடுபோட்டு பிச்சை சோறு கேட்டு வாங்கிச்சாப்பிட வேண்டியதாகும். பிச்சை சோறு கேட்கும் சட்டிகூட முழுசாய் இருந்தால் அது ஒரு பெரிய குற்றமாகி விடும். ஏனெனில் கிராமத்தில் பறையன் முழுசட்டி எடுத்துப்பிச்சை எடுத்தால் கிராமத்திற்கு கெடுதி ஏற்பட்டுவிடும் என்கின்ற ஒரு ஐதீகம் உண்டு. ஆதலால் நல்ல சட்டியாய் இருந்தாலும் வாய்பாடுகளை உடைத்து ஓடு மாதிரியாக ஆக்கிக்கொண்டு தான் சோத்துப்பிச்சைக்கு போகவேண்டும்.

சில இடங்களில் ரொம்பவும் மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் கண்டிப்பாய் பறையர்களுக்கு பிச்சைச்சோறு போடமாட்டார்கள். ஏனெனில் பறையனுக்கு சோறுபோட்டால் வீட்டிற்குள் சட்டியில் இருக்கும் சோறெல்லாம் தீட்டாய் (சேஷமாய்) போய் விடுமாம். இதுமாத்திரமல்லாமல் இன்னும் ஒரு மதக்கொள்கை உண்டு அதென்னவென்றால் சில மேல்ஜாதிக்காரர்கள் சாப்பிட்ட எச்சிலையில் உள்ள மீதியையும் அவர்களுக்கு தேவையில்லாத மீதத்தையும்கூட பறையருக்குக் கொடுத்தால் பெரியதோஷம் ஏற்பட்டுவிடும் என்று கருதி, குழிவெட்டி புதைத்துவிடும்படி செய்வதும் உண்டு. நமக்குபிச்சைசோறுபோடக்கூடிய ஜாதியாரோ, கெட்டுப்போனதையும், ஊசிப்போனதையும் தான் பத்திரமாய் வைத்திருந்து நமது சத்தம் கேட்டதும் ஓடி ஓடிப்போய்க் கொண்டு வந்து போடுவார்கள். நிற்க,

துணிவிஷயத்திலும் இப்படித்தான் நமக்கோ புதுத்துணி வாங்கிக் கட்ட காசுகிடையாது, கட்டினாலும் பொறுமைப்படுவார்கள். மேல் ஜாதிக்காரர்கள் கட்டி கிழித்த கந்தலையே கட்டவேண்டும். அப்படி கட்டுவதற்கும் சில முறைகள் உண்டு. அவை என்னவென்றால் வேஷ்டியை இடுப்பில் முழங்காலுக்கு கீழே தொங்கவிட்டு கட்டக்கூடாது, மேலேயும் துணிபோடக்கூடாது, பெண்கள் மார்பை மூடக்கூடாது என்பன போன்ற கட்டுப்பாடுகளுடன், மற்றும் தங்கம், வெள்ளி நகை போடக்கூடாது என்பதும், குடை பிடிக்கக் கூடாது என்பதும், காலில் செருப்பு போடக்கூடாதுஎன்பதும், பித்தளை, வெண்கலப்பாத்திரங்கள் உபயோகிக் கூடாது என்பதுமான பல நிபந்தனைகளுண்டு.

இவ்வளவும் தவிர, தமிழ் நாட்டில் பல ஜில்லாக்களில் பூமிகளை ஒருவருக்கொருவர் விற்கும்போது அந்த பூமியில் வேலை செய்யும் அடிமைகள் என்பதாக நம் பெரியோர்களின் பெயர்கள் போட்டே அந்த வழி அடிமை என்பதாக நம்மையும், குடும்பத்துடன் விற்றுவிடுவது முண்டு. அந்த பூமியை வாங்கினவர்களுக்கு எல்லாம் நாம் அடிமைகளாவோம். மற்றும் பல ஜில்லாக்களில் நம்மவர்கள் படும் பாடு சொல்லவே முடியாது. உங்களில் பலர் காதால் கேட்டுகூட இருக்கமாட்டீர்கள்.

அதாவது, மலையாள ஜில்லாக்களில் நம்மில் ஒரு வகுப்பாரை "நாயாடிகள்" என்று சொல்லுவது உண்டு, அவர்கள் எந்த ரோட்டிலும் நடக்கக் கூடாது. சுமார் 50 கெஜம் முதல் 100 கெஜத்திற்கு மேற்பட்ட தூரத்தில் தான் எந்த ரோட்டிலும் இருக்கவேண்டும். அவர்கள் எங்கும் எவ்வித தொழிலும் செய்யமுடியாது. யாருக்கும் தெரியாமல் ஊருக்கு வெளியில் சாலைத்தெருவில்ஒருதுணியை விரித்துப் போட்டு விட்டு, காட்டுக்குள் ஓடிப்போய்மறைந்து கொண்டு "தம்பிரானே தம்பிரானே" என்று கூப்பாடு போடவேண்டும். சாலையில் நடக்கும் ஜனங்கள் அதில் ஏதாவது பண்டமோ, காசோ போட்டு விட்டு போனால் மாலையில் ஒருவருக்கும் தெரியாமல் வந்து எடுத்துக்கொண்டு ஓடிவிட வேண்டும். இதைத்தவிர எங்காவது வயல்களில் சிந்திக் கிடக்கும் நெல்லுகளைப் பொறுக்குவதும், மற்றும் ஏதாவது பட்சி, பூச்சி, ஜந்து முதலியவைகளை கல்லால் அடித்துப் பிடித்து சுட்டுத் தின்பதும் ஆகியவற்றைத்தவிர வேறு ஒன்றுமே செய்ய முடியாது.

இதைத்தவிர மலையாளத்தில் மற்றும் ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் நம்மிலும் கொஞ்சம் பெரிய ஜாதியென்று சொல்லிக்கொள்ளுவார்கள். ஆனால் அவர்கள் தெருவில் நடக்கும்போதே 'ஹா' 'ஹா' என்று சத்தம் போட்டுக்கொண்டே வரவேண்டும். ஏனெனில், "தாழ்ந்த ஜாதிக்காரனாகிய நான் வருகிறேன். எதிரில்வரும் உயர்ந்த ஜாதியார்களே! விலகிக்கொள்ளுங்கள்" என்று குறிப்பு காட்டுவதற்காக. அதாவது மூலைமுடக்குகளில் மோட்டார்கார்கள் வரும்போது எதிரில் வண்டி வந்தாலும் வராவிட்டாலும் அது ஹாரன் ஊதுவது போல் சத்தம் போடவேண்டும், ஆனால் மோட்டார் மூலை முடக்குகளில் மாத்திரம் ஊதும். இவர்களோ நேர் ரோட்டில் போகும் போதும் மற்றவர்களுக்குத்தான் கீழ் ஜாதிக்காரன் என்று தெரிவிப்பதற்காக வேண்டி சத்தம் போட்டுக் கொண்டே வர வேண்டியதாகும்.

சமூகத்துறையில்

இவை தவிர சமூகத்துறையில் நமக்கு இருக்கும் ஸ்தானமானது நாம் எந்த விதத்திலும் நமது இன்றைய நிலைமையைவிட்டு மாறமுடியாமலும், நாம் எப்படியும் பணக்காரர்கள் ஆகமுடியாமலும், நாம் ஒரு தனித்தொழில் செய்து சுதந்திரமாயிருக்க முடியாமலும், நமது நிலைமையை உயர்த்திக்கொள்ள படிக்கவோ, அல்லது அதிக வரும்படி உள்ள வேறு தொழிலில் போய் சேரவோ மார்க்கமில்லாத நிலைமையிலேயே இருத்தி வைக்கப் பட்டிருக்கின்றோம். எவ்வளவு தான் நம்மவர்கள் முன்னுக்கு வருவதானாலும் சுயராஜிய அரசியலில் பியூன் வேலைக்கு லாயக்காகலாம், மிஞ்சினால் போலீஸ்காரன் வேலைக்கு லாயக்காகலாம், ஸ்தல சுயாட்சிகளில் கக்கூஸ் எடுப்பதில் இருந்து, குப்பை மேஸ்திரி வேலைக்கு லாயக்காகலாம். இதுவும் அந்தந்த

இலாகா "தேசியத் தலைவர்கள்" தயவு வைத்து கொடுத்தால் தான் உண்டு. மற்ற படி குமாஸ்தா வேலைக்கோ அதற்கு மேற்பட்ட எதாவது உத்தியோகஸ்தர் வேலைக்கோ வர நமக்கு மார்க்கமே கிடையாது. 50 லட்சம் ஜனத்தொகை கொண்ட கிறிஸ்துவர்கள் வேறு மதக்காரராய் இருந்தும் பார்ப்பனர்களுக்கு சமமாக அனேகம் பேர் உத்தியோகம் பதவி முதலியவை பெற்று வாழுகின்றார்கள். நம்மைப் போலவே எண்ணிக்கையுள்ள முகமதியர்கள் அன்னிய மதக்காரர்களாய் இருந்தும், அதாவது 8 கோடி இருந்தும் சற்று ஏறக்குறைய அவர்களது ஜனத் தொகைக்குள்ள விகிதாச்சாரம் எல்லா உத்தியோகங்களிலும் இருக்கிறார்கள். மற்றும் இவர்களில் அநேகர் ஏராளமான பணக்காரர்களாகவும், வியாபாரிகளாகவும், விவசாயக் காரர்களாகவும், பேங்கர்களாகவும் இருக்கின்றார்கள். இந்துக்களில் உள்ள மற்ற வகுப்பார்களும் கூட எவ்வளவோ முற்போக்கடைந்திருக்கின்றார்கள். ஆனால் 7 கோடி ஜனத் தொகை கொண்ட நாம் (இந்த நாட்டுப் பழங்குடி மக்களாக இருந்தும்) தீண்டாதார் அல்லது பஞ்சமர் என்கின்ற பெயரை உடைய நாம் எந்த அளவில் படித்தவர்களாய் இருக்கின்றோம், உத்தியோகஸ்தர்களா யிருக்கின்றோம், பணக்காரர்களாய் மிராசுதாரர்களாய், பாங்கர்களாய், வியாபாரிகளாய் இருக்கின்றோம் என்பதை யோசித்துப் பாருங்கள். படித்தவர்கள் 1000-க்கு ஒருவர் உண்டா? பணக்காரர் 10000க்கு ஒருவர் உண்டா? பதவி உள்ளவர்கள் 100000 க்கு ஒருவர் உண்டா? இதன் காரணமென்ன?

"ஆதி" பட்டம்

நாம் தானே இந்நாட்டின் பழம் பெருங்குடிமக்கள் என்று ஆதாரம் இருக்கின்றது. நமக்குத்தானே ஆதிதிராவிடர், ஆதி ஆந்திரர், ஆதி மராட்டியர், ஆதி கர்னாடகர் என்கின்ற பெயர்கள் வழங்குகின்றன. இந்த "ஆதி" பட்டமெல்லாம் நாம் என்றும் கூலியாய், அடிமையாய், தீண்டாதாராய் இருப்பதற்கு அனுகூலமாக கொடுக்கப் பட்டதே யொழிய, மற்றபடி இந்நாட்டின் பழம் பெருங்குடி மக்கள் என்ற மரியாதை செய்து முற்போக்கடையச் செய்விப்பதற்கு கொடுக்கப் பட்டதா? அல்லது உதவுகின்றதா? என்று எண்ணிப் பாருங்கள். ஒரு நாட்டிற்கு எவ்வித சுதந்திர மிருந்தாலும்-பூரண சுயேச்சை இருந்தாலும்-சுயராஜிய மிருந்தாலும் அந்நாட்டிலுள்ள 3-ல் ஒரு பங்கு மக்கள் தீண்டாதார் என்றும், கீழ் ஜாதியார் என்றும் பாடு பட்டு உழைத்து, மற்றவர்களுக்கே போட்டு விட்டு, தெருவில் நடக்கவும், குளத்தில் தண்ணீர் மொள்ளவும், ஊருக்குள் குடியிருக்கவும் உரிமையில்லாமலும், வயிரார உண்ண முடியாமலும் இடுப்பார உடுத்த முடியாமலும் இருக்கும்படியான மக்கள் உள்ள நாடாயிருந்தால் அந்த நாடு கொடுங்கோன்மை ஆட்சி உள்ள நாடு என்று சொல்லுவதல்லாமல் அதற்கு எதாவது மேற்கொண்ட யோக்கியதை உள்ள பெயர் கொடுக்க முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

இதற்கு காரணம் என்ன? நம் குற்றம் தான்.

இங்கு, சகோதரர்களே! மற்றொரு விஷயத்தையும் நான் சொல்லாமற் விடுவதற்கில்லை அதாவது நாம் மேல் கண்டபடியான இழிவுக்கும், கொடுமைக்கும் பாத்திரமானதற்கு நாமே முக்கிய காரணஸ்தராய் இருந்து வரும் நம்முடைய அறிவீனத்தையும், மானமற்ற தன்மையையும் எடுத்துச் சொல்லித் தீர வேண்டுமல்லவா? அதைச் சொல்லுகின்ற போது நீங்கள் வருத்தப்படக் கூடாது. நான் சொல்லுவது உண்மைதானா? அல்லது அல்லவா? என்று யோசித்துப் பார்க்க வேண்டும். உண்மையென்று பட்டால் உடனே கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! நாம் தீண்டாதவர்கள் என்று சொல்லப் படுவதற்கும், தீண்டாதவர்களாய் நடத்தப் படுவதற்கும் முக்கிய காரணமென்ன என்பதை யோசித்துப்பாருங்கள். வெள்ளைக் காரர்களிலாவது, துருக்கியர்களிலாவது, சீன ஜப்பான் காரர்களிலாவது தங்கள் நாட்டு மக்களில் யாரையாவது தீண்டாத ஜாதியாராகவும், கீழ்ஜாதியாராகவும் நடத்துகின்றார்களா? யாராவது அந்தப்படி நடத்தப் பட சம்மதித்துக் கொண்டிருக்கின்றார்களா? நம் நாட்டில் மாத்திரம் ஏன் அம்மாதிரி தீண்டாதார்களாய் நடத்தப் பட வேண்டும்? நாமும் ஏன் வெகு காலமாகவே அதற்கு இணங்கி நம்மை நாம் தீண்டாதாரர் என்றே எண்ணிக் கொண்டு இருக்க வேண்டும்? என்பன போன்ற விஷயத்தை யோசித்துப் பாருங்கள்.

அன்றியும், வெளி நாட்டிலிருந்து வந்த கிறிஸ்துவர்களாவது, முகமதியராவது நம்மைத் தீண்டாதாராய் நடத்துகின்றார்களா? அன்றியும் சீன ஜப்பான் ஆகிய இடங்களில் இருந்து வரும் சைனாக்காரன் ஜப்பான் காரன் முதலிய பௌத்தர்களாவது நம்மை தீண்டாதவர்களாக நடத்துகின்றார்களா? இல்லையே.

மற்றபடி யார் நம்மை தீண்டாதாராய் யார் நடத்துகின்றார்கள் என்று கவனித்துப் பாருங்கள் நம் நாட்டிலே பிறந்து நம் நாட்டிலே வளர்ந்து நம்மிடம் வேலை வாங்கி வாழ்ந்து வரும் மக்கள் தான் நம்மை தீண்டாதார்களாய் நடத்துகின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் ஏன் அவர்கள் அம்மாதிரி நடத்துகின்றார்கள்? என்று பாருங்கள். நாமும் அவர்களும் ஒரே தேசத்தார் என்பதற்காகவா? அல்லவே அல்ல மற்றெதற்காக என்றால் நாமும் அவர்களும் ஒரே மதக்காரர்கள் என்பதற்காகவே அல்லாமல் வேறு எந்தக் காரணத்தாலு மல்ல. அதாவது நம்மையும் நம்மைத் தீண்டாதவர்களாக பாவிக்கும் மக்களையும் ஒரே மதத்தின் கீழ் சேர்த்து எல்லோரும் இந்துக்கள் என்றும் இந்து மதக் காரர்கள் என்றும் சொல்லிக் கொள்வதாலேயே ஒழிய வேறில்லை. பெரிதும் வேறு நாட்டாரும் வேறு மதக்காரர்களுமான இஸ்லாம் மதக்காரரையும் பௌத்தரையும் கிறிஸ்துவரையும் தீண்டாதார் என்று யாராவது சொல்லுகின்றார்களா? அல்லது அவர்களாவது மற்றவர்கள் அப்படிச் சொன்னால் பொறுத்துக் கொண்டு இருப்பார்களா? ஒரு நாளும் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் மதத்தில் தீண்டாமை என்பதான ஒரு பிரிவு இல்லாததாலும் சுயமரியாதையே பிரதானமானதிலும் அவர்களை யாரும் அந்தப்படி சொல்ல முடியாது. சொன்னாலும் அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். உடனே "புத்தி கற்பித்து" விடுவார்கள். ஆதலால் நம் தலையின் மீது நாம் சுமந்து கொண்டிருக்கும் 'இந்து' என்னும் மதம் தான் நம்மை தீண்டாதவர்களாக ஆக்கி இருக்கின்றதே யொழிய வேறு எந்தக் காரணத்தினாலும் நாம் தீண்டாதார்கள் அல்ல என்பதை இப்போது நீங்கள் உணருகின்றீர்களா? ஆகவே நம்மில் எவன் ஒருவன் தன்னை 'இந்து' என்று சொல்லிக் கொள்ளுகின்றானோ அவனெல்லாம் தன்னை மற்றொரு இந்து என்பவன் தீண்டாதான் பறையன், பஞ்சமன் என்று சொன்னால் கோபிக்கவோ ஆட்சேபிக்கவோ சிறிதும் இடமில்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இந்து மதத்தில் தீண்டாமை உண்டு என்பதுடன் வெகு காலமாக நமது முன்னோர்கள் காலம் தொட்டு நாம் 'சண்டாளப்பறையராய்' தீண்டாதாராய் நடத்தப் பட்டு வந்திருக்கின்றோம். நம்மை நாம் இந்து என்று சொல்லிக் கொள்வதன் மூலம் நாமே நம்மை தீண்டாதார் என்று ஒப்புக் கொண்டும் வந்திருக்கின்றோம். இப்படி இருக்க இன்று நாம் திடீரென்று நமக்குச் சுயமரியாதை வந்து விட்டவர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு "நம்மை யாரும் தீண்டாதார் என்று சொல்லக் கூடாது" என்று சொன்னால் அதற்கு எதாவது அர்த்த முண்டா? இந்தப்படி நாம் சொல்லிக் கொள்வதாலேயே மற்றவர்கள் பயந்து கொள்ளுவார்களா?

ஒரு மனிதன் தன் மேலெல்லாம் மலத்தை எடுத்துப் பூசிக் கொண்டு வந்து எதிரில் நின்று "என்னைப் பார்த்து யாரும் அசங்கியப் படக்கூடாது. என்னை எட்டிப்போ என்று யாரும் சொல்லக் கூடாது" என்று சொன்னால் யாராவது கேட்பார்களா? அல்லது அது நியாயமாகவாவது இருக்குமா? அல்லது "மலம் பூசிக்கொண்டு வருபவர்களைப் பார்த்து யாரும் அசங்கியப்படக்கூடாது, எட்டிநில் என்று சொல்லக்கூடாது" என்று இந்தியன் பீனல் கோடில் அதாவது கிரிமினல் சட்ட புஸ்தகத்தில் ஒரு செக்ஷன் போட்டு அதற்கு ஒரு வருஷ தண்டனை என்றும் போட்டுவிட்டதினாலேயே அந்தப்படி அசங்கியப்பட்டு எட்டிநில் என்று சொன்னவர்களில் இரண்டொருவரை தண்டித்துவிட்டதினாலேயே அசங்கியப்படும் குணத்தை மக்களிடமிருந்து மாற்றிவிட முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

இதுபோலவே தான், இந்துக்களில் மற்றொரு சாரார் தங்கள் மதத்தைச் சேர்ந்த மற்ற மக்கள் தங்களை சூத்திரர் என்று யாரும் கூப்பிடக் கூடாது என்றும், "சூத்திரனென்றால் ஆத்திரம் கொண்டடி" என்றும் சொல்லுகிறார்கள், எழுதி ஆங்காங்கு தொங்கவிடுகிறார்கள். இதுவும் பேதைமைத்தன்மை என்றே சொல்லுவேன். ஏனெனில் தன்னை இந்து என்று சொல்லிக்கொள்ளும் எவனையும் (அதாவது அவன் பார்ப்பனரல்லாதவனாய் இருந்தால்) அவனை 'சூத்திரன்' என்று கூப்பிட உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் உரிமை உண்டு. அதை மறுப்பவன் மூடனேயாவான். ஏனெனில் இந்து மதத்தில் சூத்திரன் என்கின்ற வகுப்பு உண்டு என்பதும் அது பார்ப்பனரொழிந்த ஏனையோருக்கும் உரித்தானது என்பதும் இந்துவாய் இருக்கும் ஒவ்வொருவனும் ஒப்புக்கொள்ளவேண்டியதே யாகும். இந்துக்களுக்குள் எத்தனை உட் பிரிவு சமயக்காரர்கள் இருந்தாலும் அத்தனை சமயமும் சூத்திரனையும், பிராமணனையும், பஞ்சமனையும் [பறையனையும்] ஒப்புக்கொண்டே இருக்கின்றது.

அன்றியும் இந்த முறையானது இந்துமத உட்பிரிவு சமயங்களாகிய சைவத்தின் சிவபுராணத்திலும், பெரிய புராணத்திலும், 63 நாயன்மார்களிலும், மற்றும் சமயாச்சாரிகளிலும் இருக்கின்றது என்றால் பிறகு இதை ஆக்ஷேபிக்க யாருக்கு, எந்த சைவனுக்கு உரிமை உண்டு? என்று யோசித்துப் பாருங்கள். அதுபோலவே வைணவத்திலும் அவர்களது ஆழ்வாராதிகளிலும், பகவத் பாகவத பக்தர்களிலும், நாலாயிரப் பிரபந்தம், இராமாயண முதலிய இதிகாச புராணங்களிலும் ஆதாரம் இருக்கின்றது என்றால் பிறகு இதை ஆக்ஷேபிக்க யாருக்கு-எந்த வைணவனுக்கு உரிமை உண்டு என்று யோசித்துப்பாருங்கள். மற்றும் இந்து மதத்திற்கு ஆதாரமான வேத சாஸ்திரம், ஸ்மிருதி முதலியவைகளிலும் இருப்பதோடல்லாமல் "பகவான் வாக்கு" களிலும், 'ரிஷிகள்' வாக்குகளிலும் இருக்கின்றது என்றால் பிறகு இதை ஆக்ஷேபிக்கின்ற 'இந்து' என்பவன் யோக்கியனாகவோ, அல்லது அறிவுடையனாகவோ இருக்கமுடியுமா? என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே நம்மவர்கள் தங்களுக்கு சூத்திரபட்டமும், தீண்டாதார், பஞ்சமர் என்கிற பட்டமும் வேறு யாராலோ கொடுக்கப்பட்டதாய் கருதி மற்றவர் பேரில் கோபப்படுவது வடிகட்டின அறிவீனமே யாகும். ஏனெ

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

கவர்னர் தம்பதிகள் கோவை விஜயம்.

மேன்மை தங்கிய கவர்னர் பிரான் தமது குடும்ப சகிதமாகவும், பரிவாரங்களுடனும் 11-10-31 மாலை கோயமுத்தூர் வந்து சேர்ந்தார்கள். இரயில்வே ஸ்டேஷனில் ஜில்லா கலெக்டரும், கோவை முனிசிபல் சேர்மனும், ஜில்லா போர்டு பிரசிடெண்டுமான உயர்திரு. திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும், இன்னும் இதர உத்தியோகஸ்தர்களும் கனம் கவர்னர் அவர்களை வரவேற்றார்கள்.

12-10-31 காலை 7-30 மணிக்கு கவர்னர் அவர்கள் கோவை முனிசிபல் ஆபீசுக்கு விஜயம் செய்தார்கள். அவ்வமயம் கோவை முனிசிபல் சேர்மனும் ஜில்லா போர்டு பிரசிடெண்டுமான உயர்திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் கவர்னரவர்களை வரவேற்று, கோவை முனிசிபல் சபையின் சார்பாக ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்து வெள்ளியில் செய்யப்பட்ட ஓர் அழகிய மோட்டாரில் வைத்தும், ஜில்லா போர்டின் சார்பாக ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்து ஓர் அழகிய வெள்ளித் தட்டிலும் வைத்துக் கொடுத்தார். கனம் கவர்னர் அவர்கள் அப்பத்திரங்களுக்கு விடையளித்ததும், முனிசிபல் சபை அங்கத்தினர்களும், ஜில்லா போர்டு அங்கத்தினர்களும் கவர்னர் தம்பதிகளுக்கு அறிமுகம் செய்விக்கப் பட்டார்கள்.

பிறகு திரு. சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாரவர்கள் கவர்னர் அவர்களை புதியதாக 60,000 ரூபாய் செலவில் கட்டப் பட்டிருக்கும் முனிசிபல் ஆபீஸ் கட்டிடத்தைத் திறந்து வைக்கும்படியாக வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிணங்கி கவர்னரவர்கள் அக்கட்டிடத்தை பலத்த கரகோஷத்தினிடையே திறந்து வைத்து, அக்கட்டடம் முழுவதையும் பார்வையிட்டார்கள்.

பிறகு, முனிசிபல் ஹைஸ்கூலை சென்று பார்வையிட்டார்கள். இப்பள்ளிக் கூடத்தின் புதிய கட்டடமானது கல்வி மந்திரி கனம் S. குமாரசாமி ரெட்டியார் அவர்களால் சிறிது காலத்திற்கு முன்னதாகத்தான் திறந்து வைக்கப்பட்டது.

13-10-31 காலை கனம் கவர்னரவர்கள் தமது பரிவாரங்களுடன் சென்று போலீஸ் ரிக்ரூட்ஸ்களைப் பார்வையிட்டதும், சென்ட்ரல் ஜயில், லண்டன் மிஷன் ஹைஸ்கூல், செயின்ட் ஜோசப் இண்டஸ்டிரியல் ஸ்கூல், ஸ்டேன்ஸ் யூரோப்பியன் ஹைஸ்கூல் ஆகியவைகளைப் பார்வையிட்டார்கள். அன்று மாலை கலெக்டர் பங்களாவில் உயர் திரு. ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ., முதலிய கனவான்களுக்கு கனம் கவர்னரவர்களால் பேட்டியளிக்கப்பட்டது.

14-10-31ந் தேதி கவர்னர் அவர்கள் கோவை விவசாயக்கல்லூரியை பார்வையிட்டனர். கல்லூரியின் தலைமை ஆசிரியர் உயர் திரு. சி. தாடுலிங்கம் அவர்களால் கவர்னர் தம்பதிகள் வரவேற்கப்பட்டு, ஒரு தேநீர் விருந்தும் நடாத்தப்பட்டது. சுமார் மூன்று மணிநேரம் அக்கல்லூரியில் செலவழிக்கப்பட்ட பின்பு கவர்னர் தம்பதிகள் தங்களுடைய பரிவாரங்களுடன் ஒரு ஸ்பெசல் இரயில்வண்டியில் கோவையிலிருந்து ஈரோட்டிற்குப் புறப்பட்டார்கள்.

ஈரோடு விஜயம்.

ஈரேரடு முனிசிபாலிடி.

மேன்மை தங்கிய கனம் கவர்னர் ஸ்டான்லி அவர்கள் தமது மனைவி குழந்தை சகிதம் பரிவாரங்களுடன் ஒரு ஸ்பெசல் வண்டியில் கோயமுத்தூரிலிருந்து புறப்பட்டு, 15.10.31 காலை 6-5 மணிக்கு ஈரோடு வந்துசேர்ந்தார்கள். கனம் கவர்னர் தம்பதிகள் தமது குமாரத்தியுடனும், கோவை ஜில்லா கலெக்டருடனும் காலை 7.25 மணிக்கு ஈரோடு இரயில்வேஸ்டேசனிலிருந்து புறப்பட்டு, முனிசிபல் ஆபீசுக்கு வந்து சேர்ந்தார்கள். கனம் கவர்னர் தம்பதிகள் முனிசிபல் ஆபீசையடைந்ததும், இதற்கெனவே அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில் ஈரோடு முனிசிபல்சேர்மன் ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுது சாயபு அவர்களாலும், கவுன்சில் அங்கத்தினர்களாலும் வரவேற்கப்பட்டு, சேர்மன் ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுது சாயபு அவர்களால் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டு, அழகிய ஓர் பேழையில் அடக்கம்செய்து கொடுக்கப்பட்டது.

ஈரோடு லண்டன்மிஷன்.

கனம் கவர்னர் அவர்கள் அப்பத்திரத்திற்கு தக்கபடி பதில் அளித்தபிறகு, ஈரோடு லண்டன் மிஷன் கம்யூனிட்டி பாடசாலையை பார்வையிட்டார்கள். பள்ளிக்கூடத்தில் கவர்னர் அவர்கள் Rev. A. W. பிரப் அவர்களாலும், தலைமை உபாத்தியாயர் திரு என். இராஜநாயகம் அவர்களாலும் வரவேற்கப்பட்டு, உபசரிக்கப்பட்டார். மாணவ சாரணர்கள் அணிவகுத்து கவர்னர் அவர்களை வரவேற்றார்கள். பள்ளிக்கூடத்தையும், அதைச்சார்ந்த இதர கட்டிடங்களையும் பார்வையிட்ட பிறகு, கனம் கவர்னர் அவர்கள், மாணவர்கள் விளையாடுமிடத்தில் யூனியன் ஜாக் என்னும் ஆங்கில கொடியை கொடியேற்றினர். லேடி ஸ்டான்லியும், மிஸ் ஸ்டான்லியும் ஈரோடு லண்டன் மிஷன் பெண்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று, 26,000 ரூபாய் செலவில் பிரசவத்திற்கென புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் கட்டடத்தைத் திறந்துவைத்தார்கள். இந்த ஆஸ்பத்திரியானது 1917ல் 32 படுக்கைகளுடன் பெண்களுக்கென கட்டப்பட்டதாகும். அதற்குப் பிறகு மேற்கொண்டு ஆறு படுக்கைகள் சேர்க்கப்பட்டன. புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் இந்தக்கட்டடத்தில் பிரசவத்திற்கென தனியாக ஒரு வார்டும், 20 படுக்கைகளுமிருக்கின்றன. இக்கட்டடத்தைத் திறந்த பிறகு, ஆஸ்பத்திரியானது அவர்களால் பார்வையிடப்பட்டது.

பளையகோட்டை.

இவைகள்யாவும்முடிவடைந்த பிறகு கவர்னரின் பரிவாரங்கள் தங்களுடைய சலூனுக்கு வந்து சேர்ந்தார்கள். பிறகு, காலை 10 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு, ஈரோட்டிலிருந்து சுமார் 19 மைல் தூரத்தில் தெற்கேயுள்ள பளையகோட்டை என்னும் கிராமத்திற்குச் சென்றார்கள். வழியில் நான்கு இடங்களில் கனம் கவர்னர் அவர்களின் மோட்டாரானது நிற்கப்பட்டு, மிக்க குதூகலமாக, குடிகளால் வரவேற்கப்பட்டு, மாலை சூட்டப்பட்டார்கள். யாவரும் பளையகோட்டையடைந்ததும், பளையகோட்டை பட்டக்காரர் ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரைமன்றாடியார் எம். எல். சி. அவர்கள் கவர்னர் தம்பதிகளை மாலைகளுடனும், பாண்டு மேளங்களுடனும வரவேற்று, உபசரித்தார். பட்டக்காரர் அவர்களின் மாட்டுப்பண்ணைகளும், குதிரை லாயங்களும் பார்வையிடப்பட்டன. மாட்டுப்பண்ணையில் 3000 மாடுகளுக்குமேலாகவேயிருக்கின்றன. இம்மாடுகளில் பெயர் பெற்ற காங்கயம் நாட்டுமாடுகளுமிருக்கின்றன. குதிரைலாயங்களில் சில மட்டக்குதிரைகளுமிருக்கின்றன. இவைகளைப் பார்வையிடுவதற்கு சுமார் ஒரு மணி நேரம் பிடித்தது. பிறகு நொய்யல் ஆற்றின் மீது டிஸ்டிரிக்ட் போர்டாரால் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் வாராவதி யொன்றை திறப்பதற்காக வேண்டி கவர்னர் அவர்கள் தமது பரிவாரங்களுடன் புறப்பட்டுச்சென்றார். கோயமுத்தூர் டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டு உயர்திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் கனம் கவர்னர் அவர்களை அவ்வாராவதியை திறந்து வைக்கும்படி வேண்டிக்கொண்டதற்கிணங்க, கவர்னர் அவர்கள் பலத்த கரகோஷத்தினிடையே, வாராவதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த நாடாவை ஓர் தங்கக் கத்தரியால் கத்தரித்து, போக்குவரத்துக்கு வாராவதியை திறந்துவிட்டுவிட்டதாக உரைத்து திறந்துவைத்தார்.

பளையகோட்டை பட்டக்காரர் அவர்களால் அனைவருக்கும் ஓர் பலத்த விருந்தளிக்கப்பட்டது. அவ்விருந்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து உணவருந்தினர். பளையகோட்டையை விட்டு ஈரோட்டுக்குத் திரும்பும் பொழுது கவர்னர் அவர்கள் அவ்வாராவதியின் மீதுதான் தமது பரிவாரத்துடன் வந்தார்.

சென்றசிலமாதங்களுக்கு முன் பாகத்திறக்கப்பட்ட ஈரோடு புதிய இரயில்வே ஸ்டேஷன் கவர்னர் தம்பதிகளால் பார்வையிடப்பட்டது. அவ்வமயம் தென் இந்திய இரயில்வே கம்பெனியின் பிரதம இஞ்சினீயரான திரு. பர்ன்ஸ் அவர்கள் கவர்னர் தம்பதிகளை புதிய ஸ்டேஷனைச் சுற்றிலும் அழைத்துச் சென்று அவர்களுக்குக் காண்பித்தார்.

ஈரோடு தாலூகா போர்ட்.

பிறகு கவர்னர் அவர்கள் தமது பரிவாரங்களுடன் ஈரோடு தாலூகாபோர்டு ஆபீசுக்கு புறப்பட்டார்கள். தாலூகாபோர்டு பிரசிடெண்டு அவர்களாலும், அங்கத்தினர்களாலும் கவர்னர் தம்பதிகள் வரவேற்கப் பட்டு, மாலை சூட்டப்பட்டார்கள்.

தாலூகா போர்டு பிரசிடெண்டு அவர்கள், பிறகு கவர்னர் அவர்களுக்கு ஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்து, அழகிய ஓர் வெள்ளிப்பேழையில் வைத்து அளித்தார். போர்டின் அங்கத்தினர்கள் பலரும் கவர்னர் தம்பதிகளுக்கு அறிமுகம் செய்விக்கப்பட்ட பின்பு, பிரசிடெண்டு அவர்கள் போர்டின் புதிய கட்டடத்தைத்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

குடி அரசு

ஈரோடு 1931 அக்டோபர் 25௳

ஆதிதிராவிடர்களுக்கு
இந்துக்களின் துரோகம்.

—:0:—

உயர்திரு காந்தியவர்கள் "ஆதிதிராவிடர்கள் கேட்கும உரிமையை என் உயிர் போம் அளவும் எதிர்த்தே தீருவேன்" என்று சொன்னதில் இருந்தும்.

"ஆதிதிராவிட தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு லண்டனுக்கு வந்திருப்பவர்கள் ஆதிதிராவிடர்களின் தலைவர்களல்ல" என்று தொ[illegible]தில் இருந்தும்.

"ஆதிதிராவிட தலைவர்கள் வெட்கப்பட்டு (அவமானப்பட்டு) ஓடும்படியாக நான் செய்யப்போகும் காரியத்திற்கு நீங்கள் உதவி புரிய வேண்டும்" என்று இந்திய மாணவர்களைக் கேட்டுக் கொண்டதிலிருந்தும்.

"ஆதிதிராவிடருக்கு நான் தான் (காங்கிரசு தான்) பிரதிநிதியே யொழிய வேறு யாரும் இருப்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்றும்.

மற்றும் ஆதிதிராவிட தலைவர்களை அவமானமாகப் பேசியதில் இருந்தும் ஆதிதிராவிட மக்களுக்கு திரு. காந்தியின் மீது அதிருப்தி ஏற்பட இடமுண்டாய் விட்டது.

இந்த சங்கதி தெரிந்த இந்திய காங்கிரசு காரர்கள் என்பவர்கள் பலர் ஆங்காங்குள்ள சில ஆதிதிராவிட கூலிகளைப் பிடித்து, கூலி கொடுத்து கூட்டி வைத்து, ஆதிதிராவிட தலைவர்களை ஏளனமாகப் பேசும்படி செய்தும், அவர்களிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், திரு. காந்தியிடமே நம்பிக்கை இருப்பதாகவும் சீமைக்குத் தந்திகொடுக்கச் செய்ததில் இருந்தும் காங்கிரசுக்காரிடமும் ஆதி திராவிடர்களுக்கு அதிருப்தி ஏற்பட இடமேற்பட்டது.

இவை மாத்திரமல்லாமல் திரு காந்தி அவர்கள் தனது சுயராஜியத்தில் "வருணாச்சிரமமும் பரம்பரைத் தொழிலும் காப்பாற்றபடும் என்றுமேல் ஜாதியாருக்கு உறுதிகொடுக்கப்படும்" என்றுதெரிவித்து இருந்ததாலும் மற்றும் "கிராம வாசிகள் (சூத்திரரும் பஞ்சமரும்) மாடு மேய்த்தும் செருப்புத்தைத்தும் ஜீவிக்க வேண்டுமே யொழிய அவர்கள் வியாபாரிகளைப் போல (வைசியர்களைப் போல்) பணக்காரர்களாகி பெட்டியில் பணம் மீத்தக் கூடாது" என்றும் சொன்னதில் இருந்தும் திரு. காந்தியிடம் அவர்களுக்கு அடியோடுநம்பிக்கை இல்லாமல்போகவும் இடம் ஏற்பட்டு விட்டது. இவ்வளவுடன் மாத்திரம் இல்லாமல் இந்திய "தேசியப் பத்திரிகை"கள் என்பவையெல்லாம் அவை பார்ப்பனரால் நடத்தப் படுபவைகளானாலும் பார்ப்பனரல்லாதாரால் நடத்தப் படுபவைகளானாலும், எல்லாம் ஒரே மாதிரியாக ஆதிதிராவிடர்களுக்கு துரோகமாகவே நடந்து கொள்வதாலும் அதாவது ஆதிதிராவிடர் கேட்பது அக்கிரமமென்றும், காந்தி சொல்லுவதும் காங்கிரசு சொல்லுவதுமே சரியென்றும் எழுதுவதோடு நிற்காமல், ஆதிதிராவிடர்களது சேதியை சரி வர வெளிப்படுத்தாமல் தப்பும் தவறுமாகவும் பொது ஜனங்களுக்கு ஆதிதிராவிடர்கள் மீது தப்பர்த்தமும் துவேஷமும் ஏற்படும்படியாக கட்டுப்பாடாய் பிரசுரித்து வருவதாலும் ஆதிதிராவிடர்கள் மனம் பதரி எந்த வகையிலாகிலும் தங்களுக்குப்பந்தோபஸ்து கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்யக் கட்டாயப் படுத்தப் பட்டு விட்டது.

நிற்க, சென்ற வாரம் சென்னையில் கூடிய ஆதி திராவிடர்களின் மூன்று கூட்டங்களில் 3 நாளும் சில பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளான சில காங்கிரசு சகாக்களும் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் சென்று கலகம் செய்து இருக்கின்றார்கள். என்பதாக நம்பத்தகுந்த இடத்தில் இருந்து சேதி கிடைத்திருக்கின்றது.

அதாவது, முதல் நாள் பீச்சு மீட்டிங் நடந்து கொண்டிருக்கும் போது சில அய்யங்கார், பார்ப்பன மாணுக்கர்கள் வம்பில் பிரவேசித்து திரு. பொன்னம்பலம் பேசிக் கொண்டிருக்கும் போது "காந்திக்கு ஜே, வந்தே மாதரம், அம்பட்காருக்கு ஷேம்" என்று சத்தம் போட்டு கூட்டத்தைக் கலைக்க சூழ்ச்சி செய்தார்களாம். ஒரு கனவான் அவர்களிடம் மரியாதையாய் "உங்கள் கூட்டத்திற்கு நாங்கள் வருகின்றோமா? நீங்கள் ஏன் எங்கள் கூட்டத்தில் கலவரம் செய்கின்றீர்கள்?" என்று கேட்க, அதற்கு சரியான பதில் சொல்லாமல் "இதெல்லாம் சுயமரியாதை பசங்களுடைய குறும்பு" என்று சொன்னாராம். பிறகு, அவர்களுக்கு புத்திகற்பித்த பிறகு போய் விட்டார்கள்.

அடுத்தநாள் இந்த விஷயத்தையும், நடந்த தீர்மானத்தையும் எல்லா பத்திரிகை ஆபீசுக்கு அனுப்பியும் "திராவிடன்" தவிர மற்ற எப்பத்திரிகையும் லக்ஷியமே செய்யமலும், சில ஒழுங்காய் போடாமல் ஆதிதிராவிடரை கண்டிக்கும் மாதிரியிலும் பரிகாசமாகவும், இழிவுபடுத்தும் மாதிரியாகவுமே பிரசுரித்தன. அசோசியேட் பிரசுக்கு இந்த சேதியை நேரில் கொடுத்தபோது "இந்தமாதிரி அநாமதேய சங்கதிகள் போட முடியாது" என்று சொல்லி விட்டார்களாம்.

பிறகு, அடுத்த மீட்டிங் நேபியர் பார்க்கில் திரு. சிவராஜ் பி. ஏ., பி. எல்., எம். எல். சி., அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டபோதும் சிலர் கூட்டத்தில் குழப்பம் செய்ய முயற்சித்து பயன்படாமல் போனதால் ஆதிதிராவிடர்கள் திரும்பி வீட்டிற்கு போகும்போது அவர்களை காங்கிரசுக்காரர் வழிமறித்து அடித்தும், கல் எறிந்தும் தொந்திரவு செய்திருக்கிறார்கள் என்று ஆதிதிராவிட தலைவர் ஒருவர் சொன்னதோடு, போலீசாரும், ஆதிதிராவிடர் நன்றாய் உதைபட்ட பிறகு தான் வந்தார்கள் என்றும் சொன்னார்.

இந்த சங்கதியையும் "தேசிய பத்திரிகை"கள் என்பவை "ஆதிதிராவிடர்கள் விஷமம்" என்றும் "காந்திக்கு ஆபத்து" என்றும் "ஆதிதிராவிடர்கள் குறும்பு" என்றும் கலப்பு கொடுத்து ஆதிதிராவிடர்கள் மீதே பழி சுமத்தி எழுதிற்றே யொழிய ஒன்றாவது அவர்கள் அடிபட்டதற்கு பரிதாபப்படாமலும், அடிபட்டதே வெளியில் தெரியாமலும செய்து விட்டதோடு, அவர்கள் மீது ஜனங்களுக்கு துவேஷம் உண்டாகும்படியாகவே செய்து வந்தன.

ஒரு தலைவர் ஒரு பத்திராதிபரைக்கண்டு இவ்விஷயங்களைச்சொல்லி கேட்டதற்கு "சுயமரியாதைக்காரர்கள் இதில் கலந்ததால் தான் நான் அப்படிச்செய்தேன்" என்றும் "நீங்கள் அவர்களோடு சேர்ந்தால் இன்னமும் உங்களுக்கு என்னகதி கிடைக்கின்றது பாருங்கள்" என்றும் "இந்தக்காரணத்தால்தான் போலீஸ் உதவி உங்களுக்கில்லை" என்றும் சொன்னாராம்.

மூன்றாம் நாள் திரு. எம். சி. ராஜா எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடந்த எழும்பூர் ஏரி கூட்டத்தில் சுமார் ஏழாயிரம் பேருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். இக்கூட்டத்திலும் கலவரம் செய்யப் பலர் நினைத்திருந்தாலும் கூட்டம் பலமாயிருந்ததால் அங்கு ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டதால், திரும்பிப்போகும் போது வழியில் பெருத்த கலவரம் செய்யப்பட்டிருக்கின்றன. அடிதடிகளும் நடந்ததாய்த் தெரிகின்றன.

இந்த விஷயங்களை எல்லாம் உண்மையாய் எழுதாமல் சில பத்திரிகைகள் எல்லாம் கட்டுப்பாடாக ஆதிதிராவிடர்களுக்கு கொடுமையையே உண்டாக்கி வருகின்றன. இது மிகவும் பரிதாபகரமான விஷயமாகும். ஆதிதிராவிடர்களிடமிருந்து மலம் எடுக்கும் தொழில் முதல் கொண்டு எவ்வளவோ இன்றியமையாத வேலைகளைப்பெற்று வரும் இந்து மக்கள் என்பவர்கள், அவர்களுக்கு இவ்வளவு கொடுமையும், துரோகமும் செய்துவருவது எந்த விதத்திலும் பொறுக்க முடியாததேயாகும். இந்தக்கொடுமைகள் எப்படியாவது ஆதிதிராவிடர்களை மெய்யாகவே ஒரு நாளைக்கு வெறி பிடிக்கத்தான் செய்து விடும். இது தவிர்க்க முடியாத இயற்கையாகும். பிறகு இப்போது "புலி வருகின்றது! புலி வருகின்றது!!" என்பது போல் ஆதிதிராவிடர்களின் மீது சுமத்தும் பழியும், அபாண்டப்பொய்யும், விஷமப் பிரசாரமும் ஒரு நாளைக்கு உண்மையாய் நடக்க நேரிட்டாலும் நேரிடலாம். ஆகையால் அறிவாளிகள் ஜாக்கிரதையாயும், முன் எச்சரிக்கையாயும் நடந்து கொள்ள வேண்டியது புத்திசாலித்தனமாகும். வேதாந்தமும், தத்துவ ஞானமும், அஹிம்சா தர்மமும் பைத்தியக்காரர்கள் ஆஸ்பத்திரியில் நடக்கவேண்டியதாகுமே யொழிய ஆதிதிராவிடர் தலையில் கைவைக்க பயன் படுத்துவது தற்கொலையாகவே முடியும். அஹிம்சா தர்மத்தையும், கடவுள் பக்தி நம்பிக்கையையும் கொண்டு கோட்டை வாசலில் துளசியைக் கொட்டிய நாயக்கர் ராஜியம் இன்று பெயர் சொல்ல வார்சு இல்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது. நிற்க,

ஆதிதிராவிடர்கள் என்பவர்க

ளும் பொறுமையை இழக்கவேண்டிய அவசியம் ஒன்றும் நேர்ந்து விடவில்லை. அவர்கள் இந்த சமயத்தில் பதிலுக்குப் பதில் என்று கூட டலாத்காரத்தில் இறங்குவது மிக மிக தப்பிதமேயாகும். ஆனால் உதைகளை பட்டுக் கொள்ளும்படி நாம் சொல்லவரவில்லை. பதிலுக்கு பதில் உதைப்போம் என்று எதிரிகள் நினைக்கும்படி நடந்து கொள்ளவேண்டியதானது. இப்படிப்பட்ட மக்களுக்கு மிகவும் அவசியமானாலும், பொறுத்தவரையில் அதிக பலம் ஏற்படும் என்பதை ஞாபக மூட்டுகின்றோம்.

நிற்க இந்த நிலைமையில ஆதிதிராவிடர்கள் இனி இந்துக்களை நம்புவதோ, காங்கிரசையோ, காந்தியையோ நம்புவதோ "தான் சாக மருந்து குடிப்பதை"யே ஒக்கும் என்று தைரியமாய்ச்சொல்லுகின்றோம். கண்டிப்பாய் இனி ஆதிதிராவிடர்கள் அரசியலில் தனித்தொகுதி தேர்தல் முறையும், வகுப்புவாரி உத்தியோக முறையும் இல்லாமல் இந்தியாவில் அரைநிமிஷம்கூட மனிதர்களாய்வாழ முடியாது ஆதலால் அவர்கள் தனித்து நின்றோ, அல்லது தங்களுக்கு வேண்டிய உதவி அளிக்கக்கூடியவர்களுடன் கலந்தோ முயர்ச்சிசெய்து லக்ஷியத்தை அடைய கவலைகொள்ளவேண்டியது அவசியம் என்றும் ஏமாந்து விடக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிசயப் பிறவி.

தைப்பேர்து மாத்தாம்புரம் என்னும் ஊரிலுள்ள ஓர் தமிழ்ப் பெண், அவ்வூரிலுள்ள ஆஸ்பத்திரியில் 10-7-31ல் இரட்டைக் குழந்தையை ஈன்றாள். அக்குழந்தை இரண்டும் ஒரே உடம்பாலாயது. இரு பக்கமும் தலை; நான்கு கைகள், நான்கு கால்கள், வயிறும் இரண்டுபிரிவாய்க்காட்டி ஒன்றாகவே முடிந்திருக்கிறது. தொப்புள் மையமாகப் பிரித்துக் காட்டுகின்றது. இக்குழந்தைக்ள் ஆணென்றும், பெண்ணென்றும் சொலுவதற்கு ஓர் அத்தாட்சியுமில்லை. பிறந்த மூன்றும் நாள் இறந்துவிட்டது. தாயார் சுகமாய் இருக்கிறாள். இக்குழந்தையின் போட்டோ படம் ஒன்று நமக்கனுப்பப்பட்டிருக்கிறது.

ஈ. வெ. இராமசாமி.

திரு. ஈ. வெ. இராமசாமி சென்னையில் இராயபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர் அங்கு வெய்யில் அதிகமாயிருப்பதனால் மயக்கமும், தலைவலியும் அதிகப்பட்டதாலும், குளிர்ச்சியான இடத்திலிருக்கவேண்டுமென்று டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டதினால் எங்காவதுசெல்ல 21-10-31 ந் தேதி சென்னையிலிருந்து ஈரோடு வந்துசேர்ந்தார். உடனே குளிர்ச்சியுள்ள ஏதாவதொரு இடத்திற்குச்செல்ல ஏற்பாடுகள்செய்யப்படுகிறது. ஈரோடுகவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிடாக்டர் C. K. ஜோசப் M. B. & C. M. அவர்கள் சிகிச்சை செய்து வருவதுடன் சென்னை மேஜர் மகாதேவன் அவர்கள் பிரிஸ்கிருப்ஷன் படியே மருந்து கொடுத்து வருகிறார். குறைந்தது இரண்டு மூன்று மாதங்களுக்காவது குளிர்ச்சியான இடத்தில் கடினமான ஒய்வுடன் இருந்தாலொழிய தலைவலியும், மயக்கமும் தீராதென்பது சென்னை டாக்டருடையவும், ஈரோடு டாக்டருடையவும் அபிப்பிராயமாகும்.

இரண்டில் லொன்று வேண்டும்.

(சித்திரன்.)

ஏதாவது ஒரு காரிய சித்திக்கு இரண்டிலொரு சக்தி வேண்டும் அவை யாவன.

1. "கை" பலம் [பலாத்காரம்]
2. "புத்தி" பலம் [சூக்ஷி அல்லது தந்திரம்]

மொகலாயர் கை பலத்தில் ஆண்டார்கள்.

வெள்ளையர் புத்தி பலத்தில் ஆண்டார்கள்.

இந்திய பொது மக்களுக்கு இரண்டும் இல்லை, எப்போதும் இருந்ததில்லை. ஆதியில் ஆங்காங்குள்ள கொள்ளைக்கூட்டத்தலைவர்கள் அவ்வப்போது சில்லரை சில்லரையாய் ஆண்டிருப்பார்கள்.

ஆனால், ஆரியர்களுடைய [பார்ப்பனர்] சூக்ஷியானது மக்களைப் பிரித்துவைத்து புத்தியும், பலமும் இல்லாமல் செய்து தாங்கள் மாத்திரம் எந்தக் காலத்திலும், எப்போதும் ஆதிக்கம் செலுத்தி தாங்கள் மாத்திரம் மேன்மையாய் வாழும்படி செய்து கொண்டார்களே ஒழிய இந்தியாவுக்கோ, அல்லது இந்தியப் பொது மக்களுக்கோ எவ்வித பயனும் ஏற்படவில்லை

திரு. காந்திக்கு பலமும் இல்லை, புத்தியும் இல்லை. ஆனால், ஆரியரின் கையாளாய் இருப்பதால், ஆரியர்கள் தங்களது சூக்ஷியை திரு. காந்தி மூலமாய் வெளியாக்குவதன் மூலமும், அவற்றிற்கு விளம்பரம் கொடுப்பதன் மூலமும் ஏதாவது வெற்றிகிடைத்தால் அது ஆரியருக்கு மாத்திரம் பயனிக்கக்கூடிய தாகும். மற்றும் ஆரியருக்கு சிறிது செல்வவான் உதவிவேண்டியிருப்பதற்காக செல்வவான்களையும் தங்களுடன் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

ஆகவே, இந்தியப் பொது மக்களுக்கு வெற்றி அதாவது விடுதலை வேண்டுமானால் பலம் வேண்டும். பலம் வேண்டுமானால் ஒற்றுமை வேண்டும், ஒற்றுமை வேண்டுமானால் ஜாதி வகுப்புப்பிரிவு ஒழிய வேண்டும், ஜாதி வகுப்பு பிரிவு ஒழிய வேண்டுமானால் மதம் ஒழிய வேண்டும், மதம் ஒழிய வேண்டுமானால் பகுத்தறிவு வேண்டும்.

பலம் இல்லாமல் சூக்ஷியாவது வேண்டுமானால் கல்வி அறிவு வேண்டும், கல்வி அறிவு வேண்டுமானால் அதற்கு தடையான காந்தீயம் என்னும், பார்ப்பன ஆதிக்கம் ஒழிய வேண்டும்.

இரண்டும் இல்லாமல் காரிய சித்தி வேண்டுமானால் ஒற்றுமையும், பலமும் உள்ள சமூகத்தோடு சேர்ந்து கொள்ள வேண்டும்.

புரட்டு! சுத்தப்புரட்டு!!

நமது செல்வத்தை அன்னிய நாட்டார் கொள்ளையடிப்பதாகச் சொல்லுவது சுத்தப்புரட்டு.

நமது செல்வத்தை கொள்ளையடித்து நம்மைப்பட்டினி போட்டு வதைப்பவர்கள் நமது கடவுள்களும், நமது பார்ப்பனர்களும், நமது முதலாளி, ஜமீன்தார், மிராசுதாரர் வட்டிக்கடைக்காரர் ஆகியவர்களுமேயாவார்கள்.

அந்நிய நாட்டார் கொள்ளையடிக்கும் செல்வமெல்லாம் நம்முடையதல்ல.

நம்மை கொள்ளை அடித்து பட்டினிபோடும் பாதகர்களாகிய மேற்கண்ட முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன், வட்டிக்கடைக்காரன் முதலியவர்கள் செல்வமே யாகும்.

ஆகையால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

மேலே சொல்லப்பட்ட இந்தக்கூட்டங்களை ஒழித்தால் தான் நமது செல்வம் நமக்குக்கிடைக்கும்.

அப்போது நாம் வயிறார உண்ணலாம். கஷ்டப்படும் நாடுகளுக்குத் தருமமும் செய்யலாம்.

இப்படிக்கு 100க்கு 90 மக்களாகிய,

தொழிலாளிகள்
வேலையாளர்கள்
கூலியாட்கள்
பண்ணையாள்கள்

"தாழ்ந்த வகுப்பார்" நிலை.

பிரிட்டிஷ் போலீஸ் இல்லாதிருக்குமானால் ஆபத்து

டஞ்சாப் மாகாணத்தில் டில்லிக்கு பக்கத்தில் உள்ள டார்கோன் என்கிற ஊரில் தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள் ஒரு திருமணம் செய்துகொண்டு ஊர்வலம் செல்லுகையில், உயர்ந்த வகுப்பார் என்பவர்கள் ஊர்வலத்தைத் தடுத்து, அடைத்துவைத்து விட்டார்கள். 48 மணிநேரம் (2 நாள்) குளிரினால் அங்கேயே அன்ன ஆகாரமில்லாமல் வருந்தி இருக்கிறார்கள்.

பிறகு போலீசார் வந்து அந்த தாழ்த்தப் பட்டவர்களை விடுதலை செய்து வேறு சுற்றுவழியாக பந்தோபஸ்துடன் அழைத்துச் சென்று வீடுசேர்த்தார்களாம். இது 23உ எல்லா தினசரியிலும் [அ. பி. சேதியில்] காணப்படுகின்றது.

சென்னையில் கலவரம்.

காந்தி மீது கண்டனம்.

சென்னைத்திருவல்லிக்கேணி கடல் கரையிலும், மவுண்ட்ரோடு நேப்பியர் பார்க்கிலும் எழும்பூர் ஏரியிலுமாக மூன்று பொதுக்கூட்டங்கள் ஆதி திராவிட மகாஜனசபையாரால் கூட்டப்பெற்று திருவாளர்கள் வி. பி. எஸ். மணியர், என். சிவராஜ் பி. ஏ. பி. எல். எம். எல். சி., எம். சி. ராஜா எம். எல். ஏ. ஆகியவர்கள் தலைமையில் 11-10-31, 14-10-31, 18-10-31 ஆகிய மூன்று தினங்களிலும் மிகச் சிறப்பாகநடைபெற்றது. முதல் நாள் 1000 பேரும், 2-ம் நாள் 2000 பேரும், 3-ம் நாள் 7000 பேரும் விஜயம் செய்திருந்தார்கள். அக்கூட்டங்களில் "வட்டமேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி வேண்டாமென்று கூறிய திரு காந்தியைக்கண்டித்தும அவர்மீதும் காங்கிரஸ்மீதும்தங்கட்கு நம்பிக்கையில்லையென்றும், தங்கள் பிரதிநிதிகளான டாக்டர் அம்பெத்கார், ராவ்பகதூர் சீனிவாசம் ஆகியவர்களால் வேண்டப்படும் கொள்கைகளையே முழுமனதோடு ஆதரிப்பதாகவும் தீர்மானம் செய்தார்கள்.

அதனையொட்டி திருவாளர்கள்:— பொன்னு,கே.ஆர்.சாமி,கே.ஆர்.எத்திராஜலு தங்கராஜ்,செல்வராஜ்,ஜெகநாதம், வி. பி. எஸ். மணியர், என். சிவராஜ் பி. ஏ. பி. எல். எம். எல். சி, பாலகுரு முதலி, சிஙம், அ. பொன்னம்பலம் ஆகிய கனவான்கள் நன்கு விளக்கி ஆதிதிராவிடர்கள் நிலைமையையும், வட்டமேஜை மகாநாட்டையும், காந்தி காங்கிரஸ் முதலியவைகளைப் பற்றியும் எடுத்துப்பேசினார்கள். இந்நிகழ்ச்சியை சகியாத பார்ப்பனர்கள் கடல்கரை கூட்டத்தில் "வந்தேமாதரம்! காந்திக்குஜேய்! என்று சத்தமிட்டு குழப்பத்தையுண்டாக்கி கூட்டத்தைக்கலைக்க முயற்சித்தார்கள். பொது ஜனங்களில் இருவர் கூச்சல் போட்டு குழப்பம் செய்தவர்கட்கு நல்ல புத்திமதி கொடுத்தார்கள். அதன் பின் ஓட்டம் பிடித்தார்கள். அமைதியும் ஏற்பட்டது. அதேபோல் 14-10-31 தேதியிலும் பொதுக்கூட்டம் முடிந்து பஜனையாகப் போய்க் கொண்டிருந்த ஆதிதிராவிட மகாஜனங்களை பெரியமெட்டு பெரியண்ண மேஸ்திரி தெரு பககத்தில் ஒருவீட்டு மாடிமீதிருந்துகொண்டு கல்லாலும் சோடாபுட்டிகளாலும் (தேசபக்தர்கள்) தாக்கியிருக்கின்றார்கள். அவர்கள் கையில் பஜனையில் கொண்டு போன படத்தையும் கிழேயந்து பிடுங்கி உடைத்திருக்கிறார்கள். பின்னர் இருசாரர்கட்கும் ஆவேசம் ஏற்படவே சிறிது கலவரம் வலுவடைந்தது. அது சமயம் போலீஸ்படைகளும் ஜோல்சர்களும் வந்து கூட்டத்தைக்கலைத்தனராம். பிறகு 18 தேதி கூட்டம் முடிந்த பிறகும் ஆயிரம் விளக்குக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கலகம் நடந்து இரு கட்சியிலும் பலர் காயமடைந்தார்கள். இந்நிகழ்ச்சியில் பார்ப்பன தேசபக்தர்களின் ஏவுதலின்படி சம்மலர்களும் சிலர்கலந்திருந்ததாகக் கூறப்படுகிறது. பார்ப்பனர்களுடைய தேசபக்தி இதுபோன்ற கலவரம் இனியும் பல ஏற்பட்டு சைமன் கமிஷன் காலத்தில்நடந்தது போல் திருவல்லிக்கேணியிலும் மைலாப்பூரிலும் போய் புகும்வரையில் நிற்காது என்பதாகவே தெரிகின்றது. இன்னும் பல கூட்டங்கள் பல இடங்களில் கூட ஆதிதிராவிடர்கள் ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள். அதிலும் சில பார்ப்பனர்கள் வழக்கம்போல் தங்கள் விஷமத்தையும், காலித்தனத்தையும் கையாளக்கூடும். ஏன்? இவ்வாறு அவர்கள் பொறுமை கொண்டு காலித்தனம் செய்யவும், கலவரம்செய்யவும் முன்வருகிறார்கள், அல்லது பிறரைத்தூண்டிவிடுகின்றார்கள் என்பது எல்லாருக்கும் தெரியாததல்ல. "தேசியம்" என்பதற்கே பொருள் "பார்ப்பனீயம்" என்றுதான் அர்த்தம். எனவே பார்ப்பனீயம் சென்னையில் நடக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக்கூட்டங்களைக்கண்டு தங்கள் புரட்டுகளும் சூழ்ச்சிகளும் வெளிப்படுமென்று எப்படியாவது கலவரத்தையுண்டாக்கி பார்ப்பனரல்லாத சமூகத்தின்முக்கியஸ்தர்களுக்கு கெட்டபெயரைச்சூட்டி அவர்கள முயற்சியை தடைபடுத்தவேபார்ப்பனப்பத்திரிகைகள்நடந்தசெயலை மறைத்துபொய்பிரசாரமும்அவதூறாக எழுதுகிறது. பார்ப்பனரல்லாத வியாபாரப்பத்திரிகைகளும் பார்ப்பனீயத்திற்குத் தான் ஆதரவளிக்கின்றன.

எப்படி இருந்த போதிலும் "தேசிய"ப் பார்ப்பனர்கள் முயற்சிக்கும், சூழ்ச்சிக்கும் இந்தக் காலத்தில் எந்த மனிதனும் பின் வாங்கப்போவதில்லை. இனியும் தொடர்ச்சியாக பல கூட்டங்கள் போட்டு காந்தியின் செயலைக்கண்டிக்கத்தான் போகின்றார்கள். தேசியத்தின் பெயரால் மக்களை ஏமாற்றும் சூழ்ச்சியை வெளியிடத்தான் போகின்றார்கள். ஆதிதிராவிடர்களில் குறைந்தது 5000 போவது ஜெயிலுக்குப் போவது என உறுதி கொண்டு விட்டார்கள். பார்ப்பனீயம் ஜெயிக்குமா? சமதர்மம் ஜெயிக்குமா? என்று பார்த்துவிட உறுதிகொண்டு விட்டார்கள். ஒன்று மனிதத்தன்மை அடைவது அல்லது மாழ்வது இரண்டிலொன்றுதான் முடிவு. எத்தனைநாட்களுக்கு ஒருசமூகம்ஏமாற்றப்பட்டு அடிமையாகவே இருக்கசம்மதிக்கும் இனியும் இப்பகுதியில நடைபெறும் பொதுக்கூட்டங்கட்கு தோழர் அ. பொன்னம்பலனார், காளியப்பன் முதலியவர்களும் வர ஒப்பியுள்ளார்கள்.

சிவபூஷனம்.

காந்திமீதும், காங்கிரஸ்மீதும் நம்பிக்கையில்லை.

திரு காந்தியின்மீதும், காங்கிரஸ்மீதும் நம்பிக்கையில்லையென்று, கீழ்க்கண்ட இடங்களிலிருந்து லண்டனுக்கு திரு. காந்திக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் தந்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அலகாபாத்.

ஐக்கிய மண்டல ஆதி இந்து (தாழ்ந்தவகுப்பார்) வாலிபசங்கத்தின் பொதுக் கூட்டமொன்று திரி சி. எல் ஜெயாப்வார் தலைமையில் கூடியது. அதில் டாக்டர் அம்பெட்காரையும், அவர் கோரியதையும் ஆதரித்தும், திரு காந்திமீதும் நம்பிக்கையில்லை என்றும் திரு அம்பட்கார்தான் தங்கள் பிரதிநிதி என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

பூனா.

பம்பாய் சமூக சமத்துவச் சங்கத்தின் ஆதரவில் திரு. எஸ். எல். வாதவிக்கர் தலைமையில் கூடிய ஒடுக்கப்பட்டவர்களின் ஸ்பெஷல் மகாநாட்டில் ஒடுக்கப்பட்டவர்கள் கோரிக்கைக்கு திரு காந்தி முட்டுக்கட்டையாய் இருப்பதைக் கண்டித்தும், டாக்டர் அம்பெட்கார், ராவ்பகதூர் சீனிவாசன் முதலியோர் கோரிக்கையை ஆதரித்தும் ஓர் தீர்மானம் நிறைவேறப்பட்டது. அந்தீர்மானத்தை பிரிட்டிஷ் முதல் மந்திரி ராம்சே மாக்டொனால்டு அவர்கட்கும், லார்டுசாங்கி, டாக்டர் அம்பெட்கார், திரு காந்தி, ஆகாகான் முதலியவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

பம்பாய்.

பம்பாயில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டார் கூட்டத்திற்கு திரு. எஸ். டி. கெயிக்வார் அடியிற்கண்ட தந்தியை பிரதம மந்திரி, லார்டுசாங்கி, சர் சாமுவேல்கோர், மிஸ்டர் ஐசக்புட், டாக்டர் அம்பெட்கார், காந்தி ஆகியோர்க்கு அனுப்பி இருக்கிறார்.

"வட்டமேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதியாக இருப்பதாக திரு காந்தி விபரீதமாகக் கூறியிருப்பதை பாம்பாய் தாழ்த்தப்பட்டவர்கள் மறுக்கிறார்கள். டாக்டர் அம்பெட்கார், ஆர். சீனிவாசன் ஆகியவர்களே தங்கள் பிரதிநிதிகளென்றும் அவர்கள் மீது முழு நம்பிக்கை கொள்ளுவதாகவும் தெரிவிக்கின்றனர்."

தானா.

தானா ஜில்லா சாமார்கள் ஒரு கூட்டம் கூடி தங்களுடைய அரசியல் கோரிக்கைகளைப் பற்றி திரு. காந்தி கொண்டுள்ள கருத்தை பலமாகக் கண்டித்தார்கள். தங்கள் பிரதிநிதிகளான டாக்டர் அம்பெட்கார், ஆர். சீனிவாசன் ஆகியவர்களின் கோரிக்கைகளைக் கொண்டிராத எந்த அரசியல் அமைப்பையும் நாங்கள் ஒப்புக் கொள்ளத் தக்கதாக இராதென்றும் தீர்மானித்தார்கள்.

சென்னை.

சென்னை எழும்பூர் ஏரிமைதானத்தில் ராவ் பகதூர் எம். சி. ராஜா எம். எல். சி. அவர்களின் தலைமையில் ஒரு ஆதிதிராவிட முக்கிய மகாநாடு கூடியது. அதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தனித் தொகுதியே ஒடுக்கப்பட்டவர்களின் ஜீவாதாரமான கோரிக்கை என்றும் தனித் தொகுதி வகுக்கப்படாத எந்த அரசியல் திட்டத்தையும் ஒடுக்கப்பட்டவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்களென்றும், இக்கூட்டம் தீமானிப்பதுடன், தனித் தொகுதியை எதிர்ப்பவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் ஜன்மவிரோதிகளென்றும் தீர்மானிக்கிறது.

2. டாக்டர் அம்பெட்காரின் நியாயமான கோரிக்கையை ஆதரித்த சர். டேஜ் பகதூர் சாப்ரூ, திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார், சர். ஹென்றி கிட்னி, ராவ்பகதூர் ஏ. டி பன்னீர் செல்வம் ஆகியவர்களுக்கு இந்தக் கூட்டம் நன்றி செலுத்துவதுடன், மேலும் உறுதியாய் இருந்து கோரிக்கையை வற்புறுத்துமாறு டாக்டர் அம்பெட்காரை இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகிறது.

3. திரு. காந்தி ஒடுக்கப்பட்டவர்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வதை இக்கூட்டம் மறுப்பதுடன் இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்டவர்களெல்லாம் அவர் பெரிய விரோதி என்று தீர்மானிக்கிறது.

சென்னை.

சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட ஐக்கிய சங்கத்தார், டாக்டர் அம்பெட்கார், திரு. சீனிவாசன் முதலியோரிடம் நம்பிக்கை இருப்பதாகவும், திரு. காந்தி மீது நம்பிக்கை இல்லை என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றி, மறு நாள் நேப்பியர் பார்க்கில் திரு. காந்தியையும், காங்கிரசையும் வன்மையாகக் கண்டித்து ஒரு கூட்டம் நடைபெற்றது.

ரோஜா முத்தையா

நாமக்கல்.

14-10-31 தேதி திரு. பி. மாரிமுத்து (கௌரவ மாஜிஸ்டிரேட்டு நாமக்கல்) அவர்களின் தலைமையில் ஆதிதிராவிடர்களின் அவசரக் கூட்டமொன்று மாரியம்மன் கோவிலில் கூடிற்று. தாழ்த்தப் பட்ட மக்களின் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும், அவர்கள் மீது திரு. காந்தி அவர்கள் கொண்டுள்ள இரக்கமற்ற தன்மையைப் பற்றியும் விளக்கி திரு. காளிமுத்து அவர்கள் பேசியபின் திரு. காந்தியை கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது.

மற்றும், சென்ற வாரம் சென்னையிலும், இன்னும் பல இடங்களிலும் திரு காந்தியைக் கண்டித்து, நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை லண்டனுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். (அதில் சில நமது பத்திரிகையில் சென்ற வாரமே வெளியிடப் பட்டன. ப-ர்.)

வடஆற்காடு ஜில்லாவில் சுயமரியாதைப் பிரசாரம்.

வடஆற்காடு ஜில்லாவைச்சேர்ந்த திருப்பத்தூரில் 10-10-31ந் தேதி வக்கீல் திரு. சாமிநாயடு அவர்கள் பி. ஏ, பி. எல்; அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு திருச்சியிலிருந்து திரு சொ. முருகப்பா, திருமதி மு. மரகதவல்லியாரும், இராணிப்பேட்டையிலிருந்து திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்களும் வந்திருந்தார்கள். அவர்களை 2000 பேர் பின்தொடர ஊர்வலமாக கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. அம்மூவருக்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டும் திரு முருகப்பா, திருமதிகள் மரகதவல்லியார், இந்திராணிபாலசுப்பிரமணியம் அகியவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையான தத்துவத்தைப் பற்றி மிக உருக்கத்துடன் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

குடியாத்தம்

மறுநாள் (12-10-31) திரு S. முருகப்பா, திருமதிகள் மரகதவல்லியார், இந்திராணி பாலசுப்பிரமணியம் முதலியோர் திருப்பத்தூரிலிருந்து இங்குவந்துசேர்ந்தார்கள். அவர்களை ரயில்வேஸ்டேஷனிலிருந்து மாணவ முன்னேற்ற கழகத்தாரால் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். மேற்படி கழகத்தின் மூன்றாவது வருட விழா திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கழகத்தாரால் மூவருக்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது, பின் திருவாளர்கள் சொ. முருகப்பா, சாமிநாதன், கே. பி. சந்தோஷம், வி. பார்த்தசாரதி திருமதிகள் ஜே. பி. ராவ், மு. மரகதவல்லியார், ஆகியோர்கள் உருக்கமாக சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

ஜோலார்ப்பேட்டை.

அங்கிருந்து திரு பார்த்தசாரதியுடன் ஜோலார்ப்பேட்டைக்கு வந்தார்கள். அங்கு திரு பார்த்தசாரதி இல்லத்தில் தங்கியிருந்துவிட்டு திரு முருகப்பாவும், திருமதி மரகதவல்லியாரும் இராசிபுரத்திற்கு வந்து அங்கு சுயமரியாதைப்பிரசாரம் செய்துவிட்டுசென்றார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

திறந்து வைக்கும்படியாக கவர்னர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். இக்கட்டடமானது சுமார் 6000 ரூபாய் செலவில் கட்டப்பட்டு, தாலூகாபோர்டு பிரசிடெண்டு பட்டக்காரர் அவர்களின் பெயரே இக்கட்டிடத்திற்கும் சூட்டப்பட்டிருக்கின்றது.

ஈரோடு முனிசிபாலிட்டி விருந்து.

கனம் கவர்னர் அவர்கள் இக்கட்டடத்தின்திறப்புவிழாவையாற்றிய பின்பு, அங்கிருந்து தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு, ஈரோடு பீபிள்ஸ் பார்க்குக்குச் சென்றார். ஈரோடு முனிசிபல் சேர்மென் ஜனாப் கே. ஏ. ஷேக் தாவுத் சாயபு அவர்களால் பீபிள்ஸ் பார்க்கில் கவர்னர் தம்பதிகளுக்கு ஓர் தேநீர் விருந்து நடாத்தப்பட்டது. அத்தேநீர் விருந்துக்கு ஈரோட்டிலுள்ளமுக்கியஸ்தர்களும், பிரபல வியாபாரிகளும் அழைக்கப்பட்டிருந்ததுமல்லாமல், கோயமுத்தூர் ஜில்லாவிலேயேயுள்ள பல முக்கியஸ்தர்களும் அதாவது திருவாளர்கள் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்பொன்னையா, ஆர். கே. ஷண்முகம், டாக்டர் பி. சுப்பராயன், வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் முதலியவர்களும், அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அவ்வமயம் விகடமும், ஜாலமும், வாணவேடிக்கைகளும்சுமார் ஒரு மணி நேரம் வரையிலும் நடைபெற்றது. கவர்னர் தம்பதிகளும், அவர்களுடைய பரிவாரமும் இவ்வைபவங்களை மிக்க சந்தோஷகரமாக அனுபவித்தவர்களாகவே காணப்பட்டார்கள். பிறகு, கவர்னர் அவர்கள் தமது பரிவாரங்களுடன் தங்களுடைய சலூனுக்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்றிரவு 7 மணிக்கு கனம் கவர்னரவர்கள் தமது பரிவாரங்களுடன் ஸ்பெஷல் வண்டியில் சேலத்திற்குப் பிரயாணப்பட்டு சென்றார்கள்

பாராட்டுதல்.

கவர்னர் அவர்கள் இந்த சுற்றுப்பிரயாணத்தில் ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, ஈரோடு முனிசிபாலிட்டி ஆகிய மூன்று நிர்வாகத்தைப்பற்றியும் புகழ்ந்து பேசியதோடு மூன்று ஸ்தாபனத் தலைவர்களைப்பற்றியும் மிக்க பெருமையாகவே பாராட்டிச் சென்றார்.

மதிப்புரை.

மோகனரஞ்சினி அல்லது சமூகத்தோற்றம்:—என்னும் தமிழ் நாவல் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இப்புத்தகம் இனிய தமிழில், உன்னத கருத்துக்களை எழுதும் வல்லமையுடையவரும், தங்கள் இனமான பெண்கள் இனத்திற்கு சலிக்காது உழைக்க ஆர்வங்கொண்டவருமான எம். சீதாலெக்ஷிமி அம்மாளென்னும் சகோதரி கிரிஜாதேவியால் எழுதப்பட்டதாகும்.

இப்புத்தகத்தில் ஆங்காங்கு நாம் பார்த்ததில் மனிதஉணர்ச்சி, மதவெறியாலும், ஜாதிகொர்வத்தாலும், காணப்படாது அழிந்திருப்பதை எடுத்துக் காட்டப் பட்டு, ஒவ்வொருவரையும் உண்மை மனிதராக்கும் சக்தி வாய்ந்ததாயிருப்பதைக் கண்டோம். மேல்நாட்டில் நாவல் எழுதும் அறிஞர்கள் தங்கள் நாவல்கள் மூலம் பெரிய புரட்சிகளை உண்டு பண்ணக்கூடியவர்களாயிருந்தார்கள். நம் நாட்டில் நாவல்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலுள்ள கதைகளை மொழிபெயர்த்தெழுதப்பட்டதாகவும் கதை சுவைபையே பெரிதும் கருதி எழுதப் பட்டதாகவும் இருக்கின்றன. அப்படியின்றி இப்புத்தகம், எப்படி கதையின் சுவை கடைசிவரைப் படிக்கும்படி தூண்டுகிறதோ அப்படியே விதவைகளின் நிலை, பால்யமணம், ஆண்பெண் ஒருவருக்கொருவர் பிரியமில்லாது பெற்றோர் கட்டாயத்தின்மேல் நடத்தப்படும் மணங்களின் கதி, பெண்களுக்கு மற்ற அனேகவிதங்களில் நேரிடும் துன்பங்கள், மதச்சடங்குகளின் கொடுமை, புரோகிதர்களின் வஞ்சகம், கோவில்களுக்கு மக்கள் பொருள் சேர்ப்பதின் பரிதாபம், மடாதிபதிகளின் மோசம், ஜாதிகர்வம் முதலியவைகள் கதையோடு கதையாய் படிப்பவர்களுக்குப் புகட்டப்படுகிறது.

மற்றும் இக்கதை மனதைக்கவரும்படியும் எளிய நடையில் சிறுவர்முதல் பெரியோர் வரை ஊக்கத்துடன் படிக்கும்படியும் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தை ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் படிக்கும்படி நாம் வற்புறுத்திக் கூறுவோம். 230 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:—

சி. வ. பாலகிருஷ்ணன்,
68. அவதானம் பாப்பையர்தெரு
வேப்பேரி, சென்னை.

விளம்பரம்.

திருப்பூர்
டி. மு. கோர்ட்டு.

1931 ஆம் S. C. No. 263.

அவனாசி தாலூகா சேவூரிலிருக்கும் ராமகிருஷ்ண நாயக்கன் மகன் ஆர். கருப்ப நாயக்கன்—வாதி.

ஈரோடு தாலூகா கஸ்பாஈரோட்டில் கீக்கார வீதியிலிருக்கும் பெரியசாமிக்கவுண்டன் பெண் ஜாதி முருகக்காள் 1, ஷையூரிலிருக்கும் பழனிக்கவுண்டன் மகன் தேவண கவுண்டன் 2, ஷையூர் ஷை 2ம் பிரதிவாதியின் பெண் ஜாதி கருணையக்காள் 3—பிரதிவாதிகள்.

இதனால் தெரிவிக்கிறதாவது:-

ஷை நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் பிராம்சரி நோட்டுப்படி அசல்வட்டி உள்பட ரூபாய் 172—0—0 மும் கோர்ட்டு செலவும் கிடைக்க வேண மாய் ஷை நெம்பரில் தாவா செ யித்து அது ஈரங்கி வாய்த 26—10—31 தேதி போட்டி க்கிறது. அன்றையதினம் ஏத வது ஆக்ஷேபணையிருந்தால் தெ ரிவித்துக்கொள்ளவும். அப்ப ஷை வாய்தாவில் வராவிட்டா உங்கள் பேரில் ஒரு கட்சியா தீர்மானம் செய்து விடுவார்க என்கிற விவரம் இதனால் அறி வும்.

G. ஏசுரத்தினம், B. A., B. L
வாதி வக்கீல்.

திருப்பூர், 22—10—31.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

னில் எவன் ஒருவன் தன்னை இந்து என்று சொல்லிக்கொள்ளுகின்றானோ அவனெல்லாம் சூத்திரபட்டமும், பஞ்சமப்பட்டமும் தானே எடுத்து தன் தலையில் சூட்டிக்கொண்டு திரிகின்றவனாவானே தவிர வேறில்லை.

இந்து மதம் உள்ளவரை.

இந்தியாவில் இந்துமதம் உள்ளவரை சூத்திரனும், பஞ்சமனும் ஒருநாளும் மறைந்துபோகமாட்டார்கள். அதுபோலவே இந்துமத வேதமும் சாஸ்திரமும், இராமாயண பாரதமும், பெரியபுராணம்சிவபுராணம்திருவிளையாடல் புராணம்முதலியவைகளும் உள்ளவரையிலும் சூத்திரப்பட்டத்தையும், பஞ்சமப் பட்டத்தையும் ஒழித்துவிடுவது என்பதுமுடியவேமுடியாது.

திரு. காந்தி எவ்வளவுதான் மகாத்மாவானாலும் 'சாமி'வேதாசலமும் எவ்வளவுதான் சுவாமியானாலும், "சுவாமி" சகஜானந்தமும் எவ்வளவுதான் சுவாமியானாலும் எதுவரையிலும் தங்களை இந்துக்களென்றோ, சைவர்களென்றோ சொல்லிக்கொள்ளுகின்றார்களோ அதுவரையில் அவர்கள் சூத்திரர்கள் என்பதையும் மூன்றாவதவர், பஞ்சமர் [பறையர்] என்பதையும் பிரிவிகவுன்சில்வரையில் ருஜுப்பிக்கமுடியும். அவர்களை அப்படிக்கூப்பிட உலக மக்களுக்கு உரிமையுண்டு. மேல்கண்ட இவர்கள் எதுவரை இந்துமதப்பிரசாரமும், சைவப்பிரசாரமும் செய்கின்றார்களோ அதுவரை இவர்கள் தங்களுள்பட மக்களை சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் ஆக்கி நிலைநிறுத்த முயற்சித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் சொல்லுவேன்.

சம்பந்தனை ஒப்புக்கொண்ட சைவன், சம்மந்தன் பாடிய 'சாமி'களை ஒப்புக்கொண்ட சைவன், சம்பந்தனின் தேவாரங்களையும், சம்மந்தனின் சமயங்களையும் ஒப்புக்கொண்ட சைவன், சம்மந்தனைப் பார்ப்பனன் என்று ஒப்புக்கொண்டசைவன் ஒருவன்தன்னைசூத்திரன்அல்ல என்றுசொல்லிக்கொள்ள யோக்கியதை உண்டா? என்று நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

அதுபோலவே நந்தனை ஒப்புக்கொண்டஒருவன் அதுவும் நந்தன் பறையன் அவன் எங்கள் ஜாதி" என்று ஒப்புக்கொண்ட ஒருவன் தன்னை பறையன் அல்ல என்றும், தான் தீண்டாதவன் அல்ல என்றும் சொல்லமுடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். உத்தியோகப்பார்ப்பனனுடனும், எலக்ஷன் பார்ப்பனனுடனும் சண்டை போடுவதற்கு வேண்டுமானால் ஏதாவது தந்திரம் பேசலாம். "தமிழ்நாட்டில் ஆரிய ஜாதியில்லை" என்று சொல்லலாம். சாமர்த்தியமாய் விவகாரம் செய்யலாம். ஆனால் தன்னை இந்து என்றோ, சைவன் என்றோ, வைணவன் என்றோ சொல்லிக்கொண்டு வேறு ஒருவனிடம் விவகாரம் பேசி தன்னை சூத்திரவகுப்பிலிருந்தும், பஞ்சம வகுப்பிலிருந்தும் விலக்கிக்கொள்ளமுடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். [சற் சூத்திரன் என்று சொல்லிக்கொள்வதால் தப்பித்துக்கொள்ளமுடியாது.]

காந்தி சுயராஜ்யத்தில் நமது நிலைமை.

திரு காந்தியால் வரும்படியான சுயராஜியம் அது எப்படிப்பட்டதானாலும் எவ்வளவு பயனுள்ளதானாலும், பயனற்றதானாலும் இந்துமதத்தைக்காப்பாற்றும் சுயராஜ்யமாக இருக்கும் என்பதில் மாத்திரம் சந்தேகப்பட வேண்டியதில்லை.

அதுவும் எப்படிப்பட்ட இந்துமதமென்றால் வர்ணாசிரம தர்மத்தோடு கூடின பரம்பரை ஜாதித்தொழிலையும் வகுப்புப்பழக்க வழக்கங்களையும் நடத்திக்கொடுக்க முயற்சிக்கும்படி-கட்டாயப்படுத்தும்படியான இந்துமதத்தைக்காப்பாற்றும் சுயராஜ்யமாய்த்தான் இருக்கும் என்பதில் யாரும் எவ்வித ஆக்ஷேபணையும் கொள்ளவேண்டியதில்லை.

ஆகவே திரு. காந்தியின் சுயராஜ்ய காலத்தில் யார் யார் இந்துவோ அவர்கள் எல்லோருமே இந்த மூன்று ஜாதியின் கீழ் தான் வரவேண்டும். அதாவது பிராமணன், சூத்திரன், பஞ்சமன் ஆகிய விதியில் தான் வரவேண்டும். அந்தக்காலத்தில் இந்துக்கள் என்பவர்கள் இன்றையதினம் 'சுயராஜியமில்லாத காலத்தில் அனுபவிக்கும் உரிமையும், பேசும் உரிமையும், எழுதும் உரிமையும், கேட்கும் உரிமையுங்கூட ஒரு நாளும் அனுபவிக்க முடியாது என்பதை கெட்டியாய்மனதில் இருத்துங்கள். ஏனெனில் காந்தி சுயராஜ்ய காலத்தில் மத சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் ஜாதி சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் பேசுவார்கள் எல்லாம் சட்டப்படி 124-A, 153-A என்பது போன்ற துரோக சட்டங்களின் கீழும் துவேஷச் சட்டங்களின் கீழும் குற்றமாகக்கருதி தண்டிக்கப்படவேண்டியதாகிவிடுவார்கள்.

அன்றியும் ஒரு மனிதன் தான் "இந்து மதத்தை விட்டு வெளியில் போய் விடுகிறேன்" என்பதும் வெளியில் போவதும் குற்றமானதாகவே கருதப்பட்டாலும் கருதப்படலாம். அதற்காக சட்டமுமியற்றப்படலாம். ஏனெனில் இந்துமத கோட்பாட்டின் படி ஒரு மனிதன் பிறவியில் எந்த மதத்தில் எந்த ஜாதியில் பிறந்தானோ அந்த மதத்தில் அந்த ஜாதியில் தான் சாகின்ற வரையில் இருந்தாகவேண்டும். அதனால் தான் திரு. காந்தியும் "நான் கோரும் சுயராஜ்யம் வந்தால் கிறிஸ்து மதத்திற்கு பிரசாரமாகிய ஆஸ்பத்திரி பள்ளிக்கூடம் முதலியனவை வைத்து நடத்தும் பாதிரிமார்களை யெல்லாம் இந்தியாவை விட்டு விறட்டி விடுவேன்" என்று துணிந்து சொன்னார். அந்தப்படி அவர் சொன்னதானது வேண்டுமென்று சொன்னதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. மதம் மாறுவது அவ்வளவு இழிவானதென்றும் பாபமானதென்றும் அதற்கு இடங்கொடுப்பது அவ்வளவு தோஷமானதென்றும் இந்து மத தத்துவத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. திரு. காந்தியவர்கள் கிறிஸ்துவர்களைச் சொன்னது போல் மகமதியர்களைச் சொல்லாததற்குக் காரணம் மகமதியர்களிடத்தில் இருக்கும் "முரட்டுத்தனத்தின்" காரணமான பயமே யொழிய மற்றபடி மகமதியர்களை மதமாற்றம் செய்ய அனுமதிப்பது குற்றமாகாது என்கின்ற எண்ணத்தாலல்ல. ஆகையால் காந்திய சுயராஜ்யமென்பது இந்துக்களில் சூத்திரர் என்னும் தலைப்பின் கீழ் வரும் மக்களுக்கும் பஞ்சமர் என்னும் தலைப்பின் கீழ் வரும் மக்களுக்கும் மிகவும் ஆபத்தானது என்பதை யாரும் மறந்து விடாதீர்கள்.

திரு. காந்தியவர்கள் பல தடவைகளில் சொல்லியிருக்கும்சமத்துவ தத்துவத்தின் விளக்கத்தையும் நினைப்பூட்டிக்கொள்ளுங்கள். அதாவது,

"சமத்துவமென்பது ஆத்துமாவுக்கே யொழிய சரீரத்திற்கல்ல" என்று சொல்லியிருக்கின்றார்.

மற்றும் அவர் 1919-20ல் "தீண்டாமை யொழியாமல் நான் ஒரு நாளும் சுயராஜ்யம் கேட்கமாட்டேன்" என்றும் சொன்னதோடு, "இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாததற்கு முன் நான் சுயராஜ்யம் கேட்கமாட்டேன்" என்றும் சொன்ன தோடு "இவை இரண்டும் ஒழியாததற்குமுன் கிடைக்கும் சுயராஜ்யம் நிலைக்காது" என்றும், "நிலைத்தாலும்மக்களுக்குள் இரணகளமாகும்படியான கலகம் ஏற்படும்" என்றும் சொல்லியிருக்கின்றார்.

இப்படிப்பட்ட இவர் இப்போது தைரியமாய்,

"தீண்டாமை ஒழியவேண்டியதும் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் நாட்டை என் வசம் ஒப்புவித்து விட்டு விலகிக்கொள்ளுங்கள். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்" என்று பிரிட்டிஷாரை கேட்கின்றார்.

இதன் அருத்தமென்ன? என்று யோசித்துப்பாருங்கள். ஆட்சி தனது கைக்கு வந்து விட்டால் பட்டாளம் தனது கையில் ஒப்படைத்து விட்டால் பார்ப்பனர்களை பனியாக்களையும் (முதலாளிகளையும்) பட்டாளத்தில் சேர்த்து இராணுவச்சட்டத்தினால் முஸ்லீம்களையும் தீண்டாதார்களையும் அடக்கி ஒடுக்கிவிடலாம் என்கின்ற எண்ணமில்லாமல் வேறு என்ன எண்ணம் இருக்கக்கூடும்? என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே என தருமைச் சகோதரர்களே! தீண்டப்படாதசகோதரர்களே!! தெருவில் நடக்க-குளத்தில் தண்ணீர் மொண்டு குடிக்க-கண்ணில்தென்பட உரிமை இல்லாத சகோதரர்களே!!! நீங்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டுமானால் ஒன்று:— இந்துமதத்தை விட்டு வெளியேறுங்கள். இரண்டு:— முகமதியர்களைச் சாருங்கள். இந்த இரண்டு காரியத்தாலும் நாம் உலக மக்களுக்கே சுயமரியாதை கொடுக்கலாம். மற்றபடி நமக்கு வேறு விமோசனமே இல்லை! இல்லை!! இல்லை!!!

பிரசங்க அறிக்கை.

ஆதிதிராவிடர்களும், சுயமரியாதையும்.

அக்டோபர் 23உ வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு வரதராஜபுரம் மைதானத்தில் திரு. வி. வி. முருகேசம் அவர்கள் தலைமையின் கீழ் திருவாளர்களான அ. பொன்னம்பலனார், காளியப்பனார், குருசாமியார் இவர்களால் அரிய உபந்யாசங்கள் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது என வரதராஜபுரத்து வாசிகள் அறிவிக்கிறார்கள்.

தேவை.

திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் எல்லா விடத்திற்கும் 40 ரூ. சம்பளத்தில் ஏஜண்டுகள் தேவை. அக்டோபர் 31ந் தேதிவரை மனு செய்யலாம்.

வைத்திலிங்கம்,
கிரிடிட் பேங்க் ஆப்
இந்தியா, லிமிடெட், மதுரை

விளம்பரம்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு

1931-௵ O. P. No. 51ல்

பல்லடம் தாலூகா கணபதிபாளையம் மஜரா கைவீச்சு ரங்கப்ப நாயக்கம் புதூர் கோவிந்தசாமி நாயக்கர் மகன் இறந்து போன ராமசாமி நாயக்கருக்கு ஷை தாலூகா உகாயனூர் பொன்னே கவுண்டன் மகன் நாராயணகவுண்டன் 1. மாதப்பூர் மஜரா சிங்கனூர் முத்துக்கவுண்டன் மகன் சுப்பாராயகவுண்டன் 2. இவர்கள் 25—6—28ல் எழுதிக்கொடுத்த புரோநோட்டுப்படி ரூபாய் 350—12—0ம் செலவும் கிடைக்க வேணுமாய் பிராது செய்து ஷை ராமசாமி நாயக்கர் மனைவி கோவிந்தம்மாளால் மேடோவர் பெற்று ஷை கோவிந்தம்மாள் வார்செஸ் று சர்ட்டிபிகேட்டு கொடுக்க வேணுமாய் மனு கொடுத்து 3—11—1931ந் தேதி வாய்தாவில் ஆக்ஷேபணை செய்ய விரும்புகிறவர்கள் நேரிலாவது, வக்கீல் மூலமாவது ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு கக்ஷியாக தீர்மானிக்கப்படும் என்ற சங்கதி அறியவும்.

ஒப்பம்,
A. R. குருமூர்த்தி நாயுடு,
வக்கீல் திருப்பூர்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சிவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

அ இராகவன்,

(முன் தொடர்ச்சி)

மணம்:— ஒரு ஆடவனும், ஒரு பெண்ணும் — இவ்வுலக வாழ்க்கையில் ஒற்றுமையோடும், ஒருவருக்கொருவர் உதவி செய்து, சமத்துவமாய் வாழ இருவரும் மன ஒருமையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தமே திருமணம் என்று வழங்கப்படுகிறது. இத்திருமண விஷயத்தில் பெரிதும் ஆண் மகனுடைய உரிமைதான் கவனிக்கப்படுகிறதே தவிர, பெண்மக்கள் உரிமை கவனிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அப்பெண்டிர் உரிமை முற்றும் பறிக்கப்பட்டு, முன்பின் அறியா ஒரு ஆண் மகனுக்கு அடிமைப்படுத்தப்படுகின்றாள் என்று தான் கூறவேண்டும். பண்டைக்காலத்திலே சைவர்கள்—இல்லை—தமிழர்கள் திருமண விஷயத்தில் மகளிர்களுக்கு சமத்வமான உரிமையை நல்கியிருந்தனர் என்று பல தமிழ் நாட்டறிஞர்கள் சாற்றுகின்றார்கள்.

உயர் திரு. சோமசுந்தர பாரதியவர்கள்,

"வாழ்க்கைத்துணைவரில்லாக்காலத்தில் வந்தபகைவரை எதிர்த்துச்செரு முறையிற் பொருதுமகளிரையும்தேச நன்மை செய்தவுபகாரிகளாகவே தமிழுலகம் போற்றியிருக்கிறது. புறத்துறைகளிற்றோள்வலியாலும், தாளாண்மையாலும்மாணுந்தன்மைக்குரிமைபெற்றியடவராயினோர், தம்மனையறஞ்சிறக்க இல்லத்தையாளும் பெட்புடைமையாற் பேணத்தகும் பெண்டிரைப்பெரிதும் மதித்தும்பாராட்டிப்ரோனல் கடன். இத்தகைபற்றியே மெல்லியலாரைப் பெண்மைத்திறஞ் சிறந்தல் கட்டிப்பெண்டிரென விசுந்து பேணிப் பேசிய தென்ப வான்றமிழ் வாணர்; எனவே தமிழகத்தில் அடிப்பட்ட நல்ல முறைப்பெண்டிர் புருடரோடொக்க நன்கு மதிக்கப்படுவதேயாமென்பது தெளிவாகும். இளமை மணம், மறுமண மறுப்புகளாற் பெண்டிர் பீடிக்கப்படுந் தற்காலக் குறைவுகள் பண்டைத்தமிழ் வழக்கின்றி யிடைப்பிற வரலாறுயெழுந்தவ்வன; கைமை நோற்று ஒற்றியாழுமுயவற் பெண்டிருமல்லேம்; காதலனிறந்ததற்காக நீர்வீழ்ந்தும், நெருப்புப் புகுந்தும் கசப்பான கைமை தவிர்க்க வேண்டும். சிறுமைப்பெண்டிருமல்லேம்; துணைவனுயிர் துறந்தவுதிர்ந்தவுடன் உயிர்தானே கழியுமூதானந்தமுது சீர் முறையுடையேம் நாமென்று, செயலின்றி விருப்பாலுயிர் துறக்கவல்ல கற்பரசிகளிருந்த (அத்தகைய கற்பரசர்கள் எங்கு சென்றனர்? ஆண் பிள்ளை சிங்கங்களுக்கு கற்பெதற்கு என்று கூறும் தற்காலத்திய கொள்கை அக்காலத்திலும் இருந்தது போலும்) தமிழ் நாட்டில் மணவினைப் பொருளுமறியா இளமைக்காலத்தில் மகளிரையவர் விருப்பமறியாமல் மணம் புகுத்தி, வாழ்க்கை மணமறிய மலராமுன் கைமைச்சிறைக்கிரையாக்குவது, அறத்துரைக்கடாதது போலவே தமிழ்முறைக்கு முறணுவதேயாம்" -

என்று மிக அழகுபடக் கூறியுள்ளார். இவைகளிற் பல நமக்கு உடன்பாடில்லா திருந்த போதிலும் இத்தகைய உரிமையாவது தற்காலப் பெண்டிர்க்கிருக்கின்றதா? அவர் தம் உரிமையை நாளடைவில் பறித்துக் கொண்டேமூற்காலத்திய பழைய சுவடிகளில்கூறியிருப்பவைகளைப் புகழ்ந்து கொண்டிருப்பதில் யாது பயன்? இன்று தங்களைச் சிவகாருண்ய சீலர்கள் என்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருக்கும் சைவர்களில்லங்களில் நடைபெறும் திருமணங்கள் எவ்விதமாய் நடைபெறுகின்றன? ஆண் மகன் தனக்கு விருப்பமான பெண் இதுவென்று கூறவும், அப்பெண் அழகுடையவளாய்இருக்கவேண்டும், நகைகள் இவ்வளவு இருக்கவேண்டும், கற்றவளாயிருக்கவேண்டும் என்றெல்லாம் கேட்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்மகளோ வாய் திறக்கக்கூடாது. தமக்கு வரப்போகும் புருஷன் இத்தகையவனாயிருக்க வேண்டுமென்று கூறவோ, தனக்கு விருப்பமான துணைவன் இவனென்று சொல்லவோ, தனக்கு கணவனாய் நிச்சயிக்கப்பட்ட புருஷனைப் பார்க்கவோ ஒரு பொழுதும் முடியாது. அவன் குரூபியானாலும், மூடனேயானாலும், குடிகாரனானாலும் பெற்றோர்களால் ஒருவன் நிச்சயிக்கப் பட்டால், பெண்களால் மறுத்துக்கூற பெற்றோர்கள் இடமளிப்பதில்லை. ஒருசமயம் பெண் சிறிது தைரியங்கொண்டு 'எனக்கு அப்புருஷன் பிடித்தமில்லை' என்று கூறிவிட்டாலோ, அம்மம்ம! அப்பெண் தாய் தகப்பனின் ஏச்சினாலும், உறவினர்களின் வசைச் சொல்லினாலும் படுந்துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. பல பெண்மணிகள் இத்தகைய சந்தர்ப்பங்களில் தம் வீட்டைத் துறந்தோ, தற்கொலை புரிந்தோ கொள்கின்றனர். இத்தகைய செயல் பல நம் நாட்டில் நடைபெறுவதைக் கண்டும், கேட்டும் வருகின்றோம், இக்கொடுமைகளெல்லாம் நம் நாட்டு மக்களுக்கு சிவகாருண்யச் செயலாகத் தெரிவது நமது நாட்டின் துரதிருஷ்டம் என்றே கூறவேண்டும்.

இளமை மணம்:- "இளமை மணம் கொடிது, கொடிது" என்று கூப்பாடு போடும் தொண்டர்கள் நம் நாட்டில் பலருண்டு. ஆனால், அவர்கள் தம் மத சாஸ்திரங்களுக்கும், தம் வீட்டிலுள்ள வைதீக கிழங்களுக்கும் பயந்து இக்கொடிய செய்கையை யொழிக்க முன்வரா திருக்கின்றனர். இவ்விளமை மணம் யொழிந்துவிட்டால் நம் நாட்டு விதவைப் பெண்களின் தொகையும் குறைந்துவிடும். பொதுவாக நம் நாட்டில் இளமையில் இறந்துபோவோர் தொகைதான் அதிகமாயிருக்கின்றது. ஆகையால் தான் இளமை மணம் குறைந்தால் விதவைகளாவோர் தொகையும் குறையுமென்று சொல்லுகின்றோம். இதை யறிந்து தான் தோழர் ஹரிபிலதாஸ் சாரதா அவர்களால் 'சாரதா சட்டம்' என்னும் "இளமை மணத்தடுப்புச்சட்டம்" ஒன்றை நிறைவேற்றினர். அதை அமுலுக்குக்கொண்டுவராது செய்ய நம் வைதீகப்பேய்கள் செய்யும் சூழ்ச்சிகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இவ்வைதீகக்குடுக்கைகளுக்கு நம் நாட்டிலுள்ள பெண் மக்கள் முன்வந்து தக்க பாடம் கற்பியாமல் காலாவிருப்பதினாலே இவர்களின் ஆர்ப்பாட்டம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'இஸ்லாத்தில் பால்ய விவாகம் இல்லை"யென்பது தெளிவாயிருந்தும், சில முஸ்லீம் தோழர்கள் இச்சாரதா சட்டத்தை ஒழிக்கத்துணைபுரிவதுதான் விந்தையினும் விந்தையாயிருக்கிறது. இவ்விளமை மணத்தினால் எத்தனை உயிர்கள் துன்பமடைகின்றன. எத்தனை பெண்கள் மரணத்திற்காட்படுகின்றார்களென்று நாம் சிந்திப்பதே கிடையாது. பத்துவயதுப்பெண்ணை மணஞ்செய்த முப்பது வயது ஆடவன் எவ்வாறு அப்பெண்ணினிடம் நடந்து கொள்வான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எத்தனையோவிடங்களில் இப்பெண் குழந்தைகள் தம்காலிப புருஷனின் மிருக இச்சைக்காட்பட்டு உடனே இறந்திருக்கின்றனர். பத்திரிகைகள் ஒழுங்காய் படிக்கும் நண்பர்களுக்கு இது புதிதல்ல, கல்கத்தாவில் இத்தகைய ஒரு சம்பவம் நடைபெற்றதை அறிந்து திரு காந்தியவர்கள் கூட இக்கொடுஞ்செயலைக் கண்டித்துள்ளார். ஆனால் இவ்விளமை மணம் என்னுங் கொடுஞ்செயலைப் பற்றி யாம் கண்டிக்கும் பொழுது "மணம் புரியும் யுவர்களை மாத்திரமல்ல. அன்னோர் பெற்றோர்களைத்தான் பெரிதும் கண்டிக்கின்றேன்." இதைப்பற்றிச்சொல்லும்பொழுது நம் ஜீவகாருண்யக்கோலம்பூண்டோர் "ஐயா! நீங்கள் சொல்லுவது முழுவதும் மெய்யே! ஆனால் இது எமது கொள்கையல்ல, பார்ப்பனர்கொள்கை, சைவத்தில் இளமை மணத்திற்கிடமில்லை. இன்னும் விரிவாய்ச் சொன்னால், தமிழர்களே இவ்விளமை மணஞ்செய்பவர்களல்ல" என்று சாதித்துவிடுவர். ஆனால் நாங்கள் இச்சைவ சமய குரவர்களிலொருவரான திருநாவுக்கரசு நாயனாரின் சகோதரியும், நாயனாரை சமணசமயத்திலிருந்து சைவத்திற்குமீட்ட பெருந்தகைப்பிராட்டியுமான திலகவதியார் இளமையில் விதவையாக்கப்பட்டு சிவாலயத்தில் தேவ அடியாராக இருந்தார்களேயென்று கூறினால், "சுயமரியாதைககாரர்களுக்கு ஆராய்ச்சியில்லை, படிப்பில்லை" என்று கூறுவார்கள் என்பதினாலே நான் அதைப்பற்றி இங்கு விரித்துக்கூறப்போவதில்லை. நம் இந்திய நாடு உஷ்ண பூமி. உஷ்ணத்தினாலும், ஏனைய சில காரணங்களினாலும் தற்சமயம் பெண்கள் 9 வயதிலிருந்தே பூப்பெய்துகின்றார்கள். பூப்பெய்தி ஒன்றிரண்டு ஆண்டுகளிற் சாதாரணமாய் சைவர்கள் வீட்டிலெங்கும் திருமணம் செய்யப்பட்டுவருகின்றது. இது இளமை மணமாகாதா? என்று சைவநண்பர்களை வினவுகின்றேன். பெண்களுக்கு இருபது வயது மட்டும் கல்வி கற்கும் வயது. அதற்குள் நடைபெறும் மணமெல்லாம் இளமை மணமே என்று பல பெண் அறிஞர்கள் சொல்வது கவனிக்கத் தக்கதேயாகும். 10, 11 வயதிலே திருமணஞ் செய்யப்பட்ட பெண்; போதிய கல்வி கற்கச் சந்தர்ப்பம் பெறாதபெண்; உடலின் உள்ளுறுப்புகளெல்லாம் முற்றாய் வளர்ந்து உடல் நலம் பெறாத பெண்; புருஷனின் கட்டுறவால் இளமையில் ஒளிமழுங்கி, உடல் உரம் குன்றி, தம் இருபது வயதிற்குள் 5, 6 பிள்ளைகளுக்குத் தாயாகி, குடும்பக் கவலை, மக்களின் தொல்லை முதலிய பலவற்றாலும் கஷ்டப் படுவதோடு, எலிக்குஞ்சுகள் போன்றுஇளமையில் பெற்ற தம் மக்கள் அடிக்கடிநோயால் கஷ்டப்பட நேர்வதால், அப்பொழுதெல்லாம் தாம் பத்தியம் காத்து கஷ்டப்பட்டு, புல் தடுக்கினும் பொத்தென்று கீழே விழுந்து, இறந்து போகக்கூடிய பலவீனஸ்திதிக்கு பெண்களையாக்குவது சிவகாருண்ய நெறியா? பிள்ளை பெறுவதை இயன்ற மட்டும் தடுக்கச் சொல்பவர் ஜீவகாருண்யமற்றவர்களா? வைதீகராகிய திரு. காந்தி கலியாண சுந்தரனாரும் கூட "இயற்கை முறையில் பிள்ளைகள் அதிகம் பெறுவதைத் தடுத்தல் வேண்டும்" என்று கூறி வருகின்றார்கள். இயற்கை முறையில் தடுப்பவர் தடுத்துக் கொள்ளட்டும். அவ்வாறு தடுக்க முடியாதோர் செயற்கை முறையிலும் தடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறுபவர்கள் சிவகாருண்யமற்றவர்களா? அன்பர்களே! உண்மையில் ஒரு பிள்ளை பெறுவதில் பெண்மக்கள் எத்தனை கஷ்டப்படுகிறார்களென்பதை நன்கு அறிந்தால் நிச்சயமாகவே இப் பெண்மக்களை இக்கஷ்டத்திலிருந்து மீட்பதே ஜீவகாருண்யமென்று உணர்வீர்கள். பல

நண்பர்களை யான் பார்த்திருக்கின்றேன்; தம் சோதரி, மனைவி பிரசவ வேதனையால் போடும் சத்தத்தைக் கேட்டு யாறு போன்று கண்ணீர் சிந்துகின்றார்கள் பெண்டிர் பிள்ளைகள் சுருக்கமாகப் பெற்றால், பிள்ளைகளைச் செம்மையாய் வளர்க்கவும், அவர்களுக்குப் போதிய கல்வியளிக்கவும் கூடும். பிள்ளைகளை முற்றும் பெறாதவர்களே உலகத்தியன்ற தொண்டாற்றவும் தமக்குரிய உடல், பொருள், ஆவி மூன்றையும் எளிதில் தத்தம் செய்யவும் கூடும். "பிள்ளை பெறுவதைத் தடுத்து வாழும் முறையை" அறியாத நம் முன்னோர்களிற் பலர் இயற்கைக்கு முற்றும் முரணான பிரமச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டு கஷ்டப்பட்டு அலைந்தார்களென்பதை நாம் நன்கு அறிய வேண்டும். இவைகளொன்றையும் கவனியாது தம் வாழ்க்கையில் நடந்து வருஞ் செயல்களே-தம் முன்னோர் நடந்து வந்த நடத்தைகளே ஜீவகாருண்யச் செயலென மூடநம்பிக்கை கொண்டு இறுமாப்புடன் ஜீவகாருண்ய நெறியின் தன்மையை யறியாது பிதற்றுவோர் நமது நாட்டுச் சைவர்களே என்பது புலனாகும்.

(தொடரும்.)

[6ம் பக்கத் தொடர்ச்சி]

கள் குனிந்து கொண்டே கூட்ட வேண்டியதான ஒரு குட்டையான கைவிளக்குமாற்றால் கூட்டிக்கொண்டிருந்ததற்கு பதிலாக, நின்று கொண்டே கூட்டும்படியான மாதிரியில் நீளமான காம்புள்ள ஒரு நெட்டை விளக்குமாற்றைக் கொடுத்து அதில் கூட்டும்படி சொன்னாராம். அத் தெருக்கூட்டிகள் அந்த நெட்டைவிளக்குமாற்றை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிட்டார்களாம். அதற்கு, அந்த சேர்மென் காரணம் கேட்டபோது நெட்டை விளக்குமாற்றில் கூட்டிய வழக்கம் தங்களுக்கு கிடையாதென்றும், இன்று புதிதாய்மாற்ற முடியாதென்றும் சொன்னதோடு, கட்டாயப்படுத்தினால் அது எங்கள் மதத்திற்கு விரோதமான காரியமானதால் வேலையையாவது விட்டுவிடுவோமேயொழிய, நெட்டை விளக்குமாற்றைத் தொடமாட்டோம் என்றும் சொல்லிவிட்டார்களாம்.

இந்துக்களுக்குள் உள்ள ஜாதிப்பிரிவுகள் எல்லாம் மதசம்பந்தமாகவும், தொழில் சம்பந்தமாகவும் இடசம்பந்தமாகவும், தேச சம்பந்தமாகவும்தான் பிரிக்கப்பட்டிருக்கின்றனவேயொழிய அவற்றின் ஒன்றுக்காவது அறிவுக்கும், அனுபவத்திற்கும் பொருத்தமான காரணங்கள் இல்லவேயில்லை. (தொடரும்.)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறது. அபூஹனிபேயும் மற்ற நான்கு பெரிய இமாம்களும் வாழ்க்கையின் வசியத்திற்குத் தகுந்தபடி எப்பொழுதும் புதுச் சட்டங்களை, அவைகள் கட்டளைகளுக்கு மாறுதலாயிருந்தாலும் கூட ஏற்படுத்திக் கொண்டார்கள். அதே மாதிரியான செய்கையை நாமும் மத விஷயத்தில் பின் பற்றியிருந்தால், நவீன முற்போக்கிற் கேற்றவாறு இஸ்லாமும் கொண்டு வரப் பட்டிருக்கும். ஆனால் குருமார் அவ்விதம் செய்யவில்லை. அவர்கள் கண்மூடித்தனமாய் பழைய விதிகளையே பின் பற்றி வந்திருக்கின்றார்கள்.

இஸ்லாமின் இச்சட்டங்கள் அந்தக் காலத்திற் கேற்றவாறு மாத்திரம் ஏற்படுத்தப் பட்டன வென்பது அவர்களுக்கு விளங்கவில்லை

காலமாறுதலுக் கேற்றவாறு சட்டங்களும், மதநம்பிக்கைகளும் கூட மாறுதலடைய வேண்டு மென்பதையும், மற்றபடி அபிவிருத்தி காண முடியாதென்பதையும், அத்தகைய சீர்திருத்த மில்லாத நிலைமையில் வாழும் ஒரு கூட்டத்தார் மற்றவர்களுக்கு அடிமைப்பட வேண்டு மென்பதையும் அவர்கள் உணரவில்லை.

ஒரு பழைய பத்ஙாவிற்குக் கட்டுப்பட்டிருப்பது சலனத்தையும்; அபிவிருத்தியையும் தடுக்கிறது.

அது அந்தப் புராதன கால சமூக, பொருளாதார, லௌகீக, இராஜீய கொள்கைகளோடு கட்டுப்பட்டதாயிருக்கிறது. சலனமில்லாத எதுவும் பிற்போக்கடைதல் திண்ணம்.

இது தான் வாழ்க்கையின் பொது சட்டம். வாழ்க்கையே முக்கியமானது; பழக்க வழக்கங்கள் அலங்கார மட்டுந்தான்.

சில பழக்க வழக்கங்கள் கடவுட்டன்மை வாய்ந்தனவா யிருக்கலாம். ஆனால் அவைகளின் கடவுட்டன்மை அவைகளினுபயோகத்தைப் பொறுத்திருக்கிறது.

பழங் கதைகள் வாழ்க்கைக்குத் தீமை விளைவிப்பதா யிருந்தாலவைகளை வைத்திருப்பது முட்டாள் தனம்.

பழைய மனப் பான்மையையும், பழைய பழக்க வழக்கங்களையும் வைத்துக் கொண்டு நாம் ஜீவித்து முன்னேற்றமடைந்து பலவான்களாயிருக்க முடியுமா?

நாம் ஐரோப்பியரது கலைகளை மட்டும் எடுத்துக் கொண்டு அவர்களது பகுத்தறிவும் மார்க்கத்தை விட்டுவிட முடியுமா?

அவ்விரண்டும் ஒன்றினின்று ஒன்றைப் பிரிக்க முடியாதவை.

கலப்பற்ற பகுத்தறிவின்மேல் கட்டப்பட்ட ஒரு சாஸ்திரீய படிப்பு முறையை ஐரோப்பா இப்பொழுது கையாண்டு வருகிறது.

இங்கு இந்த 1926-ம் வருடத்தில் ஒரு பழம் புஸ்தகத்திலுள்ள பழைய ஸ்லோகத்தின்படி ஒரு குரு தீர்மானித்து நடத்துகிறார். இஸ்லாமிய தேசங்களில் இராஜீயம், நாகரீகம், வாழ்க்கை, உடை, உணவுங்கூடசமய சட்டங்களாளாளப் படுகின்றன.

பல நூற்றாண்டுகட்கு முன்னுள்ள இமாம்களது தீர்மானத்தில் நாம் மூழ்கி விட்டோம். இஸ்லாமிய தேசங்களில் மத சம்பந்தமான பழக்க வழக்கங்களே முன்னேற்றத்திற்கு முக்கிய தடைகளாயிருந்து வந்திருக்கின்றன.

வர வர இராஜீய, சமூக வாழ்க்கை மட்டுமன்றி ஆத்மார்த்த வாழ்க்கையும் தயங்கி விட்டது. எல்லா மதங்களின் லட்சியமாகிய நன்னடத்தையுங்கூட க்ஷீணித்து விட்டது. உதாரணமாக சமூகக் கட்டுப்பாட்டில் பல மனைவியரை மணத்தலென்ற விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். யூதர்களது மதமாகிய ஜூடேயிசமும், கிறிஸ்து மார்க்கமும் மதக்கோட்பாட்டுப்படி பல மனைவியரை மணத்தலைத் தடுக்கவில்லை. ஆயினும் கிறிஸ்துவர்கள் ஐரோப்பாவின் சமூக அவசியத்திற்கொப்ப அதைச் சீர்திருத்திக்கொண்டு பலதார மணத்தைத் தடுத்துவிட்டார்கள். ஆகவே கிறிஸ்துவமதத்தின் பழைய சட்டங்களுக்கு ஒப்ப நடக்காமல், ஐரோப்பா தன்னுடைய புதிய கொள்கைகளுக்கொப்ப நடக்கும்படி கிறிஸ்துவ மதத்தைச் செய்து விட்டது. அவ்வாறின்றி இஸ்லாமியர் நம்முடைய சட்டகர்த்தர்களின் மூட வைராக்கியத்தைத் தடுத்திருப்பதே கிடையாது. இஸ்லாமிய சரித்திரத்திலேயே மகமதியர்கள் காலதேச வர்த்தமானத்திற்குத் தக்கபடி தம்மைச் சீர்திருத்திக் கொண்டு போனவர்களேயல்ல. பழைய பழக்கவழக்கங்கள் மகமதியரை ஸ்தம்பிக்கச்செய்து விட்டன."

இந்தியா.

நவீன துருக்கியின் சீர்திருத்தக்காரரது வார்த்தைகளை இவ்வளவு விரிவாயெடுத்தெழுதியது அவை நம் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கும் போலித் தேசிய, சமய வாதிகட்குத் தகுந்த சரித்திர பூர்வமுமான பதிலாயிருப்பதினாலேதான். மேற்கண்டவைகளில் இஸ்லாம் என்பதை இந்து என்று மாற்றிவிட்டால் மூடப்பழக்க வழக்கங்களை சுருதிஸ்மிருதிகளிலிருந்து ஆதரிக்கும் நமது, படித்தும் பயனிலாராஜா பகதூர் ஆச்சாரி, சத்தியமூர்த்தி போன்றவர்கட்கு அவை தகுந்த சவுக்கடியாகும். உலகிலுள்ள முக்கிய மதங்களுள் இறுதியாய்த் தோன்றிய மதக்கொள்கைகளையே அவர்களவ்வாறு கண்டிப்பார்களானால் முதன் முதலாகத் தோற்றுவிக்கப் பட்டதும், காலவரையறைக்குள் அடங்காததுமான சாஸ்திரங்களிலுள்ள சுலோகங்களிலிருந்து சாரதா சட்டத்தை எதிர்ப்பது எவ்வளவு அறிவீனம்! இத்தகையோர் மலிந்து தேசிய வாதிகளாய்க் கருதப்படும் நாடு எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? இத்தகைய மக்களை ஈன்ற இந்தியத் தாய் பன்னூறாண்டுகளாய் அடிமை வாழ்விலிருப்பது ஒரு ஆச்சரியமேயல்ல. இனியும் விடுதலைக்கு எத்தனை ஆண்டுகள் செல்லவேண்டுமோ என்ற ஆசங்கையே மேலிடுகின்றது. அறிவென்பது யாவரிடத்திலுமிருக்கப் பட்ட ஒன்று. அதனை உபயோகிக்காமல் ஒவ்வொருவரும் மற்றொருவர் கூறியதைப் பகுத்தறிவின்றி ஒப்புக்கொள்ளுதலெவ்வாறு பொருந்தும்?

மேலே கூறியபடி தேச சரித்திரங்களை படிப்பது நேரப்போக்கிற்கன்று. ஐரோப்பியரை முதலில் துருக்கியர் ஜயித்ததற்கு காரணமென்ன? பின்னர் அவ்வாறு ஜயிக்கப்பட்ட ஐரோப்பியரால் அவர்கள் முறியடிக்கப்பட்டதற்குக் காரணமென்ன? என்பவற்றை நாமாராய்தல் வேண்டும். துருக்கியர் இஸ்லாம் மதத்திற் சேர்க்கப் பட்ட பொழுது அம்மதமானது அக்காலத்திற்குத் தக்கதாயும், தனக்கு முன்னுள்ள மற்ற மதங்களின் குற்றங் குறைகளை நீக்கியதாயும், அக்காலத்தில் இருந்த முற்போக்குடையதாயுமிருந்தது. மகமது நபி கூறியபடி "யுத்தத்தில் உயிர்பிழைத்தால் கீர்த்தியோடு கூடிய ஜெயம். மடியின் சுவர்க்கம்" என்பதையும், "எல்லா முஸ்லிம்களும் சகோதரரென்பதை அறியுங்கள்" என்பதையும் அவர்கள் கடவுள் வாக்காய் நம்பியதால் வீரமும், ஒற்றுமையுமதனாலேற்படும் தைரியமும் அவர்கட்கிருந்தன. பெண்கள் சொத்துரிமை முதலிய மற்ற மதஸ்தரிடம் காணப்படாத முற்போக்குடைய சட்டங்களையும் அவர்களனுசரித்தார்கள். இச்சட்டமொன்றே மனிதனை எவ்வாறு வீராக்குமென்று நாம் தெளிந்து கொள்ளலாம். இத்தியாதி காரணங்களாலேயே மகமதியர் அந்த நாட்களில் அவ்வாறு வெற்றி பெற்றனர். ஆனால் கால தேச வர்த்தமானத்திற்குத் தக்கபடி தங்கள் மதக்கொள்கைகளையும், சட்டங்களையும் திருத்தி யமைத்துக் கொள்ளாது "தங்கள் சாஸ்திரங்களில் ஒரு எழுத்தையாவது மாற்றக்கூடாது, உலகமுள்ளவும் அவைகள் ஊர்ஜிதம், இஸ்லாமைத் தழுவாத ஒவ்வொருவரும் காபீர்" என்ற மூட நம்பிக்கையும், அந்நம்பிக்கையைப் பொறுத்த செய்கைகளுமே அவர்களை, மதத்தையும், சட்டத்தையும், சகோதரத்துவத்தையும், அறிவு வளர்ச்சி முறைகளையும் காலத்திற்குத் தக்கபடி மாற்றிவந்த மேனாட்டார் ஜயிக்கும்படியாயிற்று. இதனையே கெமாலும் அவர் கூட்டாளிகளும் ஆராய்ந்து கண்டு தீயவைகளையகற்றி, நன்மை பயக்கக்கூடியவைகளைச் சேர்த்து மேனாட்டாரும், தம் நாட்டை இப்பொழுது கௌரவிக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டனர். வெள்ளையருடையவும், கிரிகோரியின் வருஷக் கணக்கும், ஞாயிறு விடுமுறையும், லாட்டின் எழுத்தைக் கைக்கொண்டதும், கிறிஸ்துவ மதத்தை அனுஷ்டிக்கப்போகும் மனப்பான்மையோடு கூடியவையல்ல; எந்தெந்த நாட்டினரது எந்தெந்த அனுஷ்டானம் நவீன நாகரீக முற்போக்கிற்குச் சாதகமாயிருக்கின்றதோ, அதனைக் கைக்கொள்

ளவேண்டுமென்ற நோக்கத்தோடு தான். மேனாட்டிலெல்லாம் ஞாயிறு விடுமுறை நாளாயிருக்கும்பொழுது, துருக்கிமட்டும் பழையபடி வெள்ளியையே அவ்வாறு கருதிவருமானால் வியாபார நடவடிக்கைகள் எத்தகைய இடைஞ்சல்கட்குட் படுமென்பதனை நாமே யூகித்துக்கொள்ளலாம். இக்கருத்துகொண்டே ஜப்பானியரும் ஞாயிற்றையே விடுமுறை நாளாய் மாற்றிவிட்டனர். இன்னும் ஆகாயக்கப்பலிருந்து போர் புரியும்பொழுது வைதீக இந்துவின் "பன்னிரண்டாறு பஞ்சகச்ச உடை" பொருத்தமுடையதாமா? என்பதனை நாமே கவனித்துக்கொள்ளலாம். இந்தியாவில் இஸ்லாமியப் பிள்ளைகள் சீக்கிரம் படிக்க முடியாமைக்கு அராபி எழுத்துக்களே முக்கிய காரணமென்று இஸ்லாமியரே சொல்லுகின்றனர்.

ஆகவே, நவீனதுருக்கி நமது நாட்டினருக்கு எவ்வளவு பொருத்தமான வழிகாட்டாகுமென்பது நன்கு விளங்கும். முஸ்தபா கெமால் எவ்வாறு தன் தேசத்துக் குறைகளைக் கண்டு உணர்ந்தாரோ அவ்வாறே நமது மாபெருந்தலைவர் நமது குறைகளை நன்காராய்ந்து நமது சுயமரியாதை இயக்கத்தினைத் தோற்றுவித்து, அதற்குத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து வருகின்றார். அவரது சொற்பெருக்கிலோ, எழுத்திலோ, செய்கையிலோ எதுவும் மனிதனது இயற்கை அறிவுக்கு முரணானதாகக் கண்டுபிடிக்க முடியவே முடியாது. ஒவ்வொரு இந்தியனும முக்கியமாய் தமிழ்மகனும அவற்றை நன்கு ஆராய்ந்து தெளிந்து தேச சரித்திரங்களையும் படித்து, எக்காரணத்தால் தோற்கடிக்கப்பட்ட இந்துக்கள் சந்திர குப்தா, அசோகர், கனிஷ்கா காலங்களில் ஆப்கனிஸ்தானை உட்பட இந்தியாவை ஒரு குடைக்கீழாண்டனரென்றும், பிறகு சங்கரர், சமபந்தர் [மகா] முதலிய பார்ப்பனர் பௌத்த சமண சமயங்களை விரட்டிய பின்னர் மறுபடியும் இந்தியா அடிமை வாழ்வெய்திற்றென்றும் கண்டு, சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைத் தீவிரமாய்க் கைக்கொண்டாலொழிய நாட்டின் விடுதலை, சுயராஜ்யம் எல்லாம் பகற்கனவாகவே முடியும். நவீன துருக்கியர் கொள்கையையே நாமும் கைக்கொள்ளவேண்டும்.

"சண்டமாருதம்."

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைகள் நீங்குவது, அதனினும் கஷ்டம்.

ஜாதியும், மதமும் கற்பனைகளெனத் தெளிதல் வேண்டும். இவைகளுக்கு ஆதாரம், நமது அறியாமையே. இந்தியர், குழந்தை பருவத்தில் ஏற்படுத்திக் கொண்ட சமூக வித்தியாசங்களை, நிகழும் யௌவன பருவத்திலும் வளரச்செய்து கொண்டுவருவது மதீனமே யொழிய வேறில்லை. இவ்விரண்டு சமூக ஸ்தாபனங்களால், உலகில் நிகழ்ந்தவும், நிகழும் தீமைகளை சொல்லொணாது. இவ்விரண்டு சமூக வித்தியாசங்களால், தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை ஏற்படா. நேற்று கான்பூரில், தோளுடன் தோள் கொண்டு, வேலை நிறுத்தப் போரை நடாத்தி, 9 லட்சம் ரூபாயை, வேலைசெய்யாத $2\frac{1}{2}$ மாதச்சம்பளமாகப்பெற்ற, 6000 ரயில்வே தொழிலாளர்களுக்குள், மதப்பித்தாலும், ஜாதி அகங்காரத்தாலும் நேர்ந்த, கொலையைசிந்திப்பவர்களுக்கு மத ஜாதிப்பிசாசுகளின் கொடுமைகள் நன்குவிளங்காமல் இராது. இவ்வாறு பேய்களை ஆதரித்து வரும்வரை, தொழிலாளர்கள், தங்கள் புராதனவிரோதிகளை வெல்லுதலும் அரிது. மேலும், உலக வாழ்வுக்கு ஜாதியும் வேண்டுவதில்லை. சமயமும் வேண்டுவதில்லை. இன்றையதினமே, இந்திய தேசத்து மக்கள் 35 கோடியும், ஜாதியையும், மதங்களையும் யொழித்து விடும் பட்சத்தில், விளையும் பயிர் குறைவுபடப்போவதில்லை. நோய்களும் அதிகப்படப் போவதில்லை நீதியும், ஒழுங்கும், நெறியும், அன்பு, விஸ்வாசமும் மனிதவர்க்கத்தில் இருந்தே தீரும். ஜாதி மதமில்லாத மிருகங்களில், மனித சமூகத்திற்கு வேண்டிய நன்னடக்கைகள் சிறுபான்மையாக, கோடானகோடி வருஷம் இருந்தே வருகின்றன. ஒற்றுமை, தைரியம், பரிதாபம், ஈகை ஆண், பெண் நேசம், குழந்தைகள் பேரில் விஸ்வாசம் முதலிய நற்குணங்கள், மனிதனுக்கு கீழ்பட்ட பல உயிர்களில் காணலாம். மனிதவர்க்கத்தில் வழங்கி வரும் இவ்விதி விலக்குகளையும், கீழ்தரஉயிர்களில் சிலவற்றில் பார்க்கலாம். நீதியும், நெறியும், அன்பும், ஆசையும், ஜாதி மதங்களுக்கு அதீதப்பட்டவையென உணர வேண்டும் - ஆதலின், நீதியும், நெறியும், சுயமரியாதையும், கல்வி கேள்வியும், ஜாதி மதத்தோடு உலகை விட்டு ஓடிப் போகப் போவதில்லை. இவ்விரண்டு வித்தியாசங்களும் ஒழியும் பட்சத்தில் இந்திய உலகில் தோன்றியுள்ள பல சமூக வித்தியாசங்களும் ஒழிந்து, யாவரும் ஒற்றுமையுடன் வாழ முடியும். மூடமத வைராக்கியத்தால் நிகழும் சண்டை சச்சரவுகளும், "தீண்டாமை" என்ற தீமையும் சொல்லாமலே யொழியும். ஜாதியும்சமயமும் அழிவுறின் தொழிலாளர்களுக்குள் ஓர் புத்துயிர் தோன்றி ஒருவருக்கொருவர் யாதொரு சமூக வித்தியாசமுமின்றி, கூட்டுறவுகொண்டு உழைக்கத்துவக்குவர்.

தொழிலாளர்கள் பொருளாதார சமத்துவம் பெற வேண்டுமாயின், மத வைராக்கியத்தையும், சாதி வித்தியாசத்தையும் பற்றறவே யொழித்தல் அவசியமாகும். எண்சாண் உடம்பிற்கு வேண்டியதெல்லாம், நல்லுணவும், நல் உடையும், நல் வீடுமுதலிய நாகரீக வசதிகளேயாம். ஜாதி சமய வித்தியாசங்கள் இருக்கும் வரை இந்திய உலகில் சண்டையும், போரும், மாச்சரியங்களும் உண்டாகிக் கொண்டே வரும். ஆதலின், என் இவ்விரண்டு கற்பனைகளை யொழித்தெறியக் கூடாது? இவ்வுலகில் தக்க மற்று, பரியாறவுண்டு, பெற்றெடுத்த மக்களை சரிவர வளர்த்து, கல்வி கேள்விகளால் மனதை நிரப்பி வாழ்வோமேயாயின், இறந்த பிறகு நற்கதி இருக்கும் பட்சத்தில், ஏன் அக்கதியை அடைய மாட்டோம்? இது தான் சமூகதயிகளின் வாதம்.

ஜாதிப் பற்றும், கடவுள் பக்தியும் யொழிந்தால், உலகில் நீதியும் நெறிமுறையும் தவறி விடுமென்ற எண்ணம் கற்பனையென உணர்க. இவ்வாதம், மூடமக்களும், ஜாதி வெறி கொண்டவரும், சோம்பேரிகளான பணக்காரர்களும் அறியாமற் சொல்லும் வார்த்தைகளென அறிக. நீதிக்கும், நெறிக்கும், ஜாதிக்கும் சமயத்திற்கும், சம்பந்த மொன்றுமில்லையென அறிக. ஜாதியில்லாவூரில் நீதியில்லையா? மதமில்லாவூரில் நெறி இல்லையா? நீதியும், நெறியும் சமூக வாழ்க்கையுடன் பிறந்தவை. ஜாதிச் சமயங்கள் தோன்றுவதற்கு முந்தியே மனிதர் நீதியுடனும், நெறியுடனும் வாழ்ந்து வந்தனர். மதமும் ஜாதியும் மனித வர்க்கத்தில் தோன்றிய பிறகே, முன் வழங்கி வந்த நீதியும், நெறியும் பாழாயின. ஜாதியும் மதமும் அற்ற மிருகாதிகளில், தத்தமக் குரிய நீதியும், நெறியும் வழங்கி வருவதை காண்போமானால், நீதிக்கும், நெறிக்கும், முறைக்கும் ஜாதி ஏன் வேண்டும்? சமயமும் ஏன் வேண்டும்? ஆதலின் மனித வர்க்கத்தில் இடையில் தோன்றிய ஜாதியும், மதமும் ஒழியும் பட்சத்தில் யாதொரு பாதகமும் யாருக்கும் ஏற்படா. இவை இரண்டும் ஒழியுங் காலே, மனித உலகம் முன்னிலும் பதின் மடங்கு நீதியுடனும், நெறியுடனும் நடக்குமென்பதற்கு ஐயமில்லை.

ஈரோடு
மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்.

16-10-31 தேதி மேற்படி ஸ்கூலின் நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் தலைமையில் கூடியது. அது சமயம் கீழ் கண்டவர்கள் நிர்வாகசபை அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவர்.

திவான்பகதூர் திரு C. S. இரத்தினசபாபதி முதலியார் M.L.C.

உபதலைவர்கள்.

திரு. E. V. கிருஷ்ணசாமி நாயக்கர் முனிசிபல் கௌன்சிலர், திரு. K. A ஷேக்தாவுத் சாயபு முனிசிபல் சேர்மன்.

காரியதரிசி.

திரு. M சிக்கைய நாயக்கர், முனிசிபல் கௌன்சிலர்.

பொக்களாளர்

திரு. E. V. இராமசாமி.

கமிட்டி மெம்பர்கள்.

திருவாளர்கள், T. M. நாசிம் மாச்சாரி முனிசிபல் கௌன்சிலர் வக்கீல், A. ஸ்ரீகண்டய்யர் வக்கீல், W. D. வெங்கிடாமணராவ், வக்கீல், E. V. நஞ்சப்ப செட்டியார் வக்கீல் லோகல்போர்ட்சேர்மன், M. S. முத்துகருப்பஞ்செட்டியார் முனிசிபல் கௌன்சிலர், T. பச்சமுத்து செட்டியார், P. V. K. வெங்கிட்டரமணசாமி செட்டியார், S. E. G. முகம்மது இப்ராகிம் சாயபு சேர்மன் பெரிய அக்கிராரம், K. K. குசரத்துல்லா சாயபு முனிசிபல் கௌன்சிலர், M K முகமது சுல்தான் சாயபு, A G இராமசாமி நாயக்கர், S, இராமசாமி நாயக்கர், V. V. C R முருகேசமுதலியார், E S. கோவிந்தசாமி நாயடு ஆகியவர்களாகும்.

1 லக்ஷம் இனாம்.
நவம்பர் முதல் தேதி நடைபெறும்.

அகிலஇந்திய நூல் நூற்போர் சங்கத்தார் வெளியிட்டிருந்தபடி நூல் நூற்கும் இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்குஒருலக்ஷ ரூபாய் கொடுக்கப்படும என்ற பந்தயம் சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்தில் நவம்பர் முதல்தேதி நடைபெறுமென்றும், அதில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் 31-ந்தேதிக்குள் இயந்திரங்களை அனுப்பிவிட வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் பரீக்ஷகர்கள் பார்வையிடும்போது இயந்திரத்தில் வேலைசெய்து காட்டுவதற்காக நவம்பர் முதல் தேதியே ஆசிரமத்திலிருக்க வேண்டுமென்றும் அகிலஇந்திய நூல்நூற்போர் சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

ஆண் பெண் தன்மையில் ஏற்படப் போகும் மாறுதல்

பொறுப்பற்ற மாதூர் பிதுர்த்தன்மை.

திரு பெர்டிரண்டு ரஸல் சமீபத்தில் ஒரு புதிய புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அதில் நவீன சாஸ்திரிய சமூகத்தைப் பற்றிய விவரங்களில் அடியில் காணப்படுவன கவனிக்கத்தக்கன:—

ஆண்களில் நூற்றுக்கு 5 பேர் மட்டும் கர்ப்பம் தரிக்கச் செய்யும் சக்தியுடையவர்களாயிருப்பார்கள். மாதர்களில் நூற்றுக்கு 25 பேர் தான் கர்ப்பம் தரிக்கும் தன்மையுடையவர்களாயிருப்பார்கள். மற்ற ஆடவர், பெண்டிர் இருபாலாருக்கும் மலட்டுத் தன்மை உண்டாக்கப்பட்டு விடும். இதனால் மாதூர்த் தன்மை பிதுர்த் தன்மைகளை இழந்த ஆண்பெண்களுக்கும் சம்போக வின்பம் இல்லாமற் போய்விடாது.

பிரஜா உற்பத்தி மார்க்கத்தில் மிகவும் கடுமையான விஞ்ஞான சாஸ்திரிய முறை அநுஷ்டிக்கப்படுமாதலால், தாய் தகப்பன்மாருக்கும் தங்கள் பிள்ளைகளைத் தெரியவுமாட்டாது, தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமுமிராது. இவ்வகையான விஞ்ஞான முறை பின்னும் அதிகமாக விருத்தி செய்யப்பட்டு, ஜனிக்காத சிசு சில மாதங்கள் வரையிலாவது பிரத்தியேகமான அடைகாப்பில் வைக்கப்படக்கூடும். இதனால் தாய்க்குங்கூட தனது குழந்தை இன்னதெனத் தெரியவராது.

மேற் கூறியவை யாவும் நடக்கக்கூடியதென ஒப்புக்கொண்டபோதிலும், நூற்றுக்கு 5 வீதம் கருவுண்டாக்கும் ஆடவருக்கு நூற்றுக்கு 25 வீதம் கருத்தரிக்கக்கூடிய பெண்களிருப்பது யாங்கனம் கூடுமென ஓர் ஐயப்பாடு நிகழ்கின்றது.

ஆனால் எந்தப் பெண்ணும் எந்த ஆணுடனும் எத்தனை காலத்துக்கு வேண்டுமென்றாலும் கூடிக் குலாவியிருக்கலாம் என்று இனி வருங்காலத்து விஞ்ஞான உலக ஜனசமூக விதி மாற்றப்படுமாகையால், மாதூர் பிதுர்த் தன்மையிலேற்படும் வித்தியாசங்கள் மானிட சுகாநுபாவத்தைப் பாதிக்க மாட்டாது. (சண்டமாருதம்.)

சமூக சீர்திருத்தக்கூட்டம்.

2-10-31ந்தேதி வெள்ளிக்கிழமை கோலகஞ்சார்சினிமாஹாலில் பொது ஜன ஆதரவில் சமபந்திபோஜனமும், அன்றிரவு சமூக சீர்திருத்தக் கூட்டமும் நடைபெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதை கர்ணபூஷணம்.

—:0:—

சென்னை பெரம்பூர் பாரக்ஸ் அலக்ஜாண்டர் தெருவு T. பிளாக் நெ. 2 வது இல்லத்தில் திருவாளர் செங்கா தாம் அவர்கள் சிரேஷ்ட புதல்வியின் கிருஷ்ணம்மாளுக்கும், பாலையம்மாளுக்கும் 11-10-31ந் தேதி கர்ணபூஷணம் இனிது நடந்தன. அச்சமயம் சென்னை பொன்னூர் திரு. மாமதுர கவி, வி. வி. முருகேச பாகவதரவர்களாலும், கோலார் தங்கவயல், திருவாளர் டி. ஆர். அய்யாக்கண்ணு மேஸ்திரியார் அவர்களாலும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும், கர்ணபூஷணத்தைக்கண்டித்தும் பண்டைய மூடபழக்க வழக்கங்கள் ஜனசமூதாயத்தின்கண் இன்னும் தாண்டவமாடுகின்றதை அறவே ஒழிக்கவும், இக்கன முறையை சீராய் கையாட பெரிதும் கடமைப்படவேண்டுமென்றும் இருவரும் சுமார் நான்கு மணிவரையிலும் கேட்போர் செவிக்கினிய மொழிகளால் நன்கு விளங்கும் வண்ணம் தகுந்த ஆதாரத்துடனும் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் திருவாளர் கி. ஆர். ஏமுர்த்தவாசகம் அவர்களால் முடிவுரை கூறி பெருத்த கரகோஷத்துடன் சந்தோஷகரமாக முடிவாயின என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தாயில்பட்டி.

தாயில்பட்டி என்னும் கிராமத்தில் சுயமரியாதைச் சங்கம் ஒன்று நிறுவி சுயமரியாதைப் பிரசாரம் செய்வதை முன்னிட்டு சுயமரியாதைக்காரர்கள் அவ்வூர் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்றும், அவ்வூர் கடைகளில் அவர்களுக்கு எவ்வித சாமான்களும் கொடுக்கக் கூடாதென்றும் இவ்வூரிலுள்ள காங்கிரஸ்காரர்களென்பவர்களால் பிரசாரம் செய்துவரப்படுகின்றதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதுரை இயற்கைமத சங்கம்.

11-10-31ந் தேதி மாலை 4 மணிக்கு இச்சங்கம் திரு எம். எஸ். நாடார் பி. ஏ. பி. எல். அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஆசிரியர் கே. சையத் அப்துல்கபூர் சாஹிப் அவர்கள் "இயற்கை மதம்" என்பதைப்பற்றி சுமார் இரண்டரை மணி நேரம் சொற்பொழிவாற்றினர். அதன் பின் சங்க அங்கத்தினர்கள் இச்சங்க அபிவிருத்திக்காக இன்னும் அதிகமான அங்கத்தினர்களும் தொண்டர்களும் தேவை என்றும், தொண்டர்களுக்கோர் உறுதிமொழிப்பத்திரம் தேவையென்றும் ஓர் பிரேரேபணை கொண்டுவந்தார்கள். அதற்கிணங்க தொண்டர்களின் உறுதிமொழிப் பத்திரத்தைதேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஓர் வேண்டுகோள்.

நம் புனித இயக்கமாம் சுயமரியாதைக் கொள்கைகளைப் பாவச்செய்து மக்கள் மக்களாய் வாழ்வதற்குரிய பல வேலைகளைச்செய்ய, அதற்கான ஒரு கட்டிடம் நீளம் 57½X25' அகலத்தில் கட்டி அதில் இலவசக் கல்வி, கைத்தொழில் பல வர்த்தமான பத்திரிகைகள் வாசித்தல் பல கிராமங்களுக்குச் சென்று சமூகசீர்திருத்தப்பிரச்சாரங்கள் செய்தல் இவைகள் போன்ற பல வேலைகளைச் செய்யவும் உத்தேசித்திருப்பதால் இதனைக்கண்ணுறும் அபிமானிகளும், தாழ்த்தப்பட்டவரின் முன்னேற்றத்தைக்கருதி சதா உழைத்துவரும் சீர்திருத்தவாதிகளும் தங்களாலியன்ற உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என பொன்னூர் சமதர்ம சங்கத்தார் தெரிவிக்கிறார்கள்.

திருக்கோஷ்டியூர் பண்டாரிகளின்படுமோசம்

இவ்வூரில் புரட்டாசிமாதக்கடைசி சனிவாரத்தை முன்னிட்டு அநேகம் செட்டியார்களும், ஆசிகளும், விவசாயிகளுமாக இவ்விடம் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சௌமிய நாராயணப்பெருமாளை சேவிக்கு முகத்தான் வந்துபோந்தனர்கள். செட்டியார்கள் ஒவ்வொருவரும் 5 படி பச்சரிசியும், அதற்குவேண்டிய நெய், வெல்லம், பாசிப்பருப்பு முதலிய சாமான்களுடன் கோவில் பண்டாரிகளிடம் ஒப்புவித்து அதை சர்க்கரைப்பொங்கல் செய்து பெருமாளுக்கு நைவேத்தியம் செய்யும்படி செய்தனர். அதேபோல் விவசாயிகள் 2 படி அரிசியும் அதற்குவேண்டிய சாமான்களுடன் பண்டாரிகளிடம் ஒப்புவித்து அதையும் பெருமாளுக்கு நைவேத்தியம் செய்யும்படி கட்டளையிட்டனர்.

பார்ப்பன பண்டாரிகள் மேலே காட்டிய அரிசிகளிலும் சாமான்களிலும் பாதியை தம் தம் இல்லங்களுக்கு எடுத்துக்கொண்டு மீதமுள்ள அரிசியை பொங்கல் செய்து அதிலும் பாதியை எடுத்துக்கொண்டு மீதியை 5 படி அரிசி கொடுத்தவர்களுக்கு பத்துசாதம் விகிதமும், இரண்டுபடி அரிசி கொடுத்தவர்களுக்கு 4 சாதம் விகிதமும் கொடுத்தனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

வாசகசாலை திறப்புவிழா தாயில்பட்டி.

5-10-31ல் இவ்வூர் அறிஞர் எஸ். ஜி. சீனிவாசன் தலைமையின் கீழ் உயர்திரு. முத்தப்ப நாடார் அவர்களால் "சுயமரியாதை வாசகசாலை" ஒன்று அதிவிமரிசையுடன் திறந்துவைக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாமக்கல்

சக்கரவர்த்தி பட ஊர்வலம்.

6-10-31ந் தேதி செவ்வாய்கிழமை மாலை 4-30 மணிக்கு நாமக்கல் பேட்டை பவுன்கடை திரு முத்துசாமிசெட்டியார் அவர்களுடையவும் கோட்டை ஜனாப் பீரான்சாஹிப்பு அவர்களுடையவும் அரும் பெரும் முயற்சியால் தங்களுடைய ஜனங்களின் ராஜபக்தியை தெரிவிக்கும் பொருட்டு மாட்சிமைதங்கிய இந்திய சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி அவர்களின் படத்தை சப்பரம் ஒன்று புஷ்பங்களால் ஜோடித்து பேட்டை; கோட்டை தெருக்களின் வழியாக எடுத்துச்செல்லப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நோட்டீஸ்.

உடுமலைப்பேட்டை

டி. மு. கோர்ட்டு.

கோவாப்ரேட்டிவ் சொசைட்டி அசிஸ்டண்டு ரெஜிஸ்டர் ஆபீஸ்.

1925-௵ Claim No. 901.

1931-௵ E. P. R. No. 25.

1931-௵ C. M. P. No 803.

பொன்னேரி கோவாப்ரேட்டிவ் கிரடிட் சொசைட்டி பிரசிடெண்டு By கருப்பண முதலியார்—வாதி.

ராமசாமிக்கவுண்டர்—பிரதிவாதி.

ஷை பிரதிவாதிக்கு வாதி தெரியப்படுத்துவது என்னவென்றால் ஷை நெம்பரில வாதி பிரதிவாதியின் சொத்துக்களை ஷை சொசைட்டியின் கடனுக்காக ஏலத்திற்கு கொண்டுவந்து 26-10-31ல் வாய்தாபோட்டிருக்கிறது. மேற்படி தேதியில் மேற்படியார் ஏலத்தில் கோர அனுமதிவேணுமாய் மனுக்கொடுத்து மேற்படி தேதியில் வாய்தா போட்டிருக்கிறது. அன்றய தினம் ஏதாவது ஆக்ஷேபனை யிருந்தால் தெரிவித்துக் கொள்ளவும். அல்லாதவரையில் ஒரு கக்ஷியாய் முடிவுசெய்யப்படும் என்கிற விபரம் அறியவும்.

N. மௌனகுருசாமி நாயுடு,
பி. ஏ., பி. எல்,
வாதியின் அட்வகேட்,
உடுமலைப்பேட்டை.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India, Ltd., Bombay No. 10.

ரோஜா முத்தையா

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
வேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் சுயவர்கள் யார்? ...	0—2—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்	0—8—0
* மாதர் சுதந்திரம். ...	0--10--0
* ஆராய்ச்சி அணிகலம் .	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொகருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு சூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலட்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள்பாலியதேஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் பணம் அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0
விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—
திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
சேவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

காந்தீயம் வருணாச்சிரமத்தை
வளர்ப்பது.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Bookstore,
122, Pitty street, penang

Serojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.
"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சோ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—2—0
தனிப்பிரதி	ரூ.	0—0—6
வெளிநாடு வருட சந்தா.	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

சுயமரியாதை தலைவர் போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு 0—8—0
டஜன் 1-க்கு 6—0—0
$8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ காப்பி 1-க்கு
தபால் செலவுடன் ரூ. 1—4—0
வெளிநாட்டுக்கு ,, 1—8—0
உள். ஷை டஜன் 1-க்கு
தபால்செலவுடன் ரூ. 15—0—0
$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு
வெளிநாட்டுக்கு தபால் செலவுடன் ரூ. 0—13—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 0-11-6 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 15 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

குறைந்த விகிதத்திற்கு போட்டோபிடித்துக்கொடுக்கப்படும்.

A. பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

கைவல்யம் அல்லது கலைக்யானம்.

விலை அணா 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி அயோத்யாகாண்டம்.

விலை அணா 0—8—0.

கிடைக்குமிடம்—குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.